
கல்கி

KALKI 2.6.91 ரூ. 2.50





முயற்சியே வளர்ச்சியின் முதல் படி!

வளரும் உங்கள் முயற்சிக்கு உகந்த வழி காட்டுகிறது சிட்டி யூனியன் பாங்க்

படிப்படியாக உயர்ந்து, உங்கள் லட்சியத்தை அடைய சிட்டி யூனியன் பாங்க் பலவகைகளில் உங்களுக்கு உதவி செய்கிறது.
உங்கள் வளர்ச்சிக்கு உதவும் எங்கள் சேமிப்புத் திட்டங்கள்:

- சேமிப்புக் கணக்கு
- மாதாந்திர சேமிப்புத் திட்டங்கள்
- ரொக்கப் பத்திரங்கள்
- வாமன விஸ்வரூப வைப்புத் தொகை
- காலவரை வைப்புத் தொகை
- அயல் நாட்டில் வாழும் இந்தியருக்கான சேமிப்புத் திட்டங்கள்.

CUB

சிட்டி யூனியன் பாங்க் லிட்.,
பதிவு அலுவலகம்: கும்பகோணம்–612 001.

வளர்ச்சிக்கு - உங்கள் வளர்ச்சிக்கு உழைக்கும் வங்கி.

சிட்டி யூனியன் பாங்க்:
அந்நியச் செலாவணி அங்கீகாரம் பெற்ற வங்கி

MCS/CUB/626


கல்கி
1991 ஜூன் 2
மலர் : 49 இதழ் : 44
பிரஜோத்பத்தி வைகாசி 19

ராஜீவ்

தாமரை என்று பெயர் பூண்ட ராஜீவ் இன்று கோடிக்கணக்கான இந்திய மக்களின் இதயத் தாமரையாகி விட்டார்.

'வெற்றி பெறுவேன்; ஆட்சி அமைப்பேன்' என்று உறுதியாகச் சொன்னவர் இன்று அவரது அரசியல் எதிரிகளின் உள்ளங்களையும் வென்று ஆள்கிறார்.

தோல்வி கண்டு அஞ்சாத மாவீரர் ராஜீவ், மீண்டும் பாடுபட்டு உழைத்து முன்னேறி, வெற்றியின் விளிம்பில் நிற்கும் போது, கோழைகளின் கொலை வெறியில் சிக்கி வீழ்த்தப்பட்டுச் சரிந்தார். அவரது உடல் அவர் உயிரினும் நேசித்த பாரத மண்ணைத் தழுவியது. உயிரோ, விண்ணுக்குச் செல்லாமல், சுப்புற விழுந்து கிடந்த அவர் இதயத்திலிருந்து புறப்பட்டு மண்ணை ஊடுருவி நாடெங்கும் வியாபித்தது.

தோல்வி கண்டு ராஜீவ் அஞ்சாதது போல், நாமும் பயங்கரவாதம் அவ்வப்போது அடையும் வெற்றி கண்டு பயப்படாது எதிர்க்கத்தான் வேண்டும். முடிவில் சூது ஒழிந்து தர்மமே நிலைக்கும் என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும். அதே சமயம் பயங்கரவாதத்தை எதிர்க்கும் ஆயுதம் ஏ. கே. 47 மட்டுமல்ல; அரசியல் தீர்வு என்பதே சரியான, சக்திவாய்ந்த ஆயுதம் என்ற யதார்த்த அறிவும் நமக்கு இருக்க வேண்டும். 'ஆயிரம் உண்டிங்கு கட்சி; எனில் அந்நியர் இங்கு ஊடுருவல் என்ன நீதி' என்று நமது தலைவர்கள் ஒருமித்து நின்று கேட்க வேண்டும். இதே போன்ற ஒற்றுமை மனப்பான்மையை நாட்டின் அடிப்படைப் பிரச்னைகளையும் தீர்ப்பதில் சர்வ கட்சித் தலைவர்களும் காட்டினாலன்றி ஜனநாயகம் இங்கே ஆடிப் போகும்.

ராஜீவின் பரிதாப முடிவு தமிழகத்துக்குத் தலைகுனிவுதான் என்பதை மறுக்க முடியாது. 'இது நாட்டின் எந்தப் பகுதியிலும் நடந்திருக்க வேண்டாம்' என்று கூறும் அதே நேரத்தில், 'எந்தப் பகுதியிலும் நடந்திருக்கக் கூடும்' என்று சொல்லுமளவில்தான் நாட்டின் நிலைமை இன்று இருக்கிறது. திரும்பின பக்கமெல்லாம் வன்முறை தலைதூக்கி நிற்கிறது. ஆனால், 'சட்ட ஒழுங்கு சரியில்லை; விடுதலைப் புலிகளை அடக்கத் தெரியவில்லை' என்று கூறி தமிழகத்தில்தான் மக்களாட்சியைக்கலைத்தார்கள். அப்படி கலைத்தவர்கள் என்ன சாதித்தார்கள்? முன்னாள் பிரதமரையே விடுதலைப் புலிகளிடம் பலி கொடுப்பதில்தான் வெற்றி கண்டார்கள். இதற்கு யார் பொறுப்பேற்பது? எந்த ஆட்சியைக் கலைப்பது? இந்தக் குற்ற உணர்வையும் கையாலாகாத்தனத்தையும் மறைக்க,'இந்தப் படுகொலையானது தி. மு. க. - விடுதலைப் புலிகளின் கூட்டுச் சதி' என்பதாக ஒரு புரளியைக் கிளப்புகிறார் தமிழக காங்கிரஸ் தலைவர். எவ்வளவு கேவலம் இது? இத்தகைய அவதூறு மேலும் துவேஷத்தை, வன்முறையை வளர்க்கும் என்பதை எண்ணிப்பார்க்கும் பொறுப்புணர்வு அவரிடம் இல்லை.

ராஜீவ் செய்து கொண்ட ஸ்ரீலங்கா ஒப்பந்தமும், அமைதிப் படைகளை அனுப்பியதும், அப்படை விடுதலைப் புலிகளை அடக்க நேர்ந்ததும் சமீப சரித்திரம். ராஜீவ் மீண்டும் இந்தியப் பிரதமரானால் தமிழீழ விடுதலை இயக்கத்துக்குப் பின்னடைவு ஏற்படும் என்ற கருத்தில் செய்யப்பட்ட பயங்கரக் கொலை இது. விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையைச் சேர்ந்தவர்கள் செய்த காரியம்.

ராஜீவ் ஆட்சியில் இருந்த போது அவரிடம் குற்றம் குறைகள் பல கண்டவர்கள் கூட அவரது ஜனநாயகப் பற்று, சுதந்திரப் பொருளாதாரத்தின் மூலம் நாட்டை உயர்த்த வேண்டும் என்பதில் அவருக்கிருந்த ஆர்வம், பஞ்சாப், அஸ்ஸாம், காஷ்மீர், ஸ்ரீலங்கா போன்ற பிரச்னைகளுக்கு முடிவு கட்ட அவர் மனப்பூர்வமாக எடுத்துக் கொண்ட முயற்சிகள், அமைதி மிக்க நிலையான ஆட்சியை வழங்கி, பாரதம் உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்பதில் அவருக்கிருந்த அக்கறை முதலியவற்றைக் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. ராஜீவின் பிரகாசமான எதிர்காலம், நாட்டின் வளமான எதிர்காலமாக மலர்ந்திருக்க முடியும். நமக்குக் கொடுத்து வைக்கவில்லை.

ராஜீவின் பரிதாப மரணத்தை விடப் பெரிய சோகம் ஒன்று உண்டு என்றால் அது பாரம்பரியப் பெருமைமிக்க காங்கிரஸ், ஒரு தலைவனின்றித் தத்தளித்து, அரசியல் அனுபவமோ ஆர்வமோ சிறிதும் இல்லாத சோனியா காந்தியைத் தலைவராக ஏக மனதாகத் தேர்ந்தெடுத்ததுதான். இவர்களுக்கு நாட்டைவிட வோட்டு முக்கியமாகி விட்டது!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

ராஜீவ் -
சில நினைவுகள்




* திருப்பதியில்... பொன்னாடையும் பிரசாதமும்.



* தமிழகத்தில் தேர்தல் பிரசாரம் செய்த போது...

* தாயுடன் இளைஞர்கள் ராஜீவ், சஞ்சய்.






* விமானத்தில் பறந்தபடி கல்கிக்குப் பிரத்தியேகப் பேட்டி... (பேட்டி காண்பவர் வாஸந்தி)





* நேருவின் பேரன்கள்...
(குதிரை மேல் ராஜீவ்)



* எம். ஜி. ஆருடன்.



அட்டை வண்ணப்படம்
உதவி :
பி. ஐ. பி.

ராஜீவின் பாதுகாப்பு :

கடமையில்




● 8.30 க்கு இப்படி......

பர்னாலா பஞ்சாப் தீவிரவாதிகளின் ஹிட் லிஸ்ட்டில் இருப்பவர். சமீபத்தில் தேர்தல் பிரசாரத்துக்காக அவர் சென்னை வந்திருந்த போது பாதுகாப்புக்காக ஒரு கான்ஸ்டபிள் மட்டும்தான் உடன் சென்றார். ஒரு பைலட் கார் கூடக் கிடையாது! சிக்னல்களில் பர்னாலாவின் கார் நின்றுதான் போக வேண்டி இருந்தது. முன்னாள் ஆளுனருக்கு நமது தமிழக போலீஸ் கொடுத்த பா து கா ப் பு இவ்வளவுதான். இதை ஒரு கூட்டத்தில் டி. ஆர். பாலு சொன்ன போது, குழுமியிருந்த அத்தனை பேரும் அதிர்ச்சி அடைந்தனர்.

தமிழக போலீஸின் செயல்பாடுகள் சமீப காலமாகச் சரிந்து கொண்டே போகிறது. சட்டம் ஒழுங்கு ஆகட்டும், வி. ஐ. பிக்களின் பாதுகாப்பு ஆகட்டும், எல்லாவற்றிலும் ஒரு அலட்சியம். இதற்கு அடிப்படைக் காரணம், 'நீ பெரியவனா, நான் பெரியவனா?' என்ற மனப்பான்மை அதிகாரிகளுக்கு இருந்ததால், அவர்களுக்குக் கீழ் பணியாற்றியவர்களின் கடமை உணர்வு சிதைந்து கொண்டு வந்தது. இதைக் கூறி மனம் புழுங்கினார், பாதுகாப்புப் பணியில் பல வருடங்களாக ஈடுபட்டிருக்கும் ஒரு இன்ஸ்பெக்டர்.

''ஒரு வி. ஐ. பி. வருகிறார் என்றால், பாதுகாப்புக்கென்று பல ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மத்திய அரசு 'நீலப் புத்தகம்' என்ற ஒன்றை வெளியிட்டு இருக்கிறது. அந்தப் புத்தகத்தில் என்னென்ன பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று பட்டியலிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ஜனாதிபதி, உதவி ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் அதிமுக்கிய மானவர்கள் என்பதால் 'Z' பிரிவு வி. ஐ. பிக்கள் என்று கருதப்படுகிறார்கள். இதுபோல, X, Y பிரிவுகள் உண்டு. மறைந்து போன நமது முன்னாள் பிரதமர் ராஜீவும், 'Z' பிரிவில்தான் இடம் பெற்றிருக்கிறார். ஆனால் அதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு முழு அளவு பாதுகாப்புக் கொடுத்தார்களா என்றால் கேள்விக்குறிதான்'' என்கிறார் தமிழக அரசு அதிகாரி ஒருவர்.

''சமீப காலமாகத் தேர்தலை உத்தேசித்து - தலைவர்கள் மக்களிடையே கலந்து பழகுவதாகக் காண்பித்துக் கொள்வதில் மிகுந்த விருப்பத்துடன் இருக்கிறார்கள். சீருடை போட்ட போலீஸ்காரர்கள் சுற்றி ஓரம் இருந்தால் வெறுப்பைக் காண்பிக்கிறார்கள். ராஜீவ் காந்தியும் இதற்கு விதிவிலக்கு அல்ல. கூட்டத்தினிடையே மேடையிலிருந்து குதிப்பது, மலர் மாலை



● ...10.30 க்கு இப்படி....!

களைப் பெற்றுக் கொள்ளக் கழுத்தை நீட்டுவது என்று மக்களைத் திருப்திப்படுத்தும் பணியில் இ ற ங் கி, போலீஸ்காரர்களை ஒதுங்குமாறு வெளிப்படையாகவே கூடக் கூறினார். இந்தச் செயல்கள் 'பாம்பும் சாகனும்: கொம்பும் உடையக் கூடாது' என்ற நிலைக்குப் போலீஸ்காரர்களைத் தள்ளி விட்டது'' என்று வருத்தப்பட்டார் ஒரு போலீஸ் அதிகாரி.

தவறியது யார்

இது ஒருபுறமிருந்தாலும் ராஜீவின் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பற்றித் தமிழக போலீஸார் போதிய அளவு சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை என்பது இப்போது தெளிவாகி விட்டது.

- கூட்டம் நடக்கும் இடத்தை 24 மணி நேரத்துக்கு முன்பே போலீஸ்காரர்கள் தங்கள் வசம் எடுத்துக் கொண்டு, காவல் புரிய வேண்டும்.

- யார் யார் மேடையில் வி. ஐ. பி. யுடன் இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

- யார் யார் மாலை போட வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும்.

- அவர்கள் போட இருக்கும் மாலைகளை மட்டுமல்ல: அந்த நபர்களையும் மெடல் டிடெக்டரால் சோதிக்க வேண்டும்.

மேற்கண்ட எதுவும் நடக்கவில்லை என்பது இப்போது வெட்டவெளிச்சமாகி விட்டது.


''இந்திரா காந்தி சிலைக்கு ராஜீவ் மாலையிட்ட பின், பொதுக் கூட்ட மேடையை நோக்கிச் சுமார் இருநூறு அடி தூரம் அவர் நடத்தியே அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். இது ராஜீவை ஆபத்துக்கு உட்படுத்திய செயல்'' என்கிறார் ஒரு உயர் போலீஸ் அதிகாரி.

ஸ்ரீபெரும்புதூரில் கூட்டம் நடப்பதைத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைமை விரும்பவில்லை. காரணம், கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்ட இடம் ஊருக்கு வெளியே உள்ளது என்பதுடன் அங்கு கூட்டம் சேராது. ''மரகதம் சந்திரசேகரின் வற்புறுத்தலால்தான் அந்தக் கூட்டமே ஏற்பாடானது,'' என்கிறார் சத்தியமூர்த்தி பவன் பிரமுகர் ஒருவர். ''தேர்தலில் என் நிலை கொஞ்சம் மோசமாக இருக்கிறது. ராஜீவ் மீட்டிங் ஒன்று போட்டால்தான் காங்கிரஸுக்கு வோட்டுக்கள் அதிகரிக்கும்'' என்று திருமதி மரகதம் காங்கிரஸ் தலைமையிடம் கேட்டுக் கொண்டாராம். அவரது பிடிவாதம் கிடக்கட்டும், கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்ட இடம், பாதுகாப்புக்கு ஏற்ற இடமா, இல்லையா என்பதைப் போலீஸ் சொல்லவேயில்லையே! ராஜீவின் வருகையையொட்டி, பாதுகாப்பு அளிப்பது குறித்துத் தமிழக அரசின் உள்துறை, உயர் மட்டக் கூட்டம் நடத்தியதா? யார் யாருக்கு என்னென்ன பொறுப்பு என்பது நிர்ணயிக்கப்பட்டதா?

'தமிழ்நாட்டில் ஆயுதக் கலாசாரம் பரவி விட்டது. ஏ. கே. 47 உடன் விடுதலைப் புலிகள் சுற்றுகிறார்கள்' என்றெல்லாம் கூறி, தி. மு. க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்பினார்கள். சரி, அதன் பிறகு தமிழக போலீஸார் விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கைகள் என்ன? எத்தனை இடங்களில் ஆயுதங்களைக் கைப்பற்றினார்கள்? எத்தனை நபர்களைக் கைது செய்திருக்கிறார்கள்? ஒரு மாதத்துக்கு முன் பரங்கிமலை ரயில் நிலையத்தில் ஒரு போலீஸ்காரரைச் சுட்ட விடுதலைப்புலியைக் கண்டுபிடிக்க எடுத்த நடவ டிக்கை என்ன? ஏதோ ஆட்சி கலைத்த இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு ஒருமுறை பத்திரிகைகளில், ஒயர்லெஸ் ஸெட், துப்பாக்கிக் குவியலின் படங்கள் வெளிவந்ததே தவிர அப்புறம் ஒன்றையும் காணோம். ''உண்மையில் அந்தத் துப்பாக்கிகளும், முன்பே பறிமுதல் செய்யப்பட்டவைதான்'' என்று குட்டை உடைக்கிறார் விஷயமறிந்த ஒருவர்.

''விடுதலைப் புலிகள் தேர்தல் சமயத்தில் எந்தக் காரியத்திலும் இறங்க முடியாது; அந்த அளவுக்கு அவர்களை முடக்கி

● இறுதிச் சடங்கு



நினைவுபடுத்துகிறோம் ...

அமரர் கல்கி நினைவாக
* பொன் விழா சிறுகதை ; நாடகம் ;
கவிதைப் போட்டிகளின் முடிவு
தேதி : ஜூன் 15.

* * *

விட்டோம்'' என்று பகிரங்கமாக மார் தட்டிக் கொண்டாரே தேவாரம். ஆனால் இப்போது நடந்திருப்பது என்ன?

இடுப்பில் வெடிகுண்டைக் கட்டிக் கொண்டு, நடமாடும் ஆயுதக் கிடங்காகவே ஒரு பெண் புலி ராஜீவை நெருங்கியும் அவளைச் சோதனையிடாமல் கோட்டை விட்டு விட்டார்கள் காவல் துறையினர். ஒரே நாளில் ஒருவரே, திட்டமிட்டுச் செய்த செயல் அல்ல இது. பல பேர் சேர்ந்து பல நாள் திட்டமிட்டு நடத்திய கூட்டுச் சதித் திட்டம். நமது மாநில உளவுத் துறை என்ன செய்து கொண்டிருந்தது?

''counter espionage என்கிற கலையே நமது போலீஸுக்குத் தெரியாது'' என்ற அதிர்ச்சியான தகவலைத் தருகிறார் பழைய டி. ஜி. பி. ஒருவர்.

மேடை வேலைகள் நடந்து கொண்டிருந்த போது சந்தேகத்துக்குரிய மூன்று பேர்கள் (சர்ச்சைக்குரிய பெண் உட்பட) ஒரு அம்பாஸிடர் காரில் வந்து மேடை, சுற்றுப்புறங்களைப் பார்த்து விட்டுப் போனதாக ஒரு தகவல் கூறுகிறது. அப்போது போலீஸார் அங்கு இருந்திருந்தால், அவர்களை மடக்கியிருக்கலாமே! அல்லது எச்சரிக்கை அடைந்திருக்கலாமே?

''ஒரு வி. வி. ஐ. பிக்குப் பாதுகாப்புப் பணி என்றால், அவர் குடிக்கிற தண்ணீர், சாப்பிடுகிற சாப்பாடு போன்றவைகளைச் சோதனை செய்வது உட்பட ஆயிரத்தெட்டு சமாசாரங்கள் இருக்கின்றன. அவர் தங்கப் போகும் அறை (டாய்லெட் உட்பட) சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அந்த முக்கிய நபருடன் யார் காரில் போகிறார்கள் என்ற தகவலைப் பெற்று, அந்த நபரின் பூர்வோத்தரத்தை அலச வேண்டும். காரை ஓட்டும் டிரைவரை 24 மணி நேரத்துக்கு முன்பிருந்தே கண்காணிக்க வேண்டும். வி. ஐ. பி. போகும் வழிகளில் உள்ள பாலங்கள் உறுதியாக இருக்கின்றனவா என்று சோதனை செய்து 24 மணி நேரத்துக்கு முன்பே காவல் போட வேண்டும். இப்படிப் பல அம்சங்கள் இருக்கின்றன. ஆனால் நாங்கள் இவற்றையெல்லாம் கடமை உணர்வோடு செயல்படுத்தினால் எங்கள் மீது வெறுப்புதான் வரும்'' என்கிறார் பாதுகாப்புப் பணியில் நிபுணரான ஒரு போலீஸ் அதிகாரி. ஆனால் இப்போது நடந்திருக்கும் கொடூரத்தைப் பார்த்தால், தலைவருக்கு வெறுப்பு ஏற்பட்டாலும், பாதகமில்லை; போலீஸார் தங்கள் கடமைகளைச் செய்வதுதான் உசிதம் என்று புரிகிறது.

மெரினாவில் பல பெரிய தலைவர்களின் கூட்டங்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்த ஒரு அதிகாரி, ''கடலில் படகுகளும், கட்டு மரங்களும் போகாமல் பார்த்துக் கொள்வது மட்டுமல்ல, விமானங்களைக் கூட மேடைக்கு மேல் பறக்க விடாமல் திசை திருப்பி விட்டிருக்கிறேன்'' என்று சொன்னார்.


''அனைத்திந்தியப் பெருந்தலைவர்கள் பலர் விமானம் மூலம் தமிழகத்துக்கு வந்து போய்க் கொண்டிருப்பதால் சென்னை, செங்கல்பட்டு போன்ற நகர்களில் காவல் துறையில் முக்கிய பொறுப்புகளில் இருப்பவர்கள், கூடிய மட்டும் தமிழர்களாக இருப்பதே நல்லது'' என்ற கருத்தை வெளிப்படுத்துகிறார் ஒரு அனுபவம் மிக்க



சோம்பேறி யார்? எந்த வேலையையும் செய்யாமல் உண்டு உறங்கி வாழ்பவன் மட்டும் சோம்பேறி அல்ல. தற்போது செய்து கொண்டிருக்கும் வேலையை இன்னும் சிறப்பாகச் செய்து முடிப்பதற்குத் தன்னிடம் திறமை இருந்தும், வசதி வாய்ப்புக்கள் இருந்தும் அதனைச் செய்யாமல் இருக்கிறானே, அவனும் சோம்பேறிதான்.

- சாக்ரடீஸ்.

- வயலூர் பார்த்திபன்



மிருதுவான போஷாக்கு

உங்கள் குழந்தைக்கு 4 மாதங்களாகும் சமயத்தில் அவனது இயற்கை உணவான பாலுடன் எளிதில் ஜீரணிக்க உகந்த போஷாக்கு உணவான நெஸ்டத்தையும் கொடுங்கள்.

பாலுடன் கலந்து தயாரிக்கப்பட்ட நெஸ்டம் உங்கள் குழந்தையின் மிருதுவான முதல் திட உணவாகும். ஏனெனில் இதில் குழந்தை ஆரோக்கியமாய் வளர்வதற்குரிய எல்லா போஷாக்குகளும் சமச்சீர் அளவில் அடங்கியுள்ளன. உங்கள் குழந்தையின் உணவில் வெவ்வேறு சுவையைக் கூட்ட விரும்பினால், அவ்வகை உணவுடன் நெஸ்டத்தை கலந்து கொடுங்கள். உதாரணமாய் வேக வைத்த பழங்கள், வேகவைத்து மசிய வைத்த காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகள்.

அரிசி சேர்த்த நெஸ்டம் போஷாக்கு நிறைந்த ஸீரியல் ஆகும். உங்கள் குழந்தை இதை எளிதில் ஜீரணிக்கும். உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு மருத்துவர்கள் சிபாரிசு செய்யும் எல்லாவித போஷாக்கும் இதில் உள்ளன. உறுதியான எலும்புகளுக்கும் பற்களுக்கும் தேவையான கால்ஷியம்; ஆரோக்கியமான ரத்தத்திற்கு தேவையான இரும்பு சத்து; பட்டு போல் பளபளக்கும் சருமத்திற்கும், ஒளிவீசும் கண்களுக்கும், நோய் எதிர்ப்பு சக்திக்கும் தேவையான வைட்டமின்களும் இதில் அடங்கியுள்ளன.

உங்கள் செல்லக் குழந்தை நெஸ்டத்துடன் சேர்ந்து வளர்வதை கவனியுங்கள்.

இலவச நெஸ்டம் செய்முறை புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25, புது டில்லி-110016.

எளிதில் ஜீரணிக்க வல்ல பேபி ஸீரியல்.

நெஸ்டம்

போலீஸ் அதிகாரி. ''அப்போதுதான் மக்க ளோடு மக்களாகப் பழகி விஷயங்களைக் கிர கிக்கும் வாய்ப்புக் கிடைக்கும்'' என்கி றார் அவர்.

சம்பவம் நடப்பதைத் தடுக்கத்தான் போலீஸாரால் முடியவில்லை. நடந்து விட்ட பிறகாவது சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா? ''காயம் பட்டவர்களை அழைத்துப் போக வாகன வசதி கிடை யாது. அரை மணி நேரத்துக்குப் போலீஸ் காரர்களையே பார்க்க முடியவில்லை. எங்கே போனார்கள் என்றே தெரிய வில்லை. ப ய ந் து ஓடி விட்டார்கள். ராகவன் என்கிற ஒரே ஒரு ஐ. ஜி. மாத்தி ரம்தான் தைரியமாக மக்களின் கோபத் தையும் சகித்துக் கொண்டு ஸ்பாட்டில் இருந்தார். அவரும் இல்லையென்றால் போலீஸாருக்கு இப்போது கிடைத்த தடயங்கள் கூடக் கிடைக்காமல் போயி ருக்கலாம்'' என்று சொல்கிறார் சம்பவத்தை நேரில் கண்ட ஒரு பத்திரிகை நிருபர்.

10.20 க்குச் சென்னைக்கு ஐம்பது கி. மீ. தொலைவில் நடந்த சம்பவம், சென் னையில் உள்ள பல உயர் அதிகாரிகளுக்குத் தெரியவர, சுமார் மூன்று மணி நேரம் ஆகி யிருக்கிறது! நமது புது கவர்னர் கொஞ்சம் கோபக்காரர் ஆதலால் அவரை எழுப்பு வதா, வேண்டாமா என்று பட்டிமன்றம் நடத்தியிருக்கிறார்கள்!

ஏதாவது ஒரு கொலை நடந்தால், கொலைகாரன் தப்பிவிடாமல் இருப்பதற்கு மாநில எல்லைகளில் கார்களை மடக்கிச் சோதனை செய்வார்கள். ஸ்ரீபெரும்புதூர் சம்பவத்திற்குப் பின் இந்தக் கடமையைக் கூட மாநில போலீஸ் செய்யவில்லை என் கிறது ஒரு தகவல். அந்தப் பெண் புலிக்கு உடந்தையாக இருந்த ஆண் புலிகள் இத் தனை நேரம் இலங்கை போய்ச் சேர்ந் திருப்பார்கள். இன்னும் சில காலம் சென்று இங்குள்ள இரண்டு மூன்று இலங்கைத் தமிழர்களைச் சதிகாரர்கள் என்று சந்தே கிப்பதாகக் கைது செய்து நாளிதழ்களில் செய்தி வந்த பிறகு ஓரிரு தினங்களில் ஓசைப்படாமல் விடுவித்து விட்டால் வியப்பதற்கில்லை!

நடந்துவிட்ட சம்பவங்களுக்கு யார் பொறுப்பு? மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஆட்சி நடந்து கொண்டிருந்தால் ''முதல்வரே ராஜினாமா செய்'' என்ற கோஷம் வானைப் பிளந்திருக்கும். இப் போது ஆட்சி நடத்திக் கொண்டிருப்ப வர்கள் கவர்னரும், அவரது ஆலோச கர்களும்தான். வி. வி. ஐ. பி. யின் பாதுகாப்பிற்கு நேரடியாகப் பொறுப்பாக இல்லாவிட்டாலும், ஒட்டுமொத்தமாகப் பொறுப்பானவர் டி. ஜி. பி. இவர்க ளுடைய மனச்சாட்சி உறுத்துமா? தார்மீக ரீதியாகப் பதவி விலகுவார்களா? தமிழ் நாட்டு மக்கள் கேட்கும் கேள்வி இதுதான்!

– கௌசல்யா

படங்கள்: நன்றி: தினமலர்

"என்னைக் கவர்ந்த ராஜீவ்"


எந்த ஓர் அரசியல்வாதியுமே எல்லோரிடத்திலும் ஒரே மாதிரியான நன்மதிப்பைப் பெற்றுவிட முடியாது. ராஜீவும் விதிவிலக்கல்ல. ஆனால் ராஜீவைச் சில காரணங்களுக்காக விரும்பாதவர்கள் கூட அவரிடம் பல சிறப்பியல்புகளை நிச்சயம் கண்டிருப் பார்கள். எந்த எந்த அம்சங்களில் ராஜீவ் உங்களைக் கவர்ந்தார்? சிறந்த ஒரு பக்கக் கட்டுரைக்குப் பரிசு ரூ. 50/-. பிரசுரமாகும் இதர சிந்தனை களுக்கு ஆறுதல் பரிசு. உறை மீது ''என்னைக் கவர்ந்த ராஜீவ்'' என்று குறிப்பிடவும். கல்லூரி, விட்டு விலா சங்களுடன் கட்டுரைகள் வந்து சேரக் கடைசித் தேதி : 8.6.91. நினைவிருக் கட்டும்: மிக அதிகமான முதல் பரிசு பெற்ற மாணவர் பொன் விழா மேடையில் சிறப்புப் பரிசு ரூ. 2500/- வழங்கிக் கௌரவிக்கப்படுவார்.

கல்கி பொன்விழா பரிசுத் திட்டம்

50

கல்லூரி மாணவர் கட்டுரைப் போட்டி

ஒரு பாமரனின் பகல் கனவு!



கண்ணுக்கு இமைபோல கதைகளுக்குக் கல்கி

◆ தேர்தல் சிறப்பிதழ் அட்டைப் படத்தி லேயே அசத்தி விட்டீர்கள்! அரசியல் கட்சி களின் தேர்தல் அறிக்கை தில்லுமுல்லுக் களை, திட்டக் கமிஷனின் முன்னாள் செய லாளர் மூலம் தோலுரித்துக் காட்டியது பாராட்டத்தக்கது. மேற்கு வங்காளம், கேரளம், மகாராஷ்டிர தேர்தல் நிலவரங் களைச் சிறிதும் நடுவு நிலை தவறாது வெளியிட்டமைக்கு நன்றி. ''ஆசிரியர் பக்கம்'' அரசியல் சிறப்பிதழுக்கு மணிமகுடம்!

திருத்துறைப்பூண்டி. - வி. என். ஜீவா.

◆ இவ்வாரத் தலையங்கத்தைப் படித்த பிறகாவது 'கல்கி' எந்த ஒரு தனிக் கட்சிக்கும் 'ஜால்ரா' போடும் பத்திரிகை அல்ல என்பதைச் சிலர் புரிந்து கொள்வார் கள் என நினைக்கிறோம்!

சீர்காழி. - சண்பை. சிவ. சண்முகம்.

◆ கேரளம், மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களுக்கு நேரடி யாகச் சென்று பார்த்தது போல் இருந்தது, உங்கள் தேர்தல் சிறப்பிதழில் வெளியான தேர்தல் ரிப்போர்ட். கேரள மாநிலத்தின் எளிமையான பிரசாரத்தைத் தமிழ்நாட்டினர் இனிவரும் தேர்தலிலாவது கடைப் பிடிக்கட்டும்.

தக்கோலம், - அ. முஸ்தபா.

◆ ஜெர்மன் மற்றும் பிரான்ஸ் நாடு களின், உயரிய, தூய்மையான தேர்தல் முறைகளைப் புரிந்து கொள்ள உதவிய 'கல்கி'க்கு வாழ்த்துக்கள்!

கும்பகோணம், - கே. என். பாலகிருஷ்ணன்.

◆ எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் 'ஆண்கள் வரையறுத்து வைத்திருக்கிறார் கள். அதை மீறிப் பெண்களால் வர முடிய வில்லை' என்று ஆண் சமூதாயத்தின் மீது வெறுப்பைத்தான் சிந்துகிறார்கள். கடம்பற விளை வசந்தகுமாரிக்கு வண்டி ஓட்டப் பழக்கிக் கொடுத்தது ஒரு பெண்ணா? அதற்கு ஊக்கமளித்த வீட்டுக்காரர் பெண்ணா? இல்லை, இதைப் பாரெங்கும் புகழ் பரப்பிய பத்திரிகையாசிரியர் பெண்ணா? சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஈரோடு. - ர. சந்திரசேகர்.

◆ கண்ணுக்கு இமை இருப்பது போல, நல்ல கதைகளுக்குக் கல்கி இதழ் இருக்கிறது. 'மாடர்னாய் ஒரு பெண்', 'தூங்கு மூஞ்சி மரம்', 'ஒப்பந்தம்', கதை களைத்தான் சொல்கிறேன்.

காட்டாஹூர். - கா. கு. இலக்கியன்

◆ இவ் வாரம் மூன்றும் முத்தான சிறு கதைகளாக, சிந்தனைக்கு விருந்து அளிப் பவையாக இருந்தன.

அவற்றில் உத்தமசோழனின் 'தூங்கு மூஞ்சி மரம்' குறிப்பிடத்தக்கது. வாயுள்ள ஜீவன்களுக்கும் வாயில்லா ஜீவனுக்கும் இடையே நிகழும் பொருத்தா உறவை அழுத்தமாக வடித்திருக்கிறார் உத்தம சோழன்.

திருச்சி - 4. - தாயு செந்தில்குமார்.

◆ மதுமனோவின் 'மாடர்னாய் ஒரு பெண்' சிறுகதை அருமை. ரவீந்த்ரனைப் போல ஆடம்பரங்களைக் கண்டு அசந்து விடக்கூடிய ஆண்களுக்குச் சேலத்தில் பார்த்த பெண்ணைப் போன்ற நெத்தியடி கொடுக்கும் பெண்கள் அவசியம்! ஆசிரியர், அப் பெண்ணிற்குப் பெயரிடாமல் போனது வருத்தமான விஷயம்!

திருவெண்ணெய்நல்லூர், - நந்தன்பாலா.

◆ ஊரார் சிரிக்கச் சிரிக்கச் சொல்லு வார்கள் உற்றார் அழ அழச் சொல்லு வார்கள் என்ற பழமொழியை நிரூபித்த சிறு கதை ராஜ்கோகுலின் 'ஒப்பந்தம்'.

திருப்பரங்குன்றம்,- டி. கே. சுப்பிரமணியன்.

◆ பிரசாரம் என்ற மலிவு விலையில், உறுதிமொழிகள் என்ற தந்திரத்துடன், கவர்ச்சித் திட்டங்கள் என்ற எடை மோசடி யுடன் மக்களின் வாக்குரிமை என்ற மூலப் பொருளைக் கொள்முதல் செய்து, பதவிக் காலம் என்ற பல்பொருள் தொழிலகத்தில் அதிகாரம் என்ற விற்பனைப் பொருளாக்கி லஞ்சம் என்ற சில்லறை விற்பனையும் ஊழல் என்ற மொத்த விற்பனையும் செய் வதே நவீன அரசியல் என்பதைக் கல்கியின் தேர்தல் சிறப்பிதழ் உறுதி செய்தது!

மகிழஞ்சேரி, - ரவி.

◆ தலையங்கம் கண்டு அதிர்ச்சியடைந் தேன். அண்ணா, எம். ஜி. ஆர்., பெயர்களைப் பயன்படுத்தி அரசியல் நடத்த அரு கதையற்றவர் என்று கலைஞரைக் குறிப் பிட்டிருப்பது வேதனை தரும் விஷயம்.

பெருஞ்சேரி, - என். முருகேஷ்.

◆ ''ஐயோ பாவம் எம். ஜி. ஆர்.!'' தலையங்கம் அருமை. தேர்தல் நேரத்தில் வெற்றிக்காக அவரது புகழ் பாடும் அர சியல்வாதிகளின் முகத்திரையைக் கிழித்து விட்டீர்கள். எம். ஜி. ஆர் உயிரோடு இருக் கும் போது கருணாநிதியும், ஜெயலலிதா வும் தூற்றினார்கள். இன்று அவரைப் போற்றுகிறார்கள். இது அவர்கள் சுயநலத் தைக் காட்டுவது ஒருபுறம் இருக்கட்டும். இதையெல்லாம் நம்பி உழைப்பைத் தூக்கி மூட்டை கட்டி வைத்து விட்டு அல்ப ஆதா யத்திற்காக அவர்கள் பேச்சை நம்பும் மக்களை எண்ணிப் பார்க்கும் போது 'ஐயோ பாவம் மக்கள்' என்றே எண்ணத் தோன்றுகிறது.

செம்பனார்க் கோயில், - ஆர். நாகராஜன்.

◆ எம். ஜி. ஆர். சிலையைக் கருணாநிதி திறந்து வைத்ததைத் ''தேர்தல் ஸ்டண்ட்'' என்கிறீர்கள். தமிழக சட்டசபைத் தேர்த லில் ராஜீவ் காந்தியை ''போபர்ஸ் ஊழல் பேர்வழி'' என்று அ. இ. அ. தி. மு. க. தலைவி ஒரு கூட்டம் தவறாமல் பேசி விட்டு, இப்பொழுது எப்படியெல்லாம் உறவாடுகிறார்? இதை ஏன் நீங்கள் எழுத வில்லை?

பெங்களூர் - 32. - நா. சாரங்கபாணி.

அலுவலகத்தில் தம்பதியாக...
இல்லறத்திலும் நிம்மதியாக...

50

'ஒரே அலுவலகத்தில் பணிபுரியும் கணவன் - மனைவியின் அனுபவங்களை எழுதலாமே...' என்று செம்பராயநெல்லூர் வாசகர் இராஜ சண்முகானந்தம் கொடுத்த யோசனையை ஏற்று, சல்லடை போட்டுத் தேடி இரண்டு தம்பதிகளைக் கண்டு பிடித்தோம்.


* ஜி. பி. ஆர் - ரமாதேவி

ஏ.ஜி'ஸ் அலுவலகத்தில் பணிபுரியும் பாலு - சாந்தாவுக்குப் பெற்றோர் நிச்சயித்த சம்பிரதாயத் திருமணம் நடந்து பத்து வருடங்கள் ஆகின்றன. திருமணத்தின் போது சாந்தா எல். டி. ஸி. யாகவும் பாலு யூ. டி. ஸி. ஆகவும் இருந்தனர். படிப் படியாகத் தேர்வுகள் எழுதி, சாந்தா பி. எஃப் பிரிவில் செக்ஷன் ஆபீஸர் பதவிக்கு உயர்ந்திருக்கிறார். பாலு தொடர்ந்து யூ. டி. ஸி. யாக இருந்து வருகிறார்.


இதனால் இவர்கள் வாழ்க்கையில் எவ் விதப் பிரச்னையும் இல்லை என்று இத் தம்பதி கூறுகின்றனர்.

''என் கணவருக்குத் தாழ்வு மனப் பான்மை இடையாது. தம்மை விடத் தம் மனைவி முன்னேற வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் கொண்டவர். தேர்வுகள் எழுத என்னை ஊக்குவித்தார். இன்று நான் செக்ஷன் ஆபீசர் என்பதால், சட்ட ரீதியான சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள என் னைத் தயங்காமல் அணுகிக் கேட்பார்.

''புகுந்த வீட்டினரும் பரந்த மனப் பான்மையுடையவர்களாய் இருப்பது என் அதிர்ஷ்டம். நான் அலுவலகப் பரீட்சைகள் எழுதிய போது தம் சொந்த மகளுக்காகப் பிரார்த்திப்பது போல் கோயில்களுக்கு வேண்டிக் கொண்டார் என் மாமியார்.

''இவ்வளவு பலமான ஆதரவு வீட்டில் கிடைப்பதால் அலுவலகத்தில் யாராவது தப்பித் தவறி வேற்றுமை கற்பிக்கும் வித மாகப் பேசினாலும் அதைப் பொருட் படுத்தாமல் இருக்க எங்களுக்கு மன வலிமை இருக்கிறது. ...ஆனால் அவ்வாறு

* சாந்தா - பாலசுப்ரமணியன்.



பேசுவதும் இப்போதெல்லாம் மிக அரிதாகி விட்டது. ஆண் - பெண் என்ற வித்தியாசங்கள் மறைந்து வருகின்றன...''

சாந்தா குறிப்பிட்ட 'பலமான ஆதரவின்' பரிமாணத்தைப் பாலுவுடன் பேசிய சில நிமிடங்களுக்குள் உணர முடிந்தது. அவர் சொன்னார்: ''நான் சம்பாதித்து என் வீட்டினரைக் காப்பாற்ற வேண்டியது என் கடமை. அதே போல் என் மனைவி சம்பாதித்து அவள் வீட்டினருக்கு உதவுவதும் அவள் கடமை என நம்புகிறவன் நான். அவள் திருமணத்துக்கு முன் இருந்த 'இனிஷியலை' மாற்றிக் கொள்ளவில்லை. பெற்று, வளர்த்து ஆளாக்கிய தந்தையின் இனிஷியலைத் திருமணம் ஆனதுமே மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதில் எனக்கும் நம்பிக்கையில்லை. என் வீட்டாரும் இதை ஒரு பெரிய விஷயமாகக் கருதவில்லை.''

ஜி. பி. ஆர். - ரமாதேவி தம்பதி சென்னை தூர்தர்ஷனில் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள். புதுவை வானொலியில் இருவரும் பணியாற்றிய போது காதலித்து மணந்தவர்கள். ரமாதேவிக்குத் தாய்மொழி மலையாளம். ஜி. பி. ஆருக்கு மராத்தி தாய்மொழி என்றாலும் மிக எளிதாகத் தமிழ் பயின்று விட்டார்.

புதுவையில் பணியாற்றிய போது ஏற்பட்ட அனுபவத்தை விவரித்தார் ஜி. பி. ஆர்:

''அப்போது நான் அறிவிப்பாளர்; ரமா டியூட்டி ஆபீஸர். தினமும் நான் அறிவிக்க வேண்டிய நிகழ்ச்சிகளைத் தொகுத்து டியூட்டி ஆபீஸருக்குப் படித்துக் காட்ட வேண்டும். ரமாவுக்குத் தமிழ் சரியாகத் தெரியாது என்பது எனக்குத் தெரியுமாதலால் ரமாவிடம் படித்துக் காட்ட மறுத்தேன். சக ஊழியர்கள் நான் மனைவிக்குக் கீழ் பணியாற்ற விரும்பாததால் அப்படிச் சொல்கிறேன் என்று பேச ஆரம்பித்தார்கள். விஷயம் துணைநிலைய இயக்குனர் வரை செல்ல, அவர் என்னைக் கூப்பிட்டு விசாரித்தார். நான் விஷயத்தை விளக்கி ரமாவுக்கு அடுத்த பொறுப்பில் உள்ளவரிடம் படித்துக் காண்பிப்பதாகச் சொன்னேன். என் பிடிவாதத்தில் உள்ள நியாயத்தைப் புரிந்து கொண்டார்.

சென்னைத் தொலைக்காட்சி நிலையத்துக்கு வந்த பிறகு இதற்கு நேர்மாறான ஓர் அனுபவம் ஏற்பட்டது இத் தம்பதிக்கு. ரமாவுக்கு முன்பே தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பயிற்சி எடுத்துக் கொண்ட ஜி. பி. ஆர். இப்போது 'சீனியரா'கி விட்டார். ரமா தயாரிப்பாளர் ஆன புதிதில் கேரளத்தைச் சேர்ந்த நாராயண குரு (இவர் பெரியார் போன்ற பகுத்தறிவுவாதி) பற்றிய ஒரு நிகழ்ச்சியைத் தயாரிக்க வேண்டியிருந்தது. 'உங்களால் தனியாக இந் நிகழ்ச்சியைத் தயாரிக்க முடியுமா?' என்று நிலைய இயக்குனர் மீண்டும் மீண்டும் கேட்டாராம். கணவரின் உதவியை ரமா நாடுவார் என்று எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. ஜி. பி. ஆரும் அந்த நிகழ்ச்சியை ரமா தயாரித்து முடிக்கும்வரை அது பற்றி அவளிடம் மூச்சுக் கூட விடவில்லை! நிகழ்ச்சிக்கு நல்ல பெயர். தேசிய ஒளிபரப்பில் சில முறைகளும் சென்னைத் தொலைக்காட்சியில் சில முறைகளும் காண்பிக்கப்பட்டது.

இந்தத் தம்பதி அலுவலகத்தில் பக்கத்துப் பக்கத்து அறையில் அமர்ந்திருந்தாலும் உணவு இடைவேளை தவிர மற்ற நேரங்களில் சந்தித்துக் கொள்வதில்லை! இவர்கள் வந்து சேர்ந்த புதிதில், இருவரும் ஸ்கூட்டரில் மாலை வீடு திரும்புவதைப் பார்த்த சிலர் வம்பு பேச ஆரம்பித்தனர். விஷயம் தெரிந்தவர்கள், ''அவர்கள் மணமானவர்கள், அலுவலகத்தில் இருக்கும்வரையில் அதைக் காட்டிக் கொள்ள மாட்டார்கள்...'' என எடுத்துச் சொல்லி விளக்க வேண்டியதாகி விட்டது!

- பானுமதி ராமச்சந்திரன்.



அச்வினி :
சீரான ஓட்டம்
சினிமாவில் நாட்டம்

சிறப்புக் கட்டுரை அடுத்த இதழில் இடம் பெறும்.

+

மின்னி மறையும் புதுமுகங்கள்
சினிமா ஸ்பெஷல் கட்டுரை

சொத்துக்களை விற்கிறீர்களா?



என் எச் பி 9% கேபிடல் பாண்டுகளை வாங்குங்கள். நிலம், வீடுகள், பங்குகள், பிளையங்கள், நகைகள் போன்ற நீண்டகால சொத்துக்களை விற்று மூலதன இலாபத்திலே 100% வரி விலக்குப் பெறுங்கள். என்எச்பி 9% கேபிடல் பாண்டுகளினால் உங்களுக்கும் சரி, உங்கள் மூலதனத்திற்கும் பெருமளவு ஆதாயங்கள் உண்டு.

- உங்கள் முதலீடு ஆண்டொன்றுக்கு 9% வட்டி ஈட்டும். இது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வழங்கப்படும்.
- அல்லது முதலீடு செய்த தேதியிலிருந்து ரூ. 1000-க்கு ரூ. 240 என்னும் விகிதத்தில், முழு கால வரம்பாகிய 3 ஆண்டுகளுக்கும் தள்ளுபடியின் அடிப்படையில் முன் கூட்டியே ஆண்டொன்றுக்கு 9% என்னும் விகிதத்தில் வட்டியை பெற்றுக் கொள்ளவும் செய்யலாம். இதில் இடைக்காலமாகிய 3 மாதங்களுக்கான வட்டியும் முழுமையாக அடங்கும். அதனால் ஒரு நாளைய வட்டியைக்கூட நீங்கள் இழப்பதில்லை.
- வருமான வரி சட்டம் 1961, பிரிவு 54 E -ன் கீழ் மூலதன இலாப வரிக்கு விலக்குண்டு.
- வட்டித் தொகையின் மீது, அது வழங்கப்படும் நிலையில் வரி கழிக்கப்படாது.
- சொத்து வரி சட்டம் 1957, பிரிவு 5 (1)(xvi) மற்றும் 5(1A) இவற்றின் கீழ் ரூ. 5 இலட்சம் வரையிலான தொகைக்கு, இதர தகுதியுள்ள ஆஸ்திகளுடன் வரி விலக்கு உண்டு.
- வருமான வரி சட்டம் 1961, பிரிவு 80 L-ன் கீழ் வட்டித் தொகைக்கு வரி விலக்கு உண்டு.
- இது சம்பந்தமான, செலுத்தும் செலவுகள் என் எச் பியைச் சார்ந்ததாகும்.
- நாட்டிலுள்ள 150 க்கும் மேற்பட்ட இடங்களில் ஆண்டு முழுதும் சமவிலைக்கு இது கிடைக்கும்.
- வீடு கட்ட நிதியுதவி வழங்குவதில் நாட்டின் தலையாய நிறுவனமாகிய எமது முக்கிய குறிக்கோளே, அனைவரும் வீடு கட்ட வேண்டும், அதற்கான நிதியுதவியை அதிகரிக்க உதவ வேண்டும் என்பதே. ஆகையால் இதிலே முதலீடு செய்வதால், நாட்டில் பலர் வீடு கட்டிட நிதியுதவி செய்த மன நிறைவும் கிடைக்கும்

விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கும்/ஏற்கப்படும் இடங்கள் : நேஷனல் ஹவுஸிங் பேங்க் அலுவலகங்கள் (பம்பாய் & டில்லி) • **கேன்ஃபினா** அலுவலகங்கள் • இந்த இந்தியாவிற்கான 9 பாங்குகளது, 51 இடங்களிலுள்ள 142, கிளைகள் : அலகாபாத் பாங்க், ஆந்திரா பாங்க், பாங்க் ஆஃப் பரோடா, கனரா பாங்க், விஜயாபாங்க் (சாகர் பவன், பம்பாய்), ஃபேர்க்ரோத் பினான்ஷியல் சர்வீஸஸ், இந்தியன் பாங்க், பஞ்சாப் நேஷனல் பாங்க், ஸ்டேட் பாங்க் ஆஃப் மைசூர். மற்றும் தி வைஸ்யா பாங்க் லிட்.

NATIONAL HOUSING BANK
YOU GAIN THE NATION GAINS
9% CAPITAL BONDS

நேஷனல் ஹவுஸிங் பேங்க்

(ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியாவினால் முற்றும் உடமையாக்கப்பட்டது)

வீடு கட்டும் துறைக்கு புதிய பாதை வகுக்கிறது

3 வது மாடி, பாம்பே லைஃப் பில்டிங், அக்பர்அலியின் மேலே, 45 வீர் நரிமன் ரோடு, பம்பாய் 400 023. ஃபோன் : 222702, 224347

5 வது மாடி, இந்துஸ்தான் டைம்ஸ் ஹவுஸ், 18-20, கஸ்தூர்பா காந்தி மார்க், புதுடில்லி 110 001. ஃபோன் : 3712016, 3712036

FORTUNE 45 Tam

500 உஜாலா ரொக்கப் பரிசுகள்

உஜாலா

உஜாலாவின் விஞ்ஞானத் தன்மை

மனோதத்துவம்

குழந்தைகள் இளமனதில் வெள்ளை ஆடைகள் எந்த அளவிற்கு சுகாதாரம், ஒழுக்கம், இலட்சியம் மற்றும் இதரப் பண்புகளை வளர்க்க உதவுகின்றன என மனோதத்துவ நிபுணர்கள் உங்களுக்கு கூறுவார்கள்

பௌதீகம்

வெள்ளை ஆடைகள் எவ்வாறு சூரிய ஒளியிலிருந்து பெருமளவு உஷ்ணத்தை வெளியேற்றி சருமத்தைக் காக்கின்றன என்றும் உஷ்ணத்தினால் சருமம் கருமையாகாமல் எவ்வாறு காக்கின்றன என்றும் பௌதீக நிபுணர்கள் உங்களுக்கு கூறுவார்கள்.

இரசாயனம்

ஒப்பற்ற, நுட்பமான இரசாயனம் மட்டுமே பளிச்சென்ற, மாசற்ற ஒளி வீசும் வெண்மையை வெள்ளை ஆடைகளுக்கு தர முடியும். இவை அனைத்தும் அடங்கிய தயாரிப்பே உஜாலா. இது ஒரு சாதாரண சொட்டு நீலம் அல்ல. நீரில் விரைவாக கரைய வேண்டும் — உடைகளின் இழைகளில் ஆழ ஊடுருவி வேகமாக உறிஞ்சப்பட வேண்டும் — விஞ்ஞான முறை அற்ற தயாரிப்புகளில் இருப்பது போன்ற இரசாயனம் இருத்தல் கூடாது; அவற்றை தொடர்ந்து உபயோகித்தால் துணிகளுக்கு சேதமுண்டாகும் அல்லது குழந்தைகளின் சருமத்திற்கு தீங்கு உண்டாக்கும். தவிர துணிகளில் படிந்திடும் கறை போன்றவையினால் சோபையிழந்து காணப்படும் இவை அனைத்து விஷயங்களையும் மனதில் கொண்டே, அங்கக இரசாயனத்தில் டாக்டர் பட்டம் பெற்றுள்ள விஞ்ஞானி ஒருவரால் பல்வேறு ஆராய்ச்சி மற்றும் பரிசோதனை செய்யப்பட்டு உருவாகி உள்ளது உஜாலா.



உஜாலா பாதுகாப்பின் சின்னம்

வாய்வழி நச்சு மூலம் (ORAL TOXICITY TEST) நடத்திய ஆராய்ச்சிகள், உஜாலா நச்சுத் தன்மை அற்றது என நிரூபித்து உள்ளன. சரும அரிப்பு பரிசோதனை (SKIN IRITATION TEST) நடத்தியதில் சருமத்திற்கு அரிப்பு ஏற்படுத்துவது இல்லை என்றும் கண்டு அறியப்பட்டுள்ளது.

உஜாலாவில் ஆடைகளுக்கு சேதமுண்டாக்கும் எந்த இரசாயனமும் கிடையாது. எனவேதான் உஜாலாவை மீண்டும், மீண்டும் வாங்குகிறார்கள்

500 உஜாலா ரொக்கப் பரிசுகள் :

இன்றைய நுகர்வோர்கள் இலவசமாய கிடைக்கும் மற்ற பொருள்களுக்காக இன்றி உஜாலா போன்ற நல்லதொரு பொருளை வாங்குவதன் காரணம் என்ன ? நுகர்வோர்கள் உஜாலாவை எப்படி கவனித்து வாங்குகிறார்கள் என்றும் ? எப்படி உஜாலாவைப் போல் தோற்றமளிக்கும் விஞ்ஞான முறையற்ற சொட்டு நீலங்களை வாங்குவதை தவிர்க்கிறார்கள் என்பதையும் உஜாலா பாட்டிலில் உள்ள விலாசத்திற்கு ஜூன் 30தி 1991. முன்பு அனுப்பவும். தகுந்த விமர்சனங்களுக்கு ரூ. 50 வீதம் 500 நபர்களுக்கு ரொக்கம் பரிசாக வழங்கப்படும்.

RAM/JL/2.65

JYOTHY LABORATORIES, BOMBAY.

பம்பர் பரிசாகக் கிடைத்த யதார்த்த அறிவு!

விஷ்ராம்

சேலம் மாவட்டத்திலிருக்கும் சொந்தக் கிராமத்துக்குச் சமீபத்தில் செல்ல நேர்ந்த போது கிராமம் ஒரே கோலா கலமாயிருந்தது. ஆங்காங்கே மக்கள் கும்பல் கும்பலாக நின்று, ஒருத்தர் பத்திரிகை படிக்க மற்றவர்கள் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

என் மனம் பூரித்து விட்டது. சாதாப் பூரியல்ல. சென்னா படோரா பூரி மாதிரி ரொம்பப் பெரிசாக!

எங்கள் கிராமம் நிச்சயம் முன்னேறி விடும். நாட்டு நடப்பில் இவர்களுக்குத்தான் எவ்வளவு சடுபாடு என்று மகிழ்ந்தேன்.

பஸ் நிலையம் அருகே ஒரு பெட்டிக் கடை. ''ஒரு நி யூ ஸ் பேப்பர் கொடுப்பா....'' என்றேன்.

''நியூஸ் பேப்பரா? இல்லீங்களே!''

''எதுவானாலும் பரவாயில்லை.''

''இல்லீங்க.. 'முடிவுகள்' ஒண்ணுதாங்க இருக்கு. அதுவும் ஒரே ஒரு காப்பி.''

''முடிவுகள்னு ஒரு பத்திரிகையா?''

''லாட்டரி முடிவுகளை வெளியிடற பத்திரிகை. அது ஒண்ணைத் தவிர இந்த ஊருக்கு வேற எந்தப் பத்திரிகையும் வர்றதில்லீங்க..''

''கும்பல் கும்பலாத் தெருவில் படிக்கிறாங்களே...''

''எல்லாம் லாட்டரி ரிசல்ட்டுதாங்க. நீங்க ஏதும் வாங்கியிருக்கீங்களா?''

பூரித்துப் போன என் மனம் காற்றுப் போன பலூனாய்ச் சுருங்க வாய் பேசாமல் நகர்ந்து, ரிசல்ட் பார்த்துக் கொண்டிருந்த ஒரு கும்பல் அருகே நின்று கவனித்தேன்.

இடுப்புத் துணி கூட இல்லாமல், கோவணத்தைக் கட்டிக் கொண்டு ஒரு கிழவர் - ''நம்முது இருக்குதா...'' என்றார்.

கும்பலின் நடுவிலிருந்த பரிசுச் சீட்டு



விற்பனையாளர், ''உங்களுது ராஜலட்சுமியிலே இல்லே பெரீவரே. வேறு எதுலே வாங்கியிருக்கறே?'' என்று கேட்டார்.

''எல்லாம்தான் குடுத்திருக்கே. எனக்குப் படிக்கவா தெரியும். நீயே பார்த்துக்க...'' என்று ஒரு பெரிய கற்றை லாட்டரி சீட்டுகளை விற்பனையாளரிடம் கொடுத்தார் அந்தக் கோவணாண்டி.

அதற்குள், ''என்னுதைக் கொஞ்சம் பாத்துடுப்பா! நம்முது ஜெய் பாரத்,'' என்று ஒரு குரல்.

இன்னொரு கி ழ வி, ''மாசோலாவி கொஞ்சம் பாருப்பா... தட்டுப் புல்லு அறுக்கப் போவணும். அதுலே இல்லாட்டி மருமவள் வாங்கியிருக்கிற மிஜோ லக்ஷ்மி கொஞ்சம் பார்த்துடு'' என்று அவசரப்படுத்தினாள்.

ஒரு முறுக்கான வாலிபன் அரிவாளைக் கையில் பிடித்த நிலையில், ''ராஜ யோகம் பார் அண்ணே, அப்படியே ரேவதி, ஸ்ரீலேகா, சீதா அண்டு கீதா... விஜயரத், ஜீவன் சக்தி'' எல்லாம் பார்த்துடு... மாட்டைப் புடிச்சிகிட்டு சந்தைக்குப் போகணும். ஜல்தி பாரு'' என்று அதட்டினான்.

''ஆளாளுக்கு ரவுசு படுத்தாதீங்கப்பா... தம்பி, எனக்கு அகன்ஷா பார்த்துடுப்பா... ஒத்தைச் சீட்டு...'' என்றாள் ஒரு நைந்து போன கிழவி.

சற்று நேரத்தில் அவர்கள் கற்றை கற்றையாகக் கிழித்துப் போட்ட லாட்டிரிக் குப்பைகள் கடைத் தெருவில் வண்ண வண்ணக் கோலங்களாகப் படிந்து வீதிக்கு அழகு சேர்த்தன!

என்னுடைய பத்திரிகைக்காரன் புத்தி எங்கே போகும்? ''தம்பி! இப்படி எத்தனை விதமான லாட்டிரி சீட்டு விக்கறே?'' என்று கேட்டேன், பேட்டி காணும் நினைவு!

''எண்ணிக்க'' என்று ஆரம்பித்தார் அந்த விற்பனையாளர். ''ராஜ்லட்சுமி, ஜெய் பாரத், கேரளா, மாசோலாவி, மிஜோ லட்சுமி, மணிலட்சுமி, நந்தினி, சிக்கிம் பாக்யா, காமதேனு, ஸ்ரீராம் வீக்லி, ராஜ யோகம், ஸ்ரீலேகா, ரேவதி, ராயல் பூடான் ஸ்பெஷல் பம்பர், சிக்கிம், சிவகங்கா, பவன்புத்ரா டீலக்ஸ், ஸ்ரீராமா, ஸ்ரீசாயி பாபா, தாஜ்மகால், மகாபாரத், கேப்பிட்டல், ஹீராமோதி, ராயல் சூப்பர் தினசரி, ஜீவன் சக்தி, சீதா அண்டு கீதா, விஜயரத் வியாழன், அகன்ஷா, அருணாச்சல், ராஜ்ஸ்ரீ வியாழன், கிபூதாப், ராஜ்ரத் வியாழன், பாக்யவிதாதா, எவிரிடே, லக்கி வீக்லி, மகாதேவ், சுபலட்சுமி, மாதுர்கா, மீரா வீக்லி, டீலக்ஸ் வீக்லி! ஸ்வரன் கங்கா பம்பர், கல்யாணி வீக்லி, மிஸோராம் வீக்லி, ஸ்ரீதிருபதி, டயமண்ட் லாட்டிரிகள், டபிள் டயமண்ட், சதாப்தி, பாரடைஸ் வீக்லி, சிக்கிம் இமாலயன், ...''

''ஐயோ... போதும் போதும் தலை சுற்றுகிறது'' என்று காதுகளைப் பொத்திக் கொண்டேன்.

''கின்னஸ்ஸுக்கு எழுதிப் போடு; பரிசு கொடுப்பாங்க'' என்றார் லாட்டரி சீட்டு விற்பனையாளர் .''சிம்காக்காரங்க கூட இது மாதிரி ஏதோ புக் போடறாங்களாமே அதுக்கு வேணும்னாலும் எழுது! இவை போக, தமிழக, ஆந்திரா, கர்நாடக, கேரள அரசுகள் அதிகாரபூர்வமாக நடத்தும் விதவிதமான பரிசுச் சீட்டு வரிசைகள் எத்தனையோ இருக்கு!''

ஏழைக் குடியானவர்களை, பாமர மக்களை இப்படிக் கேள்வி முறையில்லாமல் சுரண்டுவதற்கு ஒரு முடிவு இல்லையா? நான் அனுதாபத்துடன் என் அருகில் நின்ற கோவணாண்டியைப் பார்த்தேன். ''பெரியவரே! எதுக்கு இப்படி லாட்டரி சீட்டு வாங்கிக் காசை வீணடிக்கிறீங்க?'' என்றேன்.

''பின்னே? நான் என்ன ஆபீஸரா, அரசியல்வாதியா? லஞ்சம் வாங்கியா கோடீஸ்வரனாக முடியும்? லாட்டரி சீட்டுத்தான் வாங்க முடியும்!'' என்றார் அவர்.

''லாட்டரி சீட்டு வாங்கினா கோடீசுவரனாக முடியும் என்று உத்தரவாதம் இல்லையே?''

''இல்லாட்டிப் போவுது! எப்படியும் என் கஷ்டம் விடியப் போறதில்லே. லாட்டரி சீட்டு வாங்கி, குலுக்கல் வரை கொஞ்சம் கற்பனையிலேயாவது பணக்காரனா வாழலாமே!''

''கற்பனை பண்ணறதுக்குப் பரிசுச் சீட்டு வாங்கணும்னு அவசியமில்லையே?''

''தம்பி 'சாராயம்'னு எழுதிப் படிச்சா 'கிக்' கிடைக்காது. அது போலத்தான் இதுவும். காசு கொடுத்து வாங்கினப்புறம்தான் கற்பனை மஜாவா ஓடும்! அதுல தான் கிக்!''

''என்ன அக்கிரமம் இது! ஏழைகள் இப்படி ஏமாற்றப்படலாமா? சமுதாய நோக்கில் ஏதாவது ஒரு வாரப் பத்திரிகை இதற்குச் சிறப்பிதழே வெளியிடலாம் போலிருக்கே!''

''மாட்டாங்க, தம்பி!''


''ஏன்?''

''பத்திரிகைக்காரங்களே இப்பப் பம்பர் பரிசு கொடுத்துக் குலுக்கல் நடத்தித்தானே பத்திரிகை விக்கறாங்க!''

கிழவர் காலில் நான் சாஷ்டாங்கமாக விழுந்தேன். ''கிராமத்து ஆளாகிய உங்களுக்கு இருக்கிற யதார்த்த அறிவு எனக்கில்லைதான்...''

''தம்பி! மேடையில் அரசியல்வாதி காலில் விழுந்தா, அடுத்த எலெக்ஷனுக்குத் தேர்தல் டிக்கெட்டாவது கிடைக்கும்! எங்கிட்ட இருக்கிறது லாட்டரி டிக்கெட் தான். வாங்கிக்க'' என்றார்.

பிரசாதம் போல் பெற்றுக் கொண்ட நான், அதற்குப் பரிசு விழுந்திருக்கிறதா என்று ''முடிவுகள்'' பத்திரிகையை ஆராய ஆரம்பித்தேன்.



ஆத்தா உன் கோயிலிலே

"குருவே!"

"என்ன சிஷ்யா?"

"ஒரு தமிழ்ப் படம் எடுக்க என்ன செய்யணும்?"

"முதல்ல அதுக்கு ஒரு கதை பண்ணனும். கூடியவரையில், ஒரு கிராமத்துப் பின்னணியைத் தேர்ந்தெடுக்கறது நல்லது."

"ஏன் குருவே?"

"அப்போதான், என்னிக்கோ எங்கேயோ ஒரு கிராமத்துல நடந்த உண்மைக் கதைன்னு போட்டுக்க முடியும். ஏற்கெனவே அப்படிப் போட்டு ஒரு படம் நல்லா ஓடுதே!"

"அப்படியா?"

"ஆமாம். அது மட்டுமில்லை. அப்போதான், ரெண்டு மூணு கிராமங்களோட பேரு, அந்த ஊர் மக்கள், அந்த ஊர்ப் பெரியவங்க எல்லாருடைய பேரையும் போட்டு நன்றி சொல்ல முடியும்."

"அது ஏன் குருவே?"

"இப்போ தமிழ்ப் படங்களில் அதுதான் ஃபாஷன். இன்னொரு ஃபாஷன் என்ன தெரியுமா? நடிகர், நடிகைங்களை ஒரு மாதிரி இழுத்து இழுத்துக் கொச்சையாவே பேசச் சொல்லணும்."

"அப்புறம்?"

"கதைக்குச் சூடு வேணுமே, என்ன செய்யறது? இருக்கவே இருக்கு மேல் ஜாதி - கீழ் ஜாதி மோதல். மேல் ஜாதிப் பையன் கீழ் ஜாதிப் பெண்ணைக் காதலிக்கிறான்... கீழ் ஜாதிப் பையன் மேல் ஜாதிப் பெண்ணைக் காதலிக்கிறான். சீர்திருத்தத்துக்கு சீர்திருத்தமாச்சு. அடிதடி, கும்கும் குத்துக்குச் சந்தர்ப்பமும் ஆச்சு."

"ம்... பேஷ் பேஷ்... அப்புறம்?"

"கிராமிய இசையில குறைஞ்சது ஏழெட்டு பாட்டு, அம்மன் கோயில், அது முன்னால கும்பலா கூடி டான்ஸ், கரகம், காவடி, தமிழ்நாட்டுக் கிராமங்களில் ஆற்றில் தண்ணீர் ஓடலைன்னாலும் இந்தத் தமிழ் சினிமா கிராமத்துல சுழன்றடிச்சு ஓடற ஆற்று வெள்ளம்... இதெல்லாம் வேணும்."

"நடிகர்களைப் பத்தி ஒண்ணுமே சொல்லலையே!"

"ஜனகராஜ், செந்தில்னு பேர் தெரிஞ்ச ரெண்டு பேர் இருந்தாப் போதும். மத்தவங்களையெல்லாம் புதுசாவும் சுமாராப் பேர் தெரிஞ்சவங்களாவும் போட்டுக்கிட்டாப் போறும்."

"ஒண்ணும் புதுசா, வித்தியாசமா எதுவும் இல்லையே, குருவே?"

"அதெல்லாம் எதுக்கு? படப்பிடிப்பு, காமிரா கோணங்கள்... இது மாதிரி தொழில் நுட்பங்கள்தான் ரொம்ப முன்னேற்றம் அடைஞ்சிருக்கே. கதை, சம்பவங்களில் இருக்கிற பலவீனங்களை அதெல்லாம் சரிக்கட்டிடாதா? அப்புறம் இன்னொண்ணும் ரொம்ப ரொம்ப முக்கியம். படத்தோட பேரு... அதுவும் கொச்சையா, கிராமிய மணத்தோட இருக்கணும்."

"என்ன பேரு குருவே?"

"ஆத்தா உன் கோயிலிலே."

- சி. ஆர். கே.

நல்ல வண்ணம் வாழலாம் - 7

உயர்வும் தாழ்வும்

உடம்பும் உயிரும் சேரும் போது உருவாகும் உள்ளம்தான் இரண்டையும் ஆட்டிப் படைக்கிறது. வாழ்வின் வெற்றி தோல்விகளை முடிவு செய்கிறது. இந்த உள்ளம் எங்கிருக்கிறது என்று கேட்டால் விடைசொல்ல முடியாது. ஆனால் அது தான் வாழ்க்கையின் சூத்திரதாரி!

உடம்பில் மனத்தைச் செலுத்தி, சதா காலமும் அதிலேயே மூழ்கி விடுகிறவர்கள் சராசரி மனிதர்கள். உயிரில் மனத்தைப் பதித்து, அதைப் பற்றிச் சிந்தித்து, வாழ்வை உயர்த்திக் கொள்ளுகிறவர்கள் ஞானிகள்.

உயர்வு, தாழ்வு, விருப்பு, வெறுப்பு இவையெல்லாம் உலகத்தில் தோன்றுவதற்குக் காரணம் மனம்தான். மனம் என்றால் இரண்டு பேர் மனத்தையும் தான் சொல்லுகிறேன். எடை போடுகிறவன் மனம். நிறுக்கப்படுகிறவன் மனம். இரண்டும்தாம் மனிதகுல உயர்வு தாழ்வுகளுக்குக் காரணம்.

மகாபாரதப் போர்க்களம்... கர்ணனின் தேர்ச் சக்கரம் சகதியில் சிக்கிக் கிடக்கிறது. சக்கரத்தை எடுக்கப் போராடுகிறான் கர்ணன். முடியவில்லை.

அம்புகளால் ஆன பின்னல் மின்னல்களை ஏவிக் கொண்டே இருந்தான் அருச்சுனன். எதுவும் கர்ணனைக் காயப் படுத்தவில்லை! பார்த்தனுக்கு ஆச்சர்யம். கண்ணனோ சிரித்தபடி சொன்னான்: ''போரை நிறுத்து, அர்ஜுனா! உன் அம்பு வற்றினாலும் அவன் ஆயுள் வற்றாது.''

இப்படிச் சொன்ன கண்ண பெருமானை அடுத்த விநாடி காணவில்லை. கர்ணன் முன்பாக அந்தண வடிவத்தில் நிற்கிறான் அவன். கர்ணன் முகத்தை உற்று நோக்கினான் கண்ணன். அதில்தான் எவ்வளவு சிவப்பு!

சூரியகுமாரன் என்பதால் விடியலின் இளஞ்சிவப்பு.. வில் வித்தையும் பல் வித்தையும் கற்ற அறிவின் ஒளிச் சிவப்பு.. எங்கு போனாலும் ''நீ யார் பிள்ளை?'' எனக் கேட்கப்பட்டு, ''ஓ... தந்தை பெயர் தெரியாத பிள்ளையா?'' என்ற அவமானச் சிவப்பு... வறுமையால் வாடி நிற்பவர் வருத்தமான முகங்களைப் பார்த்ததும் விளைந்த அதிர்ச்சியின் சிவப்பு... வாரிக் கொடுத்த கொடையைக் குறித்து வார்த்தை மலர்களை, வந்தவர்கள் வாரியிறைக்க, புகழை மறுக்கும் நாணத்தின் மென் சிவப்பு... இத்தனைச் சிவப்பையும் வெல்லும் வகையில் இன்று அர்ஜுனன் எறிந்த கணைகளால் விளைந்த இரத்தச் சிவப்பு...

அந்தச் சிவப்பு முகத்தை ரசித்தபடி அந்தண வடிவில் வந்த கண்ணன் ஆரம்பித்தான்!

''ஐயா... நீங்கள் எப்போது, எது கேட்டாலும் தரும் வள்ளல் என்று அறிந்து தான், போர்க்களம் என்றும் பாராது கொடை கேட்க வந்தேன்... தருவீரா?''

உள்ளும் புறமும் மூச்சுக் காற்று சடுகுடு ஆடும் இறுதி நேரத்திலும் அந்த வள்ளலின் வதனம் மலர்ந்தது... ''ஐயா! இந்தப் பாவி அள்ளிக் கொடுத்தபோதெல்லாம் வராது இப்போது வந்திருக்கிறீர்களே! ஒரே ஒரு விண்ணப்பம்... இருப்பதாக... என்னிடம் இருப்பதாகக் கேளுங்கள், தருகிறேன்.''


''எனக்குப் பொன்னோ மணியோ வேண்டாம். நீர் பலமுறை தானம் செய்து புண்ணியம் ஈட்டியவர். அந்தப் புண்ணியங்களை எல்லாம் எனக்குத் தந்து விடுங்கள்!'' சர்வசாதாரணமாகக் கேட்டான் கண்ணபிரான்.

தானம் செய்வதே புண்ணியங்களைப் பெற வேண்டும் என்ற ஆசையால்தான். இது என்ன அநியாயம்? அதையே கொடுப்பது என்றால் பிறகு தானம் எதற்காக? எதைத்தான் கேட்பது என்ற வரையறையே இல்லையா?

வில்லிபுத்தூர் ஆழ்வார் பாடலில், ''அந்தணரே... நீர் பிரம்மாவை விட உயர்ந்தவர்...'' என்று தொடங்குகிறான் கர்ணன். பிரம்மாவை விடப் பெரியவர் என்றால் திருமால் என்பது பொருள். வந்திருப்பவன் கண்ணன் என்பதைக் கர்ணன் உணர்ந்து கொண்டான்.

முக்காலத்தையும் மனத்தில் வைத்துக் கொண்டு கர்ணன், ''நான் செய்த, செய்கிற, செய்யப் போகிற புண்ணியங்கள் உட்பட

சுகி சிவம்



உமக்கே தந்தேன்'' என்றான்.

செய்யப் போகிற புண்ணியம் ஏது? அந்தணருக்குப் புண்ணியங்களைத் தருவ தால் வரும் எதிர்காலப் புண்ணியம் உட்பட 'எல்லாம் தந்தேன்' என்று தருகிறான்.

தன்னைப் பலவீனப்படுத்த, கொல்ல, கண்ணன் யாசகம் கேட்கிறான் என்று வருத் தப்படவில்லை அவன் மனம். 'கடவுளே தன்னிடம் கையேந்துகிறார்! அவருக்குத் தானம் தருவது எத்தனை உயர்ந்த வாய்ப்பு!' என்று மகிழ்கிறது! இன்ப துன்பங்களுக்கு மனம்தானே காரணம். மனம் எப்படி அர்த்தம் செய்து கொள்கிறதோ அதுதான் வாழ்க்கைக்கு அர்த்தம்.

புண்ணியங்களைத் தாரை வார்த்துக் கொடுக்கத் தண்ணீர் வேண்டுமே! தானம் கொடுப்பதானால் மனைவி ஒரு உத்தரணி தண்ணீர் தெளிப்பது, மரபல்லவா? ஒவ் வொரு மனிதனின் இடதுபாகமும் மனை விக்கு உரியது. எனவே இடது பகுதியில் இதயத்தில் பதிந்திருந்த அம்பை அசைத் தான் கர்ணன்.. குருதி வழிந்தது... இரத்தத்தைக் கையில் வாங்கி, கண்ண பெருமான் கைகளில் தாரை வார்த்தபடி புண்ணியங்களைத் தானம் கொடுத்தான்.

கடவுள் கை தாழ்ந்தது. மனிதன் கை உயர்ந்தது. மனசுதான் காரணம். கொடுக் கிற எண்ணம் உயர்ந்தது. வாங்குகிற எண்ணம் தாழ்ந்தது. சொட்டுச் சொட்டாகக் குருதி கண்ணபெருமான் கைகளில் பட்டதும் தாமரைக் கண்ணன் இதழ்களைப் போலவே இதயமும் சிவந்தது. குறுநகை தவழக் கேட்டான்:

''கர்ணா... உனக்கு வேண்டிய வரங்களைச் சொல்... என்ன என்ன வேண்டுமோ கேள்'' என்றான் உற்சாகமாக. வாங்க வந்தவன் கொடுப்பதாகச் சொல்வது விந்தை அல்லவா! கொடுத்துப் பழகிய கர்ணன் இரத்தம் கையில் பட்டதும், வாங்க வந்தவனுக்கும் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது! வலிமையான எண் ணங்கள் எதிரே இருப்பவர்களையும் ஊடுருவும். அவர்களையும் தூண்டும்.

கர்ணன் கேட்டான்:

''இறைவா... இனிமேல் பிறவி வேண் டாம்.. இன்னொரு பிறப்பு உண்டு என்பது விதி என்றால் அப்போதும், இல்லை என்று சொல்லாது கொடுக்கிற மனம் எனக்கு வேண்டும்.''

கொடுப்பதற்குத் தேவையான பணம் கேட்கவில்லை; மனம்தான் கேட்டான்! மனசுதான் எல்லாம்!

(இன்னும் சொல்வேன்)

மாறும் முடிவுகள்

மோட்டார் சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திவிட்டு, தலையை 'ரியர் வியூ' கண்ணாடியில் சரிபார்த்தபடி வங்கியினுள் நுழைந்தான் சந்தர்.

நாளை ஊருக்குச் செல்ல வேண்டும்.

அப்பா அவசரமாக மூவாயிரம் ரூபாய் கேட்டு எழுதியிருந்தார்.

வங்கி பதினோரு மணியின் சுறுசுறுப்பில் இயங்கிக் கொண்டிருந்தது.

கணக்குப் புத்தகத்தையும், பணம் எடுக்கும் 'வித் ட்ராயல்' ஸ்லிப்பையும் கவுண்டரில் கொடுத்து டோக்கன் பெற்றுக் கொண்டான்.

யதேச்சையாக வங்கியின் இடதுபுறம் திரும்பினான்.

''ஹேய், பானு!'' - தன்னையுமறியாமல் கூவிவிட்டான்.

அதே நேரத்தில் பானுவும் திரும்பிப் பார்க்க அவள் கண்களிலும் வியப்பும், மலர்ச்சியும்.

அவசரமாய் வங்கியின் உட்புறத்திலிருந்து வெளியே வந்தாள்.

''சந்தர்... நீயா?''

''நான் கேட்க வேண்டிய கேள்வி இது. என்ன அதிசயம்? நீ எப்படி இங்கே? கடந்த மூணு வருஷமா நான் இந்த வங்கிக்கு வரேன். உன்னைப் பார்த்ததே இல்லையே?''

''போன வாரம்தான் இந்தக் கிளையிலே சேர்ந்தேன். முதல் போஸ்டிங்கே இங்கேதான்.''

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்த சந்தோஷத்தில் சில வினாடிகள் திளைத்தனர்.

''நான் பிரைவேட் கம்பெனியில் அக்கவுன்ட்ஸ் மானேஜரா இருக்கேன். லாட்ஜ் அறை வாசம். ஹோட்டல் சாப்பாடு.''

''நான் கூட வேலைக்குப் போகும் பெண்கள் விடுதியிலேதான் தங்கியிருக்கேன். பீமநகரில்....''

''அப்பா, அம்மால்லாம்.....'' என்று இழுத்தான்.

''நல்லா இருக்காங்க. மாமா, மாமி சௌக்கியமா?''

''ம்! அப்பா கேட்டார்னுதான் பணம் எடுக்க வந்தேன்.... எத்தனை வருஷமாச்சு உன்னைப் பார்த்து!''

''எனக்குக் கூட சந்தோஷமா இருக்கு சந்தர். தேவையில்லாத ஒரு குழப்பத்துல பிரிஞ்சுட்டோம்.''

சில கணங்கள் பழைய நினைவுகளில் ஆழ்ந்தனர். சட்டென்று வேலை நினைவுக்கு வர, ''நான் வரேன் சந்தர்; அப்புறம் பார்க்கலாம்'' என்றாள்.

எங்கே, எப்போ என்று உறுதிப்படுத்திக் கொண்டுதான் விடை பெற்றான் சந்தர்.

அது ஒரு ஸ்டோர் மாதிரியான குடியிருப்புப் பகுதி.

பசுபதியின் வீடும், கந்தசாமியின் வீடும் அடுத்தடுத்து இருந்தன.

பத்து வருடங்களாக இரண்டு குடும்பங்களுக்கும் இடையில் நட்பு ஆல்போலத் தழைத்து வளர்ந்திருந்தது.

ஒருவர் வீட்டுக்குத் தெரியாமல் மற்றொருவர் வீட்டில் எந்த ஒரு நிகழ்ச்சியும் நடந்ததில்லை.

ஆனால் இதெல்லாம் அந்த ஒரு சம்பவம் வரைதான்....

''டேய் சந்தர், எங்கேடா கிளம்பிட்ட?''

''மணி வீட்டுக்குப்பா.''

''சீக்கிரம் திரும்பிடு. நானும், கந்தசாமியும் வெளியிலே போறோம். அம்மாவும், மாமியும் கூட வராங்க. பானு தனியா இருப்பா.''

''சரிப்பா.''

''அவ கூட உன்னிடம் பாடத்துல ஏதோ சந்தேகம் கேட்கணும்னா. பரீட்சை வேற வருது. நீயும் ஊரைச் சுத்தாமப் படி. என்ன?''

தலையாட்டினான். சந்தர் பி.காம் மூன்றாம் ஆண்டு படிக்கிறான். பானுமதி பி.காம் முதல் வருடம்.

முக்கியமான நோட்ஸ் ஒன்றை வாங்கிக் கொண்டு திரும்பினான் சந்தர்.

''ஏய், என்ன படிக்காமல் டீ.வி பார்க்கறே?'' - பானுவை அதட்டியபடி அவள் போர்ஷனுக்குள் நுழைந்தான்.

''உனக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கேன். அக்கவுண்டன்சியிலே ஒரு ப்ராப்ளம் தெரியலே. சொல்லிக் கொடேன்.''

''முதல்ல டீ.வியை அணை. இப்படி வந்து உட்காரு'' என்று அருகிலிருந்த இருக்கையைக் காட்டினான்.

நோட்டில் அவன் அந்த ப்ராப்ளத்தைப்

கிருஷ்ணா

போடப்போட பாடத்தில் கவனமாய் ஆழ்ந் தனர் இருவரும்.

''மக்கு, இப்படியா சொன்னேன்'' என்று தலையில் உரிமையுடன் குட்டினான் சந்தர்.

''ஏய், என்ன அடிக்கற? வாத்தியார் அடிச்ச காலமெல்லாம் போச்சு. இப்ப மாணவர்கள் அடிக்கற காலம்,'' என்று முறைத்தாள்.

அப்போது மின் இணைப்பு துண்டிக்கப் பட்டு இருட்டாகியது.

''அடச்சே!'' என்றான் சந்தர். ''சரி, நான் வீட்டுக்குப் போயிட்டு லைட் வந்தப்புறம் வரேன்.''

சட்டென்று அவன் கரத்தைப் பற்றினாள். ''என்னைத் தனியா விட்டுட்டுப் போகாதே சந்தர்... ஊரே கெட்டுகிடக்கு.''

''பயந்தாங்குளி'' என்று சிரித்தான். சற்று விலகி அமர்ந்தான்.

அந்தச் சமயம் பார்த்துத்தானா கிச்சாமி யும் அவர் மனைவியும் வர வேண்டும்?'' ஹலோ! வீட்டில யாரு?'' என்றார் கிச்சாமி.

''நானும் பானுவும்தான் மாமா. பாடம் படிச்சிட்டிருந்தோம். சமயம் பார்த்து கரண்ட் கட்.''

''ஓ! பாடமா! ஆமாம் பரீட்சை கிட் டத்துல வரதுல்ல!''

''எங்க, அம்மா, அப்பா எல்லாம்...?'' என்றாள் கிச்சாமியின் மனைவி வைதேகி.

''அவங்கள்ளாம் வெளியில போயிருக் காங்க... வர ஒரு மணி நேரமாகும். உக்காருங்களேன்'' என்றாள் பானு. ''மோடா, நாற்காலி எங்க இருக்குன்னு தான் தெரியலே!''

''வெளியில போயிருக்காளா...? வர ஒரு மணி நேரம் ஆகுமா... ரொம்ப சௌகரி யமாப் போச்சு...'' என்று மறுபடி கிண்ட லடித்தார் கிச்சாமி.

''அப்பா அம்மா வந்தா நாங்க வந்து போனோம்னு சொல்லுங்க'' என்றாள் வைதேகி. இருவரும் வெளியேறினர்.

இந்தத் தற்செயலான நிகழ்வு தங்கள் வாழ்க்கையில் ஒரு புயலையே உருவாக்கும் என்று பானுவோ சந்தரோ நினைக்கவேயில்லை. மூன்றாம் நாள் மாலை இருவரது பெற்றோரும் அவர் களைக் கூப்பிட்டு வைத்து ''உங்களுக்குக் கல்யாண ஏற்பாடு பண்ணலாம்னு இருக்கோம்'' என்றதும் திகைத்தார்கள்.

''ஏன் இந்தத் திடீர் முடிவு?'' - சந்தர்தான் முதலில் சுயநிலைக்கு வந்து கேட்டான்.

''ஏன்னா -- ஊரெல்லாம் உங்களைப்



அருள்வாக்கு



பல தெய்வங்கள் ஏன் ?

ஜன ஸமூஹத்துக்குப் பொதுவாக அநுபவங்களை நானா விதமான ருசி பேதங்களில் நுகர்வதுதான் இயற்கை குணம். ஆகாரம் பல சுவைகளில் இருக்கணும். ஒன்றே இருந்தால் திகட்டிப் போகிறது. கதை, நாடகம் என்றாலும் பல ரஸங்கள் இருக்கணும். பாட்டு என்றால் பல ராகங்களில் தாளங்களில் இருக்கணும். விறுவிறுப்பாகவும் வேணும்; விளம்ப மாகவும் வேணும். உபாஸனை என்று வரும் போது இப்படி நானா தினுஸாக உள்ள வைசித்ரியம் (விசித்ரத் தன்மை) வேண்டும். முடிவிலே ஸமாதி யோகம், வேறே கலப்பேயில்லாமல் ஒரே ஒரு உணர்வாக— 'ஏகப் பேருணர்வாக' என் பார்கள்— அப்படி மனஸின் ஆட்டமே இல்லாமல் ஆக வேண்டும் என்றாலும், அது எங்கேயோ, எப்போதோ, எவ ருக்கோதான் லபிக்கிற ஸ்திதி. அந்த ஸ்திதிக்குப் போவதற்கே, அலை பாய்கிற இந்த மனஸை வைத்துக் கொண்டுதான் உபாஸனையை ஆரம்பிக்கும் போது, அலை அலையாகப் பாய்ந்தாலும், பாய்கிறதெல்லாம் நம்மை ஸம்ஸாரத்தில் மூழ்கடிக்கிற அலைகளாக இல்லாமல், ஏதோ ஒரு தினுசில், ஏதோ ஒரு அளவில் ஈச்வர ஸ்மரணத்தில் நனைப்பதாக இருக்கட்டும் என்றுதான் வைசித்ரிய ருசி கொண்ட மனஸுக்குப் பிடித்த மாதிரியே ஏக பரமேச்வரன் பல திவ்ய ரூபங்கள் எடுத்துக் கொண்டு பலவிதமான பலன் தருவது. பூஜா பத்ததியையும் பலவிதமாகக் கொடுத்து, ஒன்றுக்கு (ஒரு தெய்வத்துக்கு) வில்வம், ஒன்றுக்குத் துளஸி, ஒன்றுக்கு வெல்லச் சீடை, ஒன்றுக்குக் கொழுக்கட்டை என்று வைத்திருப்பதெல்லாம். இதுதான் பெரும் பாலான ஜனங் களுக்கு அதாவது 'வழக்கு' என்பது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்க ராச்சார்ய ஸ்வாமிகள்.

பத்திப் பேச ஆரம்பிச்சாச்சு...''

கிச்சாமி மாமா வைதேகி மாமியின் பேச்சில் தொனித்த எகத்தாளத்துக்கு இப் போது அர்த்தம் புரிந்தது.

''இது அநியாயம்'' என்றான் சந்தர். ''கிச்சாமி என்ற ஒரு விகார மனம் கொண்டவனுக்குப் பயந்து, அவன் வதந்தி களைப் பரப்புகிறான் என்பதற்காக, நான் ஒரு காரியம் பண்ண முடியாது. ரெண் டாவது நான் பி.ஏ. முடிக்கிறவரை கல்யா ணம் செய்துக்கறதா இல்லே...''

சந்தர் உறுதியாய் மறுக்க, பானு ரெண் டுங்கெட்டான் வயதாய் விழிக்க, அவர்கள் பெற்றோர்களுக்குள் விரிசல் விழத் தொடங் கியது.

அடுத்த ஒரு மாதத்தில் இரண்டு குடும் பங்களும் வேறு, வேறு திசைகளில் இடம் பெயர்ந்தன.

ஐந்து, ஆறு வருடங்கள் ஓடிவிட்டன. சந்தர் தான் எண்ணிய படியே பி.ஏ. படித்து இதோ அக்கவுண்ட்ஸ் மானேஜராய் இருக்கி றான்.

மறுபடி சந்தித்தார்கள்.

''பானு, நான் கல்யாணத்தை அப்போ மறுத்தது சரிதானே. உனக்கு ஒண்ணும் கோபமோ, பாதிப்போ இல்லையே?''

''சேச்சே! கல்யாணத்தைப் பற்றிய எண்ணமே என் மனசுல அப்போ இல்லை. நீ மறுத்தது எனக்கு எவ்வளவு பெரிய நிம்மதியைக் கொடுத்தது தெரியுமா?''

''நல்லவேளை, எனக்கு உன்னைப் பற்றித்தான் கவலையா இருந்தது, பானு. இந்த அதிர்ச்சியில உன் வாழ்க்கை பாழாயிடப் போகுதேன்னு.''

''அன்றைக்கு நீ உறுதியா இருந்ததாலேதான் இப்ப நாம ரெண்டு

பேருமே சொந்தக் காலில் தன்னம்பிக்கையோடு நிக்கறோம்.''

கோயிலின் வெளிப் பிராகாரத்தில் இருவரும் அமர்ந்திருந்தனர். ''ஆனால் இத்தனை வருஷங்களிலே உன்னை நான் ஒரு நாள் கூட மறந்ததில்லே பானு'' அவள் கண்களை ஊடுருவினான்.

இருவர் பார்வையும் கவ்வி நின்று பிரிந்தன.

''இதுக்கு என்ன அர்த்தம் சந்தர்?''

''இது, எப்போ எப்படி ஏற்பட்டதுன்னு தெரியலே பானு. ஒருவேளை சிறு வயதிலிருந்தே மனசுக்குள்ளே பதிஞ்சு நாம் பிரிய நேர்ந்தபோது வெளிப்பட்டதா... புரியலே. ஏன் பானு, நம்ம பெற்றோர் அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி ஆசைப் பட்டதை நாம ஏன் இப்ப யோசிக்கக் கூடாது?''

பானு தலை குனிந்தாள்.

''என்ன பானு?''

''பெண்கள் எல்லாவற்றையும் வாய் விட்டுச் சொல்லுவாங்கன்னு எதிர்பார்க்காதே சந்தர்.''

''யா...!'' என்று சந்தோஷக் கூச்ச விட்டான். ''நாளைக்கே நாம ரெண்டு பேரும் நம்ம வீட்டுக்கு, இதைப் பற்றி எழுதிடுவோம், என்ன?''

ஆமோதித்தாள் பானு. ''ஆனால்....''

''ஆனால் என்ன பானு?''

''ஒருவேளை அவங்க இப்ப நம்ம யோசனைக்குச் சம்மதிக்கலேன்னா....? இப்ப சூழ்நிலையே மாறிடிச்சே சந்தர்?''

''அன்னிக்கு அவங்களை எதிர்த்த மாதிரியே இப்பவும் எதிர்ப்போம். அன்று போலவே இப்பவும் அந்த எதிர்ப்பில் உறுதியா இருப்போம்!''

''நல்ல வேடிக்கை; சிரிக்கிறதா அழறதான்னே புரியலை!''

''அன்னிக்கு நான் பெற்றோரை எதிர்த்ததிலே ஒரு நியாயம் இருந்தது பானு. இன்னைக்கு மறுபடி எதிர்க்க நேர்ந்தால் அதிலும் நியாயம் உண்டு'' என்றான் சந்தர். கோயில் மணி ஒலித்தது. சிலிர்த்தனர்.

நல்ல வேளையாகப் பானுவோ சந்தரோ வாதாடி எதிர்க்கத் தேவையில்லாமல் பெற்றோர் இரு தரப்பிலுமே சம்மதம் தெரிவித்து விட்டனர்!

''இந்தப் பயலுக்குப் பானு பேரிலே ஒரு கண்ணுன்னு எனக்கு ஐந்தாறு வருஷங்களுக்கு முன்னாடியே தெரியும்! அன்னிக்கே நான் சொன்னேனா இல்லையா, கேட்டுப் பாருங்க! இந்தப் பெண்ணுக்கும் அப்பவே சந்தர்கிட்ட ஒரு இதுதான்!'' என்று அட்டகாசமாக ஆர்ப்பரித்துக் கொண்டு கல்யாண மண்டபத் துக்குள் நுழைந்தார் கிச்சாமி. ஒரு வித்தியாசம். இப்போது பானுவுக்கும் சந்தருக் கும் அவர் மீது கோபம் வரவில்லை. சிரித்து மகிழ்ந் தார்கள்!

மதிப்பிற்குரிய மனைவி



சாருப்ரபா சுந்தர்

கதவைத் திறந்ததும் தென்பட்ட மனிதர்கள் கை குவித்தார்கள்: ''வணக்கம் புரொபஸர் சார்.''

'வணக்கம்' என்றேன் நான். சொல்லும் போது என் புருவங்களுக்கு மத்தியில் ஒரு மானசிகக் கேள்விக்குறி அமைந்து, அடுத்தடுத்த வினாடிகளில் அழிரப்பரால் அந்த கேள்விக் குறி அழிக்கப்பட்டு, நினைவுக்கு வந்து விட்டது - அவர்கள் எதிர்வீட்டு மணவாளன் சாரின் உறவுக்காரர்கள். மற்ற இருவர்...

''வாருங்கள்.''

உள்ளே வந்து அவர்கள் அமர்ந்ததும், நடுவில் எதிரில் நான். ஐஸ் பெட்டி திறந்து, வெளிச்சம், நெளியும் பனி வளையங்களுக்கு மத்தியில் இருந்து குளிர்ப் பதனம்.

''வெகு நாட்கள் ஆயிற்றில்லையா நீங்கள் வந்து போய்?''

''இருக்கும்'' - என்றார் ஒருவர்.

''ஆமாம். மணவாளன் சம்சாரம் இறந்த போது வந்து பார்த்தது. அந்த இரண்டு மூன்று நாட்கள் கூட்டம் அதிகம் என்று உங்கள் வீட்டில்தானே தங்கிக் கொண்டோம்? தாராள மனசு சார் உங்களுக்கு'' என்றார்கள் குளிர்ப்பதன கண்ணாடி டம்ளரை மோடாவில் வைத்தபடி.

''அதில் என்ன பெரிசாய்? மனிதாபிமானம். அவ்வளவுதான்.''

''அதற்கும் மனசு இருக்க வேண்டுமே.''

அவர்களின் புகழ்ச்சி அட்சதையைச் சுகமாய்ச் சூடிக் கொண்டு கேட்டேன், ''என்ன திடீர் வருகை?''

எதிரில் இருந்த மீசைக்காரரின் ஆதாம் ஆப்பிள் அசைந்தது.

''ஆமாம் ஐயா. மண வாளன் சம்சாரம் இறந்து கிட்டத்தட்ட ஏழு மாசம் ஆயாச்சு. அவருக்கும் வயசு நாப்பது தொடலை. வாழ்க்கையின் இன் னும் எத்தனையோ மிச்ச வருடங்கள். துணை வேண்டாமா?'' அதற்காகத்தான் பேச வந்திருக்கோம். நீங்களும் உடன் வந்தால் நன்றாக, உதவி யாக இருக்கும்.''

''அது.. அது வந்து..'' - தடுமாறினேன் நான். ''அவர் மனைவி இறந்து இன்னும் ஒரு வருஷம் கூட முடியலை. அதற்குள் கல்யாணப் பேச்சு... இங்கிதமாக இருக் குமா? அதுவும் இல்லாம...''

''துக்க நாட்களுக்குள்ள சுபகாரியம் பேசினா நல்லதுன்னு ஒரு நம்பிக்கை உண்டு. இப்ப ஆரம்பிச்சா, சம்மதிக்க வச்சு, பெண் தேடி, எளிமையாக் கல்யாணம்னு நாலைஞ்சு மாசம் ஓடிடாதா? அதுக்குள்ள முதல் வருஷ துக்கம் முடிஞ்சிடுமே!''

''இருக்கலாம். ஆனா நான்...''

''என்ன சார் தயங்கறீங்க? உங்க வீட்டில் ஆட்சேபணை எதுவும் சொல்லுவாங் கன்னா? பட்டணத்து ஆட்கள் அக்கம்பக்க விவகாரங்கள்ல அதிகம் தலையிட மாட் டாங்கதான். ஆனா உங்க நல்ல மனசு, உத வும் சுபாவம்னு.. மறுக்க மாட்டீங்க. அவங் களைக் கூப்பிடுங்களேன். நாங்களும் ஒரு வார்த்தை கேட்டுக்கறோம்.''

''பள்ளிக்கூட விடுமுறை. உறவுக்காரங்க வீட்டுக்குப் போயிருக்காப்பல. நாளை மறு நாள் வந்திடுவாங்க. இருந்தாலும் அவங்க தடுக்க மாட்டாங்க. அது இல்லை பிரச்னை. பேசறதுக்கு மணவாளன் பிடிகொடுப் பாரா?''

''ஓஹோ. அதை யோசிக்கறீங்களா? வாஸ்தவம்தான். மணவாளன் சம்சாரத்து மேல உயிரையே வச்சிருந்தவர்தான். லவ் மேரேஜ் ஆச்சே! பேசினா பிடிகொடுக்கறது சிரமம்தான். ஆனா அந்த விலாங்கு மீனை பிடிக்க வழிக்குக் கொண்டு வர்றது படிச்ச மனுஷர் உங்களால் முடியும். எந்த வழி யிலும் சாக்கு போக்கு சொல்லக் கூடா துன்னு மணவாளன் பக்கம், அவர் சம்சாரம் பக்கம்னு எல்லா உறவு ஜனத்துலயும் ஒரொரு பிரதிநிதியா வந்திருக்கோம்.''

நான் யோசித்தேன்.


மணவாளனைப் பார்த்தே நாளாயிற்று. நான் காலேஜ், கமிட்டி, மிகுந்த நேரங்களில் மேடை, பட்டிமன்றம் என்று நேரம் போறாத மனிதன். அவரும் பிஸினெஸ், பிஸினெஸ் என்று ஈடுபடுத்திக் கொள்கிற மனிதர். சந்திப்பதே அபூர்வமாயிற்று இப் போது. பக்கத்து நகர நண்பர், வானொலி நிலைய அதிகாரி ஒரு நிகழ்ச்சிக்குத் தொடர்ந்து கேட்டுக் கொண்டார்: 'உதா ரணத்துக்கு இந்த தம்பதிகள்' - என்கிற தலைப்பில் ஒரு கட்டுரை படிக்க. அதற்கு மணவாளனை வைத்துக் குறிப்பிட்டு ஸ்கிரிப்ட் எழுதி அனுப்பியாயிற்று. ஒரு மரியாதை நிமித்தம் தெரிவிக்கக்கூட சந் திக்க முடியாமல்.

''அது சரி, நீங்க வந்தீங்க. நானும் தயார். பேச, மணவாளன் ஊர்ல இருக்கணுமே.''

''அதிருஷ்டவசமா இருக்கார். வெளியில போயிருக்கார். ரெண்டு மணி நேரத்துல வந்திடுவேன்னு வாசல்ல சீட்டு எழுதி வச் சிருக்கார். நாங்களும் ஒரு சின்ன வேலையை முடிச்சிட்டு வந்திடறோம்.''

மணவாளனைக் கிட்டத்தட்ட எட்டு வரு டங்களாகப் பழக்கம். அந்தப் பகுதிக்குச் சொந்த வீடு கட்டிக் கொண்டு முதலில், வந்தவர்கள் என்கிற ரீதியில் அறிமுகமாகி, நெருங்கி... குறிப்பாகப் பெண்களுக்குள்.

எங்கள் பகுதியில் அவருக்கு நிறைய புனைபெயர்கள் உண்டு. இளம் பெண்க ளுக்கு... மணவாளன் பெயரில்தான் பழமை. பார்க்க புதிய அழகுடன், முரட்டு புஜம், கண்களை நிமிர்த்தி கண்களைப் பார்க்கும் உயரத்துடன், நிறம், நடை என்று வசீகர சிகரம். ஆனால் மணவாளன் அநாவசிய பார்வை இல்லாமல் மிக நாக



- கரம்.

ரீகமாகக் கடந்து போய் விடுவார். மிஸ்டர் ஜெண்டில்மேன்!

கல்யாணமான பெண்களுக்கு, அதற்கு முந்தைய அம்மா, பாட்டிமார் வகையறாக்களுக்கு வரலட்சுமி புருஷன்!

மணவாளன் வாரத்தில் மூன்று நாள் பிஸினஸ் நிமித்தம் வெளியூர்ப் பயணம். அங்கிருந்து துவக்கத்தில் எங்கள் வீட்டுத் தொலைபேசியில் அழைத்து மனைவியிடம் பேசிக் கொண்டிருப்பார். அவ்வளவு செலவழித்து, அதுவும் அரைமணி. முக்கால் மணி என்று பேச என்னதான் விஷயம் இருக்கிறதோ!

என் மனைவிக்குக் கூட இதில் ஆதங்கம் உண்டு.

''நீங்களும் இருக்கீங்களே, காலையில் முழுக்க இண்டு. சாயங்காலம் வந்ததும் வாரப் பத்திரிகைகள். கொஞ்சம் பேசவம்னு இருக்குமா, பேப்பர்தான உங்கள் பெண்டாட்டி. ஹும்ம்ம்...''

இப்படிப் பல ஆண்கள், அந்தத் தெருவில் மனைவிமார்களால் பற்பல விஷயங்களுக்கு வரலட்சுமி புருஷனால் இடிபட்டிருக்கிறோம். மனுஷன் அந்த அளவுக்கு உதாரண புருஷன்!

அதற்குத் திருஷ்டியாய் அமைந்தது மணவாளன் தம்பதிக்குக் குழந்தை இல்லையென்பதுதான்.

வரலட்சுமி இந்தக் குறையை என் மனைவியிடம் தனியில் சொல்லி அழுதிருக்கிறாள். தான் அழும் போது அணைத்து, சலிக்காமல் சமாதானப்படுத்தி, வார்த்தை சொல்லி... ''உனக்கு நான் குழந்தை. எனக்கு நீ குழந்தை. லீவ் இட்!'' என்று மணவாளன் சமாதானப்படுத்தியதையும் வர்ணித்திருக்கிறாள்.

திடீர் விபத்தில் வரலட்சுமி மரணம்! நாங்கள்தான் தேடி வெளியூரில் இருந்த கணவனிடம், ஜுரம் என்று பொய் சொல்லி வரவழைத்து... வந்து சேர்ந்து, நிலைமை புரிந்து கதறின மணவாளனைப் பார்த்துக் கல்மனகம் உருகிப் போயிற்று.

மணவாளனுக்கு முன்பே அதிகம் பேசாத சுபாவம். இதற்குப் பிறகு அவர் மேலும் தன் கூட்டுக்குள் சுருக்கிக் கொண்டு, ஊருக்குப் போகையில் அல்லது மனைவி படத்திற்கு மலர்ச்சரம் வாங்க என வெளிப்படுகிற சமயத்தில் மட்டுமே மூன்று செகண்டு புன்னகை. பேசினால் பிடி கொடுப்பாரா?

தயங்கித் தயங்கிப் பேச்சை ஆரம்பித்தோம். அவர் இதை எதிர்பார்க்கவில்லை மாதிரி புரிந்தது. வெறும் உறவுக்காரர்கள் மட்டும் வந்திருந்தால் முகத்தில் அடித்த பதிலுடன் திருப்பி அனுப்பியிருக்கலாம். நான் என்பதால் உப்புக்குச் சப்பாணியாய் ஒரு பதிலாவது தெரிவிக்க முற்பட்டார்.

''வேண்டுகோள் தர்மசங்கடமானதுதான். ஆனாலும் உங்க உறவுக்காரங்க ஆவலும் நியாயமானதுதான். நாப்பது வயசு கூட ஆகலை உங்களுக்கு. மிச்ச வருடங்களில் உங்களுக்கு ஒரு பிடிப்பு வேண்டாமா?''

விரக்தியாய்ச் சிக்கன சிரிப்பு சிரித்தார் மணவாளன்.

''இருந்தது ஒரே பிடிப்பு. அதுவும் போயாச்சு. கல்யாணம், குழந்தைன்னு யோசிக்கக்கூட எனக்கு இஷ்டமில்லை. அந்த அளவுக்கா நாங்க வாழ்ந்திருக்கோம்? எட்டு வருஷத்தில நூறு வருஷ தாம்பத்தியம் சார். ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சி, மனம் நோகாம, தோல்விகளைத் தாங்கி நம்பிக்கையூட்டி, ஒவ்வொரு கட்டத்திலயும் மேலும் நெருங்கி....''

''நிஜம் சார். மறுக்கலை. ஆனா யதார்த்தத்தில...''

''பிராக்டிகலா சொல்றேன் சார். தலை யசைச்சுச் சம்மதம் சொல்ல அரை விநாடி ஆகுமா? ஆனா அது எங்க தாம்பத்திய வாழ்க்கையை, அந்த அன்னியோன்னி யத்தை அர்த்தமில்லாம பண்ணிடுமே? என்னைப் பொறுத்தவரை பிடிப்புன்னா என் மனைவியோட நான் வாழ்ந்த நாட் களின் பசுமையான நினைவுகள் அப்படியே இருக்கு. அது போதும். அவள் சுவடுகள் மிச்சமிருக்கற இந்த வீட்டில், அவள் சுவாசிச்ச மிச்சமிருக்கற இந்த வீட்டுக் காற்றை சுவாசிச்சு... அது போதும் சார் எனக்கு...

எங்கள் முயற்சி தோல்வியாகி இரண்டு வாரங்களுக்குப் பிறகு பக்கத்து நகர வானொலி நிலையத்திலிருந்து அழைப்பு வந்தது. அவர்கள் கேட்டு, முன்பு அனுப்பி இருந்த, 'உதாரணத்துக்கு இந்த தம்பதிகள்' - அப்ருவ் ஆகி, நேரடி ஒலிபரப்புக்குப் படிக்க அழைத்திருந்தார்கள். அனுப்பி இருந்த பிரதியில் மேலும் சில அழுத்தமான வார்த்தைகளை அனுமதியுடன் சேர்த்து எழுதி, மனம் உருகப் படித்து முடித்தேன்.

பக்கத்தில் இருந்த ரெஸ்டாரண்டின் குளிர்ப்பதன டைனிங் அறை.

''ரொம்ப பிரமாதம் புரொபசர், உங்கள் கட்டுரை. நிஜத்தில் இப்படியெல்லாம் மனு ஷங்க இருப்பாங்களான்னு நம்பவே முடி யலை.''

பெருமூச்சுடன் பிரமித்தார் வானொலி நிலைய நண்பர்.

உணவு.

''ரெண்டு பக்கத்து உறவுக்காரர்கள், நீங்கன்னு எல்லோரும் வற்புறுத்தியும், வச தியும் இருந்தும் இன்னொரு கல்யா ணத்துக்குச் சம்மதிக்காம தாக்குபிடிச்சு பதில் சொல்லி இருக்காரே. இறந்து போன மனைவியின் நினைவுகளுக்கு எவ்வளவு கம்பீரமா கௌரவம் செய்கிறார்?''

''கிட்டத்தட்ட எட்டு வருட தாம்பத்திய வாழ்க்கை. அணுஅணுவாப் புரிஞ்சு நெருங் கின அன்னியோன்யம். நானும் துணைக் குப் போய் மணவாளன்கிட்ட மற்றொரு கல்யாணத்துக்குக் கேட்டுக் கிட்டதை இப்போ அவமானமா உணர்றேன் சார்.''

எழுந்து கொண்டோம்.


''இப்படிச் சிலரைப் பார்க்கறப்ப நிஜ வாழ்க்கைத் தவறுகள் நமக்குள் உறைக்க... நிஜமா என்கிட்ட இருக்கற சில குறை களை, கோபத்தை, மாற்றி விட்டுக் கொடுத்து வாழணும்னு ஒரு வேகமே வருது புரொபசர் சார்.'' - வானொலி நிலைய நண்பர், நிஜ உணர்ச்சியுடன் தெரி வித்தார்.

கை அலம்பும் பகுதி. கூட்டம். முன்பே சாப்பிட்டுச் சிலர் கை அலம்பிக் கொண்டி ருந்தனர். இருந்த இரண்டு வாஷ் பேசின் களையும் அவர்கள் முற்றுகை இட்டி ருந்தனர். எட்டு வயதில், ஏழு வயதில் என்று இரண்டு பெண் குழந்தைகள். மனைவி ஈரக்கை துடைக்கத் தடுமாறிய போது மிக அன்பும் ஆதுரமுமாகக் கண வன், தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்து கர்சீப் எடுத்துக் கொடுக்கையில் நெற்றிச் சுருங்கினேன்.

திரும்பினார்கள்.

என் வாழ்க்கையின் மிக மோசமான கட்டம் அது. அந்த மனிதரும் பார்த்து அதிர, மனைவி அவர் தோளிலும், இரண்டு வளர்ந்த குழந்தைகளும் அப்பாவென கைகளைப் பிடித்து ஊஞ்சலாட, நான் அந்த மனிதரை என் வானொலி நிலைய நண்பருக்கு அறிமுகப்படுத்த வேண்டிய தாயிற்று.

''மீட் மிஸ்டர் மணவாளன்.''



-நவநீதப்ரியா.

சிவகாமியின் சபதம்

முப்பத்து மூன்றாம் அத்தியாயம்

வரவேற்பு

வாத்திய கோஷத்தையும் ஆரவாரத்தையும் கேட்டு ஆயனரும் அத்தையும் அங்கே வந்து சேர்ந்தார்கள்.

ஜனக் கூட்டம் நெருங்கி வந்து கொண்டிருந்தது. கொஞ்ச தூரத்தில் கூட்டத்திலிருந்து ஒரு தனி உருவம் வெளிப்பட்டு முன்னதாக விரைந்து வந்தது. அந்த உருவத்தைப் பற்றி எவ்விதச் சந்தேகமும் ஏற்பட நியாயமில்லை. குண்டோதரனுடைய உருவந்தான் அது!

குமார சக்கரவர்த்திக்குப் பலமான கோபம் உண்டாயிற்று. ஆஹா! இந்த மூடன் என்ன காரியம் செய்தான்? 'குமார சக்கரவர்த்தி வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டார்; இங்கே வந்து ஒதுங்கியிருக்கிறார்!'' என்று ஊரிலே சொல்லியிருக்கிறான். இவ்விடம் தங்கும் சொற்ப நேரத்தைச் சிவகாமியிடம் பேசிக் கொண்டு கழிக்கலாம் என்று நினைத்தால், அதற்கு இடமில்லாமல் செய்து விட்டானே! சிவகாமிக்குச் சொல்ல வேண்டியது, கேட்க வேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கிறதே! சைனியமின்றித் தாம் தனித்து வந்திருப்பது பற்றியும், ஆயனரும் சிவகாமியும் தம்முடன் இருப்பது பற்றியும் அவர்கள் என்ன நினைப்பார்கள்?..... ஆ! இந்த மூடன் குண்டோதரன் எவ்வளவு சங்கடமான நிலையில் தம்மைக் கொண்டு வந்து வைத்து விட்டான்!

ஆயினும், அவனிடம் தற்போது கோபம் கொள்வதில் பயனில்லை. நடந்த தவறு நடந்து விட்டது. எப்படியோ இந்தச் சங்கடமான நிலைமையைச் சமாளித்தாக வேண்டும்......

இப்படிச் சிந்தனை செய்து கொண்டு சற்றுப் பின்னாலேயே மாமல்லர் ஒதுங்கி நின்ற போது, குண்டோதரன் தம்மிடம் வராமல் ஆயனரிடம் நின்று ஏதோ சொல்லுவதைப் பார்த்தார். பிறகு சிவகாமியின் காதோடு ஆயனர் ஏதோ சொன்னார். இருவரும் மாமல்லர் இருந்த திசையை நோக்கிப் புன்னகை புரிந்தார்கள்.

ஜனக் கூட்டம் இதற்குள் அருகில் வந்து விட்டது. கூட்டத் தலைவர்களாகத் தோன்றிய இருவர், பூரண கும்பத்துடனும் புஷ்பம் தாம்பூலம் பழம் வைத்திருந்த தட்டுக்களுடன் எல்லோருக்கும் முன்னால் வந்தார்கள். குண்டோதரன் அவர்களுக்கு ஆயனச் சிற்பியாரைச் சுட்டிக் காட்டினான்.

கிராமத் தலைவர்களில் ஒருவர் கூறினார்: உலகத்தில் எப்பேர்ப்பட்ட தீமையிலும் நன்மை ஒன்று உண்டு என்பார்கள். அது போல், திருப்பாற்கடல் ஏரி உடைப்பு எடுத்ததனால், எங்கள் கிராமம் பாக்கியம் செய்ததாயிற்று. சிற்ப சக்கரவர்த்தி ஆயன

அமரர் கல்கி

ரையும், பரத சாஸ்திர ராணி சிவகாமி தேவியையும் வரவேற்கும் பேறு எங்களுக்கு வாய்த்தது. வரவேண்டும், ஐயா! வருக, தேவி! உங்களுக்கும் உங்கள் சீடர்களுக்கும் எங்களால் முடிந்த சௌகரியங்களைச் செய்து கொடுக்கிறோம். எத்தனை நாள் முடியுமோ அத்தனை நாள் எங்கள் விருந்தினர்களாய்த் தங்கி இருக்க வேண்டுகிறோம்.''

இவ்விதம் கிராமத் தலைவர் கூறி முடித்ததும், ஆயனர், ''மகா ஜனங்களே! உங்களுடைய அன்புக்கு நானும் என் குமாரியும் என் சீடர்களும் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்! இந்த வெள்ளம் வடிகிற வரையில் உங்களுடைய விருந்தாளியாக நாங்கள் இருந்துதான் தீர வேண்டும்!'' என்றார்.

பிறகு, கிராமவாசிகளும் ஆயனர் முதலியோரும் கிராமம் இருந்த திசையை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

எல்லோருக்கும் பின்னால் தங்கியிருந்த மாமல்லரோ ஆச்சரியக் கடலில் மூழ்கியிருந்தார். அவர் எதிர்பார்த்ததற்கு முற்றும் மாறாகக் காரியங்கள் நடந்தன. சிவகாமி அவ்வப்போது கடைக்கண்ணால் பார்த்துப் புன்னகை செய்ததைத் தவிர, மற்றபடி அவர் ஒருவர் அங்கு இருப்பதையே கவனிப்பாரைக் காணோம்.

அவருடைய வியப்பிலே மகிழ்ச்சியும் கலந்திருந்தது என்பதைச் சொல்ல வேண்டியதில்லையல்லவா? 'குண்டோதரனை மூடன் என்று கருதியது எவ்வளவு தவறு? அவனுடைய புத்திக் கூர்மையே கூர்மை!' என்று அவர் எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் போதே, ''பிரபு! ஏன் நிற்கிறீர்கள்? போகலாம் வாருங்கள்!'' என்று குண்டோதரன் அவர் பின்னாலிருந்து காதோடு சொன்னான்.

''என்னை அவர்கள் அழைக்கவில்லையே? அழையாத இடத்துக்கு நான் எப்படிப் போவது?'' என்றார் மாமல்ல நரசிம்மர்.

''ஏன் அழைக்கவில்லை? ஆயனரிடம், 'உங்களுடைய சீடர்களுக்கும் வேண்டிய சௌகரியம் செய்து கொடுக்கிறோம்!' என்று சொன்னார்களே! காதில் விழவில்லையா? நீங்களும் நானும் ஆயனரின் சீடப் பிள்ளைகள்!'' என்றான் குண்டோதரன்.

''சத்ருக்னரின் ஆட்கள் எல்லாம் உன்னைப் போலவே புத்திசாலிகளாய் இருப்பார்களா, குண்டோதரா? அப்படியானால் ஆயிரம் புலிகேசி படையெடுத்து வந்தாலும் நாம் அத்தனை பேரையும் யுத்தத்தில் ஜயித்து விடலாம்!'' என்றார் மாமல்லர்.

ஆயனரின் 'சீடர்'கள் இருவரும் ஜனக் கூட்டத்துக்குச் சற்றுப் பின்தங்கிச் சென்றார்கள்.

மாமல்லர் அப்படி ரொம்பவும் பின்தங்கி விடவில்லையென்பதையும் சிவகாமியின் கடைக்கண் பார்வையைத் தெரிந்து கொள்ளக்கூடிய தூரத்திலேயே போனார் என்பதையும் உண்மையை முன்னிட்டு நாம் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

கிராமத்துக்குக் கிட்டத்தட்டப் போனபோது ஜனக் கூட்டம் மேலும் அதிகமாயிற்று. ஊரே திரண்டு வந்து விட்டது போல் தோன்றியது. ஊருக்குள்ளே ஒவ்வொரு வீட்டு வாசலிலும் விதவிதமான வர்ணக் கோலங்கள் போட்டு அலங்கரித்திருந்தார்கள். ஊர்வலத்தை ஆங்காங்கு நிறுத்திக் கிராமத்துப் பெண்மணிகள், சிவகாமிக்கு ஆரத்தி எடுத்தார்கள். கடைசியில், கிராமத்தின் கீழ்ப்புறத்திலிருந்த சிவாலயத்துக்கு அனைவரும் போய்ச் சேர்ந்தார்கள்.

ஆலயம் சின்னதுதான்; ஆனால் அழகாயும் சுத்தமாயும் இருந்தது. செங்கல் கண்ணாம்பினால் கட்டப்பட்ட வெளி மதிலைத் தாண்டி உள்ளே போனதும், விசாலமான பிராகாரம் ஒரு புல் பூண்டு இல்லாமல் வெகு சுத்தமாயிருந்தது.

பலிபீடம், துவஜஸ்தம்பம், நந்தி மேடை ஆகியவற்றைத் தாண்டிச் சென்றதும், அடியார்கள் நின்று தரிசனம் செய்வதற்குரிய அர்த்த மண்டபம் இருந்தது. ஓட்டினால் கூரைவேயப்பட்ட அர்த்த மண்டபத்துக்கு அப்பால் கர்ப்பக் கிருகம். இதன் மேலே, அப்போது புதிதாகத் தமிழகத்தில் வழக்கத்துக்கு வந்து கொண்டிருந்த தூங்கானை மாடம் அழகாக விளங்கிற்று.

கோவிலுக்குள் நுழையும்போதே சாம்பிராணி, சந்தனம் இவற்றின் ஸுகந்தமும், பன்னீர், பாரிஜாதம், செண்பகம், தாமரை முதலிய திவ்ய மலர்களின் நறுமணமும், நெய் விளக்கின் புகை, உடைத்த தேங்காய், உரித்த வாழைப்பழம், நாரத்தம்பழச் சாறு, பிழிந்த கரும்பின் ரசம் ஆகியவற்றின் ஸுவாசனையும் கலந்து வந்து, ஏதோ ஒரு தூய்மையான தனி உலகத்துக்குள்ளே வந்திருப்பது போன்ற உணர்ச்சியை உண்டாக்கின.

ஆயனரும் சிவகாமியும் ஆயனரின் சீடர்களும் அர்த்த மண்டபத்துக்குள் வந்ததும் சுவாமிக்குத் தீபாராதனை நடந்தது. பின்னர் அர்ச்சகர் அபிஷேக தீர்த்தமும் விபூதிப் பிரசாதமும் கொடுத் தார். அதே மாதிரி அம்பிகையின் சந்நிதியிலும் தீபாராதனை நடந்து குங்கும புஷ்பப் பிரஸா

தங்கள் அளிக்கப்பட்டன.

எல்லாம் ஆன பிறகு, அவர்களை வரவேற்ற கிராமத் தலைவர் ''ஆயனரே! தங்களுடைய குமாரியின் நடனவித்தைத் திறமையைக் குறித்து நாங்கள் ரொம்பவும் கேள்விப்பட்டிருக்கிறோம். எங்கள் பாக்கியவசத்தினால் எதிர்பாராதவிதமாக நீங்கள் இந்தக் கிராமத்துக்கு வரும்படி நேர்ந்தது. உங்களுக்கு இன்றைக்குத் தொந்திரவு கொடுக்க மனம் இல்லை. நாளைய தினம் தங்கள் குமாரி இந்தச் சந்நிதியில் நடனம் ஆடி எங்களை மகிழ்விக்க வேண்டும்!'' என்று விநயமாகக் கேட்டுக் கொண்டார்.

இதற்கு மறுமொழி என்ன சொல்வதென்று தெரியாதவராய் ஆயனர் சிவகாமியை நோக்கினார். அவளுடைய முகத்தைப் பார்த்ததும் ஆயனருக்கு மனக் கலக்கம் அதிகமாயிற்று. அவர்கள் நின்று கொண்டிருந்த அர்த்த மண்டபத்தில் மாமல்லர் எங்கே நிற்கிறார் என்பதைச் சிவகாமி ஏற்கெனவே தெரிந்து கொண்டிருந்தாள். இதுவரையில் வெகு ஜாக்கிரதையாக அந்தப் பக்கமே பார்க்காமலிருந்த அவளுடைய கண்கள் பளிச்சென்று மாமல்லருடைய முகத்தை ஏறிட்டு நோக்கின. சிவகாமியின் கண்களில் தோன்றிய கேள்விக்கு, மாமல்லரின் முகமலர்ச்சியும் அவருடைய கண்களில் தோன்றிய குதூகலமும் மறுமொழி தந்தன. மறுகணம் சிவகாமி ஆயனரை நோக்கி, ''ஆகட்டும். அப்பா!'' என்று மெல்லிய குரலில் கூறினாள்.

''ஆயனரே! தங்கள் அருமைக் குமாரியின் மறுமொழி எங்கள் காதிலும் விழுந்தது. மிகவும் சந்தோஷம்!'' என்றார் கிராமாதிகாரி. இதற்குள்ளே, மறுநாள் நடனம் ஆடச் சிவகாமி சம்மதித்து விட்டாள் என்ற செய்தி பரவி, அர்த்த மண்டபத்திலும் வெளிப் பிராகாரத்திலும் நின்று கொண்டிருந்த ஜனங்களுக்குள் கலகலப்பு ஏற்பட்டு அது ஆரவாரமாக மாறியது.

இந்தக் கலகலப்புக்கும் ஆரவாரத்துக்கும் இடையே, ஆயனர் கிராமத் தலைவரைப் பார்த்து, ''ஐயா! சிவகாமியின் நடனப் பயிற்சி நின்று ஏழெட்டு மாதமாகிறது. ஆனாலும் பாதகமில்லை. நீங்கள் காட்டும் அன்பானது சிவகாமியின் மனத்தை ரொம்பவும் கவர்ந்திருக்கிறது. ஆகையினால், நாளைக்கு உங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றி வைக்கச் சம்மதிக்கிறாள். ஆனால் சிவகாமியின் நடனக் கலையைப் பற்றி நீங்கள் இவ்வளவு தூரம் தெரிந்து கொண்டிருப்பது எனக்கு வியப்பாயிருக்கிறது. உங்களுக்கு எவ்விதம் தெரிந்ததோ? ஒருவேளை என் சிஷ்யன் குண்டோதரனுடைய வேலையோ இது?'' என்று கூறிக் குண்டோதரனை நோக்கினார்.

அப்போது கிராமத் தலைவர், ''இல்லை, ஐயா இல்லை! தங்கள் குமாரியைப் பற்றி ஏற்கெனவே எங்களுக்கு நாவுக்கரசர் பெருமான் தெரிவித்திருக்கிறார்'' என்றார்.

''ஆஹா! நாவுக்கரசர் இங்கே வந்திருந்தாரா? உங்களுடைய பாக்கியந்தான் என்ன!'' என்றார் ஆயனர்.

''நாங்கள் பாக்கியசாலிகள்தான். ஆறு மாதத்துக்கு முன்னால் நாவுக்கரசர் பெருமான் இந்தப் புண்ணியம் செய்த கிராமத்துக்கு வந்தார். அவருடைய திருக்கரத்தில் உழவாரப் படை பிடித்து இந்த ஆலயத்தின் பிராகாரத்தைச் சுத்தம் செய்தார். நாங்களும் அந்தத் திருப்பணியில் ஈடுபட்டோம். அன்றிரவு இந்தச் சந்நிதியில் நாவுக்கரசர் பெருமானின் சீடர்கள் அமுதொழுகும் தமிழ்ப் பதிகங்களைப் பாடினார்கள். அவற்றில்,

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம்
கேட்டாள்

என்னும் பதிகத்தைப் பாடிய போது, நாவுக்கரசர் பெருமானின் கண்களிலிருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் வந்தது.........''

இவ்விதம் கிராமத் தலைவர் கூறி வருகையில், ஆயனர், சிவகாமி, மாமல்லர் ஆகிய மூன்று பேருக்கும் ஏககாலத்தில் ரோமாஞ்சனம் உண்டாயிற்று. அத் தலைவர் மேலும் கூறினார்:

''பதிகம் முடிந்த பிறகு பெருமான் எங்களுக்குச் சிவகாமி தேவியின் நடனத்தைப் பற்றிக் கூறினார். தாங்கள் தங்கள் குமாரியுடன் காஞ்சியில் அப்பெருமானுடைய மடத்துக்கு வந்திருந்ததையும், அப்போது சிவகாமி இந்தப் பதிகத்துக்கு அபிநயம் பிடித்து மூர்ச்சித்ததையும் பற்றித் தெரிவித்தார். நேரில் இவ்வளவு விரைவில் உங்களையே வரவேற்கும் பாக்கியம் எங்களுக்குக் கிடைக்குமென்று அப்போது நாங்கள் கனவிலும் கருதவில்லை.''

''வாகீசப் பெருந்தகைக்கு எங்களுடைய ஞாபகம் இருந்தது, நாங்கள் செய்த புண்ணியம்!'' என்றார் ஆயனர்.


''நாவுக்கரசர் பெருமான் வந்து போன பிறகு இந்த ஊரில் அவருடைய திருப்பெயரால் ஒரு மடாலயம் கட்டியிருக்கிறோம். அந்த மடாலயத்தில் முதன் முதலாகத் தாங்களும் தங்கள் புதல்வியுந்தான் தங்கப் போகிறீர்கள். இதுவும் நாங்கள் செய்த புண்ணியந்தான்!'' என்றார் கிராமத் தலைவர்.

முப்பத்து நான்காம் அத்தியாயம்

நந்தி மேடை

அன்றிரவு இரண்டாம் ஜாமத்தின் மத்தியில் நாவுக்கரசர் மடாலயத்தின் வாசலில் மாமல்லரும், குண்டோதரனும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

சாயங்காலமே மேகங்கள் எல்லாம் கலைந்து வானம் துல்லியமாயிருந்தது. சரத்கால சந்திரன் பொழிந்த தாவள்யமான நிலவு அந்தச் சாதாரண கிராமத்தைக் கந்தர்வ லோகமாகச் செய்து கொண்டிருந்தது. சற்றுத் தூரத்தில், கிராமக் கோவிலின் தூங்கானை மாடத்துத் தங்க ஸ்தூபி 'தகதக'வென்று பிரகாசித்தது. அதற்கப்பால் தெரிந்த தென்னை மரங்களின் உச்சியில் பச்சை மட்டைகளின் மீது நிலா மதியின் கிரணங்கள், ரசவாத வித்தை செய்து கொண்டிருந்தன. தென்னை மட்டைகள் இளங்காற்றில் இலேசாக அசையும் போது, பச்சை ஓலைகள் பளிச்சென்று வெள்ளி ஓலைகளாக மாறுவதும், மீண்டும் அவை பச்சை நிறம் பெறுவதும் ஏதோ ஒரு




இந்திர ஜாலக் காட்சியாகவே தோன்றின.

''பிரபு! குபேர சம்பத்து வாய்ந்த அரண்மனை உப்பரிகையில் பஞ்சணை மெத்தையில் படுத்து உறங்க வேண்டிய தாங்கள், இந்த ஆண்டி மடத்துத் திண்ணையில் அநாதைப் பரதேசியைப் போல் படுத்து உறங்குவதா? அந்த எண்ணத்தையே என்னால் சகிக்க முடியவில்லையே!'' என்றான் குண்டோதரன்.

''குண்டோதரா! இத்தனை நேரமும் ஆயனரோடு விவாதம் செய்து ஒருவாறு முடிந்தது. நீயும் அதே பாட்டைப் பாட ஆரம்பித்து விட்டாயா? ...'' என்றார் மாமல்லர்.

குண்டோதரன் ஏதோ சொல்ல ஆரம்பித்தான். அதற்கிடங்கொடாமல் மாமல்லர் மறுபடியும் கூறினார்.

''என் தந்தை அப்படி என்னை அரண்மனை உப்பரிகையிலேயே எப்போதும் படுக்க வைத்து வளர்க்கவில்லை, குண்டோதரா! பஞ்சணை மெத்தையில் பரப்பிய முல்லைப் புஷ்பங்களின் மீது படுத்தும் எனக்குப் பழக்கம் உண்டு; நடுக்காட்டிலே மரத்தின் வேரைத் தலையணையாய்க் கொண்டு தரையில் படுத்தும் எனக்குப் பழக்கம் உண்டு. இந்த மடத்துத் திண்ணை வழவழவென்று தேய்ந்து எவ்வளவு மிருதுவாக இருக்கிறது?'' என்



னார் மாமல்லர்.

''பிரபு! தாங்கள் பரிகாசம் செய்கிறீர்கள். எனக்கோ வேதனையாயிருக்கிறது. இந்தக் கஷ்டம் தங்களுக்கு என்னால் வந்ததுதானே என்பதை எண்ணும்போது என் மனம் பதைக்கிறது. நான் மட்டும் ஒரு வார்த்தை இந்த ஊர்வாசிகளிடம் தாங்கள் இன்னார் என்பது பற்றிச் சொல்லியிருந்தால்?....''

''குண்டோதரா! பிசகான காரியம் செய்து விட்டுப் பிறகு வருத்தப்படுகிறவர்களை நான் கண்டதுண்டு. நல்ல காரியம் - புத்தி சாலித்தனமான காரியம் - செய்ததற்காக வருத்தப்படுகிறவர்களை நான் பார்த்த தில்லை. இப்போது உன்னைத்தான் பார்க்கிறேன். நான் சக்கரவர்த்தி குமாரன் என்பது தெரியாதபடி ஜனங்களுடன் கலந்து பழகும் சந்தர்ப்பம் கிடைக்காதா என்று எவ்வளவோ ஆவல் கொண்டிருந்தேன். அந்த ஆவல் இப்போது உன்னால் நிறைவேறுகிறது. ஆஹா! சிவகாமியின் நடனக் கலையின் புகழ் எவ்வளவு தூரம் பரவியிருக்கிறதென்பதை இன்று தெரிந்து கொண்டதில் எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?......''

''பிரபு! சிவகாமி தேவியின் நடனக் கலை யின் புகழ் மட்டும் இங்கே பரவியிருக்க வில்லை. புள்ளலூர்ப் போரின் கீர்த்தியும் இந்தக் கிராமம் வரையில் வந்து எட்டி யிருக்கிறது!''

''மெய்யாகவா, குண்டோதரா!''

''ஆம் பிரபு! அந்தச் சண்டையிலே குமார சக்கரவர்த்தி நிகழ்த்திய மகத்தான வீர ஸாகஸச் செயல்களைப் பற்றியும் இங்கே யெல்லாம் தெரிந்திருக்கிறது. அதையெல் லாம் பற்றிச் சவிஸ்தாரமாகச் சொல்ல வேண்டுமென்று கிராமவாசிகள் என்னைக் கேட்டுக் கொண்டார்கள். அவர்களுக்கு இராத்திரி சாவகாசமாய்ச் சொல்லுவதாக வாக்களித்திருக்கிறேன். இ ப் பே ா து கோவில் பிராகாரத்திலே அவர்கள் கூடி யிருப்பார்கள். நீங்களும் வருகிறீர்களா?'' என்று குண்டோதரன் கேட்டான்.

''வருகிறேன்; ஆனால் நீ ஏதாவது விஷ மம் செய்து என்னைக் காட்டிக் கொடுத்து விடக் கூடாது!'' என்றார் மாமல்லர்.

கோயில் பிராகாரத்தில் நந்தி மேடை யின் ப டி க் க ட் டி ல் குண்டோதரனும் மாமல்லரும் உட்கார்ந்திருந்தார்கள். நந்தி மேடை, பலிபீடம் இவற்றைச் சுற்றிப் பிராகாரத்தில் செங்கல் - சுண்ணாம்பினால் தளவரிசை போடப்பட்டிருந்தது. அந்தச் சுத்தமான தளத்தில் கிராமவாசிகள் பலர் உட்கார்ந்திருந்தார்கள்.

புள்ளலூர்ச் சண்டையைப் பற்றி அவர் களிடம் குண்டோதரன் சண்டப் பிரசண்ட மாக வர்ணனை செய்தான். அந்தச் சண்டை யிலே முக்கியமாகக் குமார சக்கரவர்த்தி மாமல்லர் காட்டிய தீர ஸாகஸங்களைப் பற்றி உற்சாகமாக விவரித்தான்.

''மாமல்லர் எப்படிப் போர் செய்தார் தெரியுமா? இந்தக் கணம் பார்த்தால் இங்கே இருப்பார்; மறுகணம் பார்த்தால் அதோ அந்த மதில் சுவருக்கு அப்பால் இருப்பார். அந்தப் பெரிய போர்க் களத் திலே மாமல்லர் எங்கே போரிட்டுக் கொண் டிருக்கிறார் என்பதை எந்த நேரத்திலும் கண்டுபிடித்து விடலாம். மகாவிஷ்ணுவின் சக்கராயுதத்தைப் போல் எங்கே ஒரு ஜொலிக்கும் வாள் அதிவேகமாகச் சுழன்று எதிரிகளின் தலைகளை வெட்டிக் குவித்துக் கொண்டிருக்கிறதோ, அங்கே மாமல்லர் இருக்கிறார் என்று தெரிந்து கொள்ளலாம். அப்படி மின்னல் வேகத்தில் வாளைச் சுழற்றிப் பகைவர்களை ஹதாஹதம் செய்யக்கூடிய வீராதி வீரர் வேறு யார்? மாமல்லருடைய வாளிலே அன்றைக்கு யமனே வந்து உட்கார்ந்திருந்தான். அவர் சக்கராகாரமாகச் சுழன்று வாளை வீசிய போது, ஒன்று, பத்து, ஆயிரம் என்று எதிரிகள் உயிரற்று விழுந்தார்கள்!....''

''ஆஹா! அபிமன்யு செய்த யுத்தம் மாதிரி அல்லவா இருக்கிறது!'' என்று கூட்டத்தில் ஒருவர் கூறினார். அந்த ஊரிலும் சில கால மாக மகாபாரதம் வாசிக்கப்பட்டு வந்தது. அதனால் எல்லாரும் அருச்சுனன் - அபி மன்யு நினைவாகவே இருந்தார்கள்!

குண்டோதரன் கூறினான்: ''ஆம், மாமல் லர் அன்று அபிமன்யு மாதிரிதான் போர் புரிந்தார். ஆனால் ஒரு வித்தியாசம். அபி மன்யு போர்க்களத்தில் மாண்டு போனான். புள்ளலூர்ச் சண்டையிலோ மாமல்லரின் வாளுக்கு முன்னால் நிற்க முடியாமல் எதிரிகள் புறமுதுகிட்டு ஓடத் தொடங்கி னார்கள். எல்லோருக்கும் முன்னால் ஓட்டம் பிடித்தவன் கங்க நாட்டு அரசன் துர்விநீதன்தான்!''

''அந்த எழுத்தாளர் படிப்படியா முன்னுக்கு வந்தவரு.''

''எப்படி?''

''ஆரம்பத்திலே அவர் எழுதின ஜோக்ஸ், துணுக்கெல்லாம் திரும்பி வந்திச்சு. அப்புறம் சிறுகதைகள், இப்போ நாவல்கள் திரும்பி வந்திட்டிருக்கு.''

- பி. என். பாலகிருஷ்ணன்.



''துர்விநீதன் எந்தப் பக்கம் ஓடினானோ?'' என்று ஒரு கிராமவாசி கேட்டான்.

''தெற்கு நோக்கி ஓடி வந்ததாகத்தான் கேள்வி. தென்பெண்ணை நதி வரையில் அவனைப் பின்தொடர்ந்து மாமல்லரும் தளபதி பரஞ்சோதியும் வந்ததாகக் கூடக் கேள்வி'' என்று சொல்லி வந்த குண்டோதரன், மாமல்லர் பக்கம் திரும்பிப் பார்த்து, ''ஏன் ஐயா, என் கையைக் கிள்ளுகிறீர்?'' என்றான்.

மாமல்லரின் கண்களில் கோபக்குறி காணப்பட்டது.

இதற்குள் கூட்டத்தில் இன்னொருவர், ''ஆமாம், இந்த விவரமெல்லாம் உனக்கு எப்படி அப்பா தெரிந்தது? ஆயனரின் சீடனுக்குப் போர்க்களத்தில் என்ன வேலை?'' என்று கேட்டார்.

''நல்ல கேள்விதான்: உங்களிடம் உண்மையைச் சொல்லாமல் முடியாது போலிருக்கிறது!'' என்று சொல்லிக் கொண்டே குண்டோதரன் எழுந்து மாமல்லரிடமிருந்து சற்று அப்பால் போய் நின்றான்.

''இதோ இருக்கிறாரே, என் பக்கத்தில், இவர்... இவர்தான்... ஏன் ஐயா, இப்படி என்னை உறுத்துப் பார்க்கிறீர்... இவர்தான் உண்மையில் ஆயனருடைய உத்தம சிஷ்யர். நான் பல்லவ சைனியத்தைச் சேர்ந்தவன். துர்விநீதனைத் தொடர்ந்து வந்த மாமல்லருடன் நானும் வந்தேன். வழியில் என் குதிரையின் கால் ஒடிந்து விழுந்து விட்டபடியால் பின்தங்கி விட்டேன். பிறகு வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டு இவர்களுடைய தெப்பத்தில் ஏறி உயிர் தப்பினேன்!''

உடனே, கூட்டத்திலிருந்தவர்கள் ஒருவரையொருவர் விலாவிலே விரலால் சீண்டியும் வேறுவிதமாகக் கவனத்தை இழுத்தும் காதோடு இரகசியம் பேசிக் கொண்டார்கள். 'குண்டோதரன் ஆயனரின் சிஷ்யனாக இருக்க முடியாது' என்று அவர்களில் பலர் முன்னாடியே ஊகித்ததாகச் சொல்லிக் கொண்டார்கள்.

''மாமல்லரும் ஒருவேளை இந்த வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கலாமோ?'' என்று ஒருவர் கூறினார்.

''அதை நினைத்தால் எனக்கு ரொம்பவும் கவலையாயிருக்கிறது!'' என்றான் குண்டோதரன்.

''ஒருவேளை இங்கேயே அவரும் வந்து ஒதுங்கினாலும் ஒதுங்கலாம்'' என்று இன்னொருவர் சொன்னார்.

''ஒதுங்கினாலும் ஒதுங்கலாம்!'' என்றான் குண்டோதரன்.

(தொடரும்)

உடலுக்குள் உலோகம் பொருத்தினால் 'ஷாக்' அடிக்குமா?

❋ மு. திருநாவுக்கரசு, வேலூர்:

★★ 'மெட்ராஸ் ஐ'க்கென்று பிரத்தியேக மாய்ப் பெட்டிக் கடைகளில் மலிவு விலையில் (ஒரு 'டியூப்' 25 காசு) மருந்து விற்கிறார்களே, அதைப் பயன்படுத்தலாமா?

❋ டாக்டர் ஏ. பவானி, சென்னை - 17:

★★ 'மெட்ராஸ் ஐ' என்பது ஒரு வகை கண் நோய். அதற்கு உள்ளுக்கு மாத்திரையும் கண் சொட்டு மருந்துமே சிறந்தது. கடைகளில் விற்கும் கண் நோய் மருந்துகளை மருத்துவரின் ஆலோசனை பெறாமல் பயன்படுத்துவது தவறு. ஆபத்தானதும் கூட. இதனால் பார்வைக் குறைபாடுகள் கூட ஏற்படும்.

❋ கே. முஹம்மது அன்சாரி, அலங்கியம்:

★★ என் ஏழு வயதுக் குழந்தைக்கு முழங்கால், முழங்கையில் மட்டும்தோல் சொரசொரப்பாக இருக்கிறதே...?

❋ டாக்டர் லக்ஷ்மி நாகராஜன்: சென்னை - 18:

★★ குழந்தைக்கு நிறைய திரவ ஆகாரமும் இரும்புச் சத்து, வைட்டமின் ஏ, டி அடங்கிய உணவுகளும் (கீரை, பப்பாளி, பால்) கொடுங்கள். குழந்தையுடன் தினந் தோறும் கொஞ்சம் நேரமாவது செலவிடுங்கள். மன உளைச்சலினால் வியர்வைச் சுரப்பிகள் பாதிக்கப்பட்டுத் தோல் வறண்டு போக வாய்ப்பு உண்டு. வறண்ட தோலில் வைட்டமின் ஈ எண்ணெய், காலமின் லோஷன், ஆலிவ் எண்ணெய் போன்ற ஏதேனும் ஒன்று தடவலாம். பிரச்னை நீடித்தால் சரும நோய் நிபுணரை அணுக வேண்டும்.

❋ பத்மா சுந்தரம், விருகம்பாக்கம்:

★★ என் தம்பிக்கு ஒரு விபத்தில் கால் எலும்பு முறிந்து, அறுவைச் சிகிச்சை செய்து எலும்பைப் பொருத்தும் போது ஸ்க்ரு உதவியுடன் 'ப்ளேட்டை'ப் பொருத்தினார்கள். மின்சாரத்தைக் கடத்தக் கூடிய இந்த உலோகம் உடலில் இருப்பதால், மின்சாரம் தாக்குவதற்கான சாத்தியம் அதிகமா? விளக்கவும்.

❋ டாக்டர் ஜே. மோகன், சென்னை:


★★ ஸ்டீல் பிளேட்டை எலும்புடன் பொருத்துவதால் மின்சாரம் பாயும் ஆபத்து நிச்சயமாக இல்லை. நம் உடலில் உள்ள எலும்பு மின்சாரத்தைக் கடத்தும் சாதனம் அல்ல. அதனால் மின்சாரம் தாக்கினால் எலும்பைத் தாண்டி ஸ்டீல் பிளேட் வரை வருவதற்கு வாய்ப்பே இல்லை. கூடுதல் ஆபத்து என்று ஏதும் இல்லையே தவிர, மின் சாதனங்கள் விஷயத்தில் எல்லோருமே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

❋ வி. சுப்புலட்சுமி, புதுதில்லி:

★★ கால் பிளாடரில் கல் இருந்தால் அந்த உறுப்பையே ஆபரேஷன் செய்து எடுத்து விடுகிறார்கள். ஆனால் நாம் சாப்பிடும் கொழுப்புப் பொருளை, கால் பிளாடரில் சுரக்கும் ஒரு திரவம்தான் செரிக்க வைக்கிறது என்று சொல்கிறார்கள். கால் பிளாடரையே எடுத்தபின் நாம் உண்ணும் கொழுப்பு எவ்வாறு செரிக்கும் என்பதைத் தெரிவிக்கவும்.

★★ 'கால் பிளாடர்' என்பது ஒருவித சேமிப்புப் பாத்திரம்தான். நமது கல்லீரலிலிருந்து சுரக்கும் பைல் என்ற திரவம் இந்த கால் பிளாடரில் சேமிக்கப் படுகிறது. இதில் கல் உண்டாகும் போது கால் பிளாடரையே ஆபரேஷன் செய்து நீக்கி விடுகிறோம். இதனால், கல்லீரலிலிருந்து சுரக்கும் திரவம் நேரடியாகக் குடலிலுள்ள 'டியோடினம்' என்னும் பகுதிக்கு வந்துவிடுகிறது. ஆகையால் கொழுப்புச் சத்து ஜீரணமாவதில் எந்தவித மாற்றமும் இல்லை.

தொகுப்பு: பானுமதி ராமச்சந்திரன்.



நிழலுக்குப் பின் நிஜங்கள்

1



பம்பாயில் என் பாட்டி வீட்டில் பிறந்த நான், மனித சமுத்திரத்தில் வந்து மாட்டிக் கொண்டு விட்டோமே என்ற கவலையிலும் பயத்திலும்தான் அழுதிருக்க வேண்டும். என்னைச் சுற்றி நாலைந்து பெண்மணிகள் ஆனந்தமாக என்னைப் பார்த்துச் சிரித்தார்கள்.' என் அழுகை அவர்களுக்கு எப்படி சிரிப்பை வரவழைத்தது? ' புரியாமல் விழித்தேன்.

ஒரு 'கிழவி' உள்ளே நுழைந்தாள். ''என்னடீ ராஜம், பெற்றுப் பிழைச்சியா? பிள்ளைதானே?'' என்றாள். அப்போது வந்த ஒரு வாட்டசாட்டமான ஆளிடம், ''என்னடா ராமசாமி, பையன்தானே! உனக்கு 'வரவு'தான் 'சிலவு' இல்லை'' என்றாள். திடீரென அந்தக் கிழவி நான் சற்றும் எதிர்பாராத வகையில் குனிந்து எனக்கு முத்தம் கொடுக்க வந்தாள். முத்தம் என்பது எவ்வளவு இனிமையானது. அதை முதன் முதலில் ஒரு கிழவியா கொடுப்பது? எனக்கு என்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரியவில்லை. இருந்த ஒரே ஆயுதத்தால் ஆத்திரம் தீர அவள் முகத்தில் தண்ணீரை அடித்தேன். கிழவி முகத்தைச் சுளித்து மேலே தூக்க, நான் 'களுக்'கென்று சிரித்தேன். யாருக்கு யார் முத்தம் கொடுக்கறது?

நான் பிறந்த பத்தாவது நாள் புதுச் சட்டை போட்டு, தொட்டில் கட்டி, காப்பரிசி இடித்து, அந்த வாட்டசாட்ட ஆள் மடியில் என்னை உட்கார வைத்து ''மீ. ரா. விஸ்வநாதன்'' என்று நாமகரணம் செய்தார்கள். (பஞ்சாங்கங்கள்... இவர்களுக்கு நரேஷ், ரமேஷ், சுரேஷ் என்று ஒரு நல்ல மாடர்னான பெயர் கிடைக்கவில்லையே!) மீராவாம்... மீரா! 'மீ'ங்கறது மீனாட்சி சுந்தரமாம். என் தாத்தாவாம். 'ரா'ங்கறது அந்த வாட்டசாட்டமான ஆளோட ராமசாமிங்கற பேர்லே முதல் எழுத்தாம். இவங்க இரண்டு பேரோட முதல் எழுத்துக்களுக்குப் பின்னாடிதான் நான் காலங்காலமா இனிமே தொத்திக்கணுமாம்!

என் தகப்பனார் ராமஸ்வாமி இப்போது மேல் உலகத்தில் இருந்து கொண்டு என்னை வாழ்த்திக் கொண்டிருப்பவர். நான் ஒரு 'நிழல்'தான். என் தாயும் தந்தையும்தான் நிஜங்கள். அவர்கள் சுற்றி விட்ட சுழற்சியில் சுழலும் பம்பரம் நான். அவர்கள் கொளுத்திப் போட்ட பத்தாயிரம் வாலா தீபாவளி சரம். நான் செப்புக் கம்பி. உள்ளே பாயும் மின்சாரம் அவர்கள்தான்.

விசு

இவனை ஒரு விஞ்ஞானியாக ஆக்கி விட வேண்டும், இவனை ஒரு வக்கீலாக ஆக்கி விட வேண்டும், இவனை ஒரு ஆடிட்டராக ஆக்கி விட வேண்டும். இவனை ஒரு ஆங்கிலப் பேராசிரியராக ஆக்கி விட வேண்டும் என்ற பேராசையில் விழுந்து விழுந்து என் மூளைக்குப் பாலீஷ் போட்ட அந்த அப்பாவி பள்ளி ஆசிரியர்களையும் , ஆசிரியைகளையும் நினைத்துப் பார்க்கிறேன். (பாலகந்தர்வ பிரைமரி ஸ்கூல், திருவல்லிக்கேணி - ஹிந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி)

என்னுடைய எதிர்காலத்தை முடிவு செய்ய இவர்கள் யார்? என்னுடைய மாணவன் ஒரு வக்கீல். என்னுடைய மாணவன் ஒரு டாக்டர் என்று இவர்கள் பீற்றிக் கொள்ள நான்தான் கிடைத்தேனா? அடித்தாலும் சரி, உதைத்தாலும் சரி சராசரி மாணவனாகவே இருந்து, இவர்களது பேராசைக்கு அதிர்வேட்டு வைத்து, வெற்றிக்கொடி நாட்ட வேண்டும் என்று மனத்துக்குள் சதித் திட்டம் தீட்டினேன். குறைச்சலா மார்க் வாங்கினா பெயிலாக்கறாங்க. அதனால் பாஸ் மார்க் மட்டும் வாங்கு. ஏன் அனாவசியமா மேலே வாங்கணும்? - இதுதான் என்னுடைய அன்றைய கொள்கை! இவன் மூளைக்கு எவ்வளவு வாஷிங் சோடா போட்டுத் தோய்த்தாலும் கூட இப்படித்தான் இருக்கும் என்று அவர்களை அலுப்புடன் உட்கார வைத்த கொள்கை வீரன் நான்.

ஆக, என் எண்ணமும், எழுத்தும் வெறும் 'நிழல்'தான். அதற்குப் பின்னே பல 'நிஜங்கள்' திருவல்லிக்கேணியில் பொக்கை வாயுடனும், கையில் கைத்தடியுடனும் இன்றும் ஆரோக்கியமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். எல்லோரையும் போலவே வேலைக்குச் சேர்ந்து, கை நிறையச் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு மட்டும் இருக்காதா என்ன? என் பெரியப்பா தயவில் ஒரு இடத்தில் வேலைக்குச் சேர்ந்தேன். முதல் நாளே எனக்கு ஒரு வாகனம் ஒதுக்கப்பட்டது. சைக்கிள்! காலையில் கையில் சில கவர்களுடன் ராயப்பேட்டையிலிருந்து சேத்துப் பட்டுக்கு, சேத்துப்பட்டிலிருந்து மயிலாப்பூருக்கு என சைக்கிளை இளமை வேகத்துடன் மிதித்தேன்.



அலுத்து சலித்து ஆபீஸுக்கு வந்தேன். மதியத்துக்குத் தயாராக வைத்திருந்த கவர்களைக் கையில் கொடுத்தார்கள். அவசர அவசரமாக ஆகாரத்தை அள்ளிப் போட்டுக் கொண்டு பாரீஸ் கார்னர் நோக்கி சைக்கிளில் பயணமானேன்.

திரும்பி வரும் போது ஒரு ஆசிரியர் எதிர்ப்பட்டார். மரியாதை நிமித்தம் சைக்கிளை நிறுத்தி, இறங்கி, வணக்கத்தைத் தெரிவித்தேன். செய்யும் வேலையைப் பற்றிக் கேட்டார். சொன்னேன். நான் சொன்ன வேலை அவர் மனத்தை ஈர்க்கவில்லை. நான் சொன்ன சம்பளம் அவருக்குத் திருப்தி தரவில்லை.

''படிக்க வேண்டிய வயசிலே படிடா படிடான்னு மாரடிச்சேனே கேட்டியா? கார்லே சுத்துவேன்னு நினைச்சேன். வெயில்லே சைக்கிள்லே சுத்தறியேடா பாவி'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.

எனக்குத் தலை சுற்றியது. என்னை வக்கீலாக்க வேண்டும், டாக்டராக ஆக்க வேண்டும் என்று நினைத்த ஆசிரியர்களை நான் ஏமாற்றி விட்டதாக நான் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தேன். இப்போதோ ஏமாந்தது நான்தானோ என்ற சந்தேகம் வர ஆரம்பித்து விட்டது.

திருடக் கூடாது. பொய் சொல்லக் கூடாது. யாரையும் ஏமாற்றக் கூடாது. மற்ற எந்தத் தொழிலும் தவறு இல்லை என்பது என் நினைப்பாக இருந்தது.

ஆனாலும் மற்றவர்கள் கண்ணுக்கு ஏழை யோக்கியனை விட பணக்கார அயோக்கியன்தான் மேலானவனாகத் தெரிவானோ?

என்னுடைய 'நிழல்' தரையில் அலுங்காமல் குலுங்காமல் வந்து கொண்டிருக்க, 'நிஜம்' வியர்க்க விறுவிறுக்க வெயிலில் சைக்கிளை மிதித்துக் கொண்டிருந்தது.

நான் என் சந்தோஷத்துக்கு ஒரு வேலை தேடிக் கொண்டு விட்டேன். 'ஆனால் அந்த வேலையில் மற்றவர்களுக்கு ஏன் சந்தோஷம் ஏற்படவில்லை?' என்ற கேள்வி மூளையைக் கிளற ஆரம்பித்தது.

வெகு நாட்களுக்குப் பிறகு மூளைக்கு வேலை கொடுத்ததாலோ என்னவோ தலை சுற்ற ஆரம்பித்தது!

(தொடரும்)

பிரமைகள்

சுபா

நெருப்பு அடங்கிப் போய் விட்ட மாதிரி தோன்றிற்று. சின்னப் பழுப்புப் புல்வெளித் தீவாகச் சாம்பல் மலர்ந்த நெருப்பு காட்சி யளித்தது.

குணசேகரன் எரியாத ஒரு காகித மிச்சத்தைக் குச்சி நுனியால் குத்தி நகர்த்தி னான். தோட்டத்தில் தாழ்வான காற்று வீசியது. மரங்களின் பாதங்களைத் தொட்டுப் புல்வெளியின் தலையைக் கலைத்து வந்த காற்று நெருப்பையும் தொட்டது. சாம்பல் பறந்தது. ஒன்றிரண்டு துகள்கள் குணசேகரனின் கண்களில் நுழைந்தன. சாம்பல் கூட சுடுமா? குணசேகரன் கண் களைக் கசக்கினான்.

அடங்கி விட்டது போல் பாசாங்கு செய்த நெருப்பு, தாமரையின் ஒரு பிய்த்த இதழ் போல் சுடர் விட்டுக் கிளம்பியது. மஞ்சளும், சிவப்புமாக இருபுறமிருந்த அந்தக் கல்யாணப் பத்திரிகையின் விட்டுப் போன



மிச்சப் பகுதி நீலமாக எரியத் துவங்கியது.

கங்காவை.... குணசேகரனுக்கு...


பெரிய எழுத்துக்கள் நெருப்பில் கரைந்தன. கடரின் உச்சியில் இரண்டு கண்கள் தெரிந்தன. சற்றே பழுப்பான பூனை நிறக் கண்கள்.

குணசேகரனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

அந்தக் கண்களுக்கு மேலே புருவங்கள் தென்பட்டன. சற்றுக் குட்டையான மூக்கு உருவானது. அந்த மூக்கின் இடதோரம் கறுப்பு மச்சம். உதடுகள். அவை பிரிந்த போது மஞ்சள் பூத்த பற்கள். அள்ள அள்ளக் கை நிறையும் கூந்தல்... இத்தனை நேரம் இவள் எதற்குள் ஒளிந்திருந்தாள்?

''கங்கா.... நீயா... நீ.. நீ...'' குணசேகரன் பதறினான்.

நெருப்புக் குவியலின் மேல் கங்கா



இலங்கை அனுராதபுரத்தில் 1500 ஆண்டுகளுக்கு முந்தைய தங்கப் புத்தகம் ஒன்றை ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் கண்டுபிடித்துள்ளார்கள். சுத்தத் தங்கத்தினால் வார்க்கப்பட்ட ஏழு தகடுகளில் சமஸ்கிருதத்தில் சொற்கள் பதிக்கப் பட்டுள்ளன. இரண்டு கிலோ எடை உள்ளது இந்தத் தங்கப் புத்தகம்.

ஆதாரம்: 'வேரில் பழுத்த பலா' இதழ்.

- ஆர். ஆர். பூபதி.

உட்கார்ந்திருந்தாள். காற்றில் சாயம் போன அவளுடைய புடைவைத் தலைப்பு பறந்தது.

''நெருப்பின் மேல் ஏன் உட்கார்ந்திருக்கிறாய், உனக்குச் சுட வில்லை?''

கங்கா அவன் பேச்சைக் காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை. சற்று உடலை அசைத்துச் சௌகர்யமாய் உட்கார்ந்த போது, அவளிடமிருந்து குங்குமத்தை ஊதி விட்டாற்போல நெருப்புப் புள்ளிகள் பறந்தன.

''கங்கா, வீட்டிற்குள் எவ்வளவு இடம் இருக்கிறது? குப்பையை எரிக்கும் நெருப்பின் மீது ஏன் உட்கார்ந்து விட்டாய்?''

''நான் வீட்டிற்குள் வரக் கூடாது'' என்றாள் கங்கா. அவள் பேசிய போது வழக்கமான அந்த மக்கிப் போன வெற்றிலை வாசம் இல்லாதது அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. அவள் கைகளில் வளையல்கள் சப்தித்தன. காது வளையங்கள் ஊஞ்சலாடின.

''உள்ளே போகலாம்.. வா...'' என்று குணசேகரன் அவள் கையைப் பிடித்தான்.

அவன் பிடித்த இடத்தில் அவளுடைய கை இல்லை. மாயமாய் மறைந்திருந்தது. சூடாக எதுவோ தாக்க, குணசேகரன் கையை இழுத்துக் கொண்டான்.

கங்காவுடன் பேச வேண்டும். நிறையப் பேசியாக வேண்டும்.

''கங்கா போய் விடாதே...''

வாசல் கேட் திறக்கும் சப்தம் இடையூறாய் இருந்தது. வேலைக்காரி. இரும்பு கேட்டைப் பிடித்துக் கொண்டு அவனை விநோதமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இப்பொழுதெல்லாம் இவள் ஒழுங்காக வேலைக்கு வருகிறாளா?'' என்று கங்கா கேட்டாள்.

''எங்கே? நேற்றைக்குக் கூட லீவு போட்டு விட்டாள். அத்தனை துணிகளையும் நானே தோய்த்து, இஸ்திரிக்கு எடுத்து வைத்து...''

அவன் கங்காவுடன் பேசியது வேலைக்காரிக்குப் பிடிக்கவில்லையோ? மிரட்சியுடன் பார்த்து விட்டு கேட்டை அவசரமாக மூடிக் கொண்டு அவள் போனாள்.

வெயில் சுருங்கி நிழல் அடைத்த அந்தத் தோட்டத்து மூலையில் அவனையும், கங்காவையும், நெருப்பையும் தவிர வேறு யாரும் வேண்டாம்.

''கங்கா... உனக்கு நிஜமாகவே சுட வில்லையா?''

''சுடவில்லை...'' கங்கா குனிந்து காற்றில் பறக்கப் பார்த்த வெளிர் நீலக் காகித மூலையைப் பற்றி எரித்தாள். ''நான் பிரசவத்திற்குப் போன போது உங்களுக்கு எழுதிய லெட்டர்தானே இது? என் ஞாபகமெல்லாம் வேண்டாமென்று எல்லாவற்றையும் பொசுக்குகிறீர்களாக்கும்?''

''ம்...'' அந்தக் கடிதத்தைக் கடைசித் தடவையாகப் பார்த்து விடலாம் என்று அவன் விரல்களை நீட்டிய போது வெப்பம் தகித்தது.

''ரேவதி எங்கே?'' என்றாள் கங்கா.

''உன் அம்மாவின் வீட்டில் விட்டிருக்கிறேன். இங்கே அவளுக்கு விளையாட ஆள் இல்லை. உன்னை மாதிரி கவனித்துத் தலையைச் சீவி, நடு மண்டையில் வகிடு எடுத்து இரட்டை ஜடை போட்டு விட எனக்கு வரமாட்டேன் என்கிறது. அங்கே அவளுக்குச் சியாமளா இருக்கிறாள்.''

''சியாமளாவுக்கு ரேவதி என்றால் கொள்ளைப் பிரியம்...'' என்றாள் கங்கா. ''நான் பிரசவத்தில் செத்துப் போயிருந்தால் நீங்கள் சியாமளாவைத்தானே கல்யாணம் பண்ணிக் கொண்டிருந்திருப்பீர்கள்?''

''ச்சீ.. நான் அ ந் த மாதிரி நினைத்ததேயில்லை...''

''இதில் தப்பென்ன இருக்கிறது? ஆஸ்பத்திரியில் எ ன க் கு ச் சிசேரியன் பண்ண வேண்டுமென்று கையெழுத்து வாங்கிய போது நீங்கள் அழுதது எனக்கு ஞாபக மிருக்கிறது.. சிசேரியனில் நான் செத்துப் போய் விடுவேன் என்று நீங்கள் நினைக்கவில்லை?''

''எனக்கென்னவோ நீ என்னை விட்டு விட்டுப் போய் வி டு வா ய் என்று பயமாகவே இருந்தது.'' குணசேகரனுக்கு அந்த நாளைப் பற்றிக் கங்கா விற்கு எல்லாம் தெரிந்தி ருக்குமோ என்று கவலை யாய் இருந்தது. உயிருடன் இருந்தவரை அவன் சொன்னதுதான் அவளுக் குத் தெரியும். ஆனால் இப் போது அவள் காற்றோடு கலந்து அவன் இதயத்துக் குள்ளேயே போய் அவன் எண்ணங்களையெல்லாம் படித்து விட முடியுமோ என்று வெட்கமாயிருந்தது.



ஆஸ்பத்திரியில் வெள்ளை விரிப்பில் கங்கா. தலையணை, போர்வை, புடைவை, அவள் எல்லாமே வெள்ளையாய்.

'நிறைய ரத்தம் வீணாகி விட்டது. எவ்வளவோ முயற்சி செய்தோம். அவளைக் காப்பாற்ற முடியவில்லை. இன்னும் ஐந்து நிமிடத்தில் உயிர் பிரிந்து விடும்...'

'ஐயோ... டாக்டர்.'

'ஷ்.. இங்கே அழக் கூடாது. உங்கள் மனைவி ஏதோ பேச வேண்டும் என்று ஜாடை காட்டுகிறார்கள் பாருங்கள்.'

'என்ன கங்கா?'

கங்காவின் ஒற்றை விரல் களைப்பாக அவனை அருகே கூப்பிடுகிறது. அவளுடைய அம்மாவை, அப்பாவை, தங்கை சியாமளாவைக் கட்டிலைச் சுற்றி அழைக்கிறது.

'நான்.. நான் செத்துப் போய் விட்டால் குழந்தை அம்மா இல்லாமல் கஷ்டப்படும். நீங்கள் இரண்டாவது கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்..'

'கங்கா, என்ன இது முட்டாள்தனமான பேச்சு?'

'அப்பா, நீங்களாவது உங்கள் மாப்பிள்ளைக்கு எடுத்துச் சொல்லுங்கள். முன்பின் தெரியாத யாரிடமோ என் குழந்தையைக் கொடுக்க வேண்டாம். சியாமளாவையே கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் நீங்கள். சத்தியம் பண்ணிக் கொடுங்கள்.'

'கங்கா... எனக்கு இந்தப் பேச்சு பிடிக்கவில்லை..'

அப்போது அவன் கை மேல் சியாமளாவின் கை விழுகிறது. அவளுடைய கவிதை விழிகளில் கண்ணீர். சிற்ப மூக்கில் விகசிப்பு. ஆரஞ்சு சுளை போன்ற உதடுகளில் துடிப்பு. பதினாறு வயது இளமையில் நடுக்கம்.

'சரி என்று சொல்லுங்கள்.. அக்காவின் கடைசி ஆசையை மறுக்காதீர்கள்.'

மின்சாரம் பாய்ந்தது போல் சிலிர்த்து நிமிர்ந்த போது கண்ணாடி அணிந்த குள்ள மான டாக்டர் வெளியே வந்திருந்தார்.

''பெண் குழந்தை... உங்க ஒய்ஃபுக்கு இன்னும் அரை மணியில் மயக்கம் தெளிந்து விடும். கங்கிராட்ஸ்!''

''அப்படியா.. தாங்க்ஸ் டாக்டர்.''

மேற்கில் சூரியன் அணைந்து விட்டான். இருள் சூழச்சூழ, கங்கா உட்கார்ந்திருந்த நெருப்புக்கு உயிர்ப்பு அதிகமானதைப் போல இருந்தது.

''பிரசவத்தில் நீ பிழைத்து விட்ட பிறகு நானும் நீயும் எண்பது வயது வரை வாழப் போகிறோம் என்று நினைத்துக் கொண் டிருந்தேன். ஆனால் பாழாய்ப் போன கேன்ஸர் உன்னை...''

''பொய் சொல்லாதீர்கள்...''

''இல்லை, கங்கா..''

''ரேவதிக்கு மூன்று வயது இருக்கும் போது நான் பஸ்ஸில் அப்பா இருந்த ஊருக்குப் போன போது, நான் செத்துப் போய் விடுவேன் என்று நினைக்க வில்லை?''

குணசேகரன் திடுக்கிட்டான். கங்கா அவனுக்குள் ஊடுருவி விட்டாள். எல்லா வற்றையும் நிர்வாணமாகப் புரிந்து கொள்ளும் சக்தி அவளுக்கு வந்து விட்டது.

''கங்கா... அன்றைக்கு நான்...''

''உங்கள் பேரில் என்ன தப்பு இருக்கிறது? பெண்டாட்டியை கேன்ஸர் கறையான் போல் அரித்துக் கொண்டிருந் தால், இளமையாய் இருக்கும் எந்த ஆணுக்கும் அந்த எண்ணம் தோன்றத்தான் தோன்றும்.''

''இல்லை, கங்கா... நான் அப்படி நினைத்ததேயில்லை...''

இருட்டில் அந்த பஸ்ஸின் விளக்குகள் திடீரென்று இயக்கம் இழந்து அணைந்து போய்ச் சாலையோரப் பள்ளத்தைக் கவ னிக்காமல் உருண்டு விழுந்து கிடக்கிறது. எங்கும் உடல்கள். நசுங்கி, அமிழ்ந்து, எரிந்து. ரேவதியின் அழுகை மட்டும் இருளில் தனியாக ஒலிக்கிறது. குணசேகரன் பதறுகிறான். பக்கத்துக் கிராமத்து மக்கள் சூழ்ந்திருக்கிறார்கள். லாந்தர் வெளிச்சத் தில், ரேவதிக்கு ஒன்றும் ஆகாமல் உட்கார்ந்து அழுவது தெரிகிறது. கீழே பஸ்ஸிற்கு அடியில் ரத்த வெள்ளத்தில் கங்கா. அவளுடைய எலும்புக் கை அவனை அருகே அழைக்கிறது.

'ரேவதி.. ரேவதியை அனாதையாக்கி விடாதீர்கள்.'

சூழ்ந்திருக்கும் அத்தனை நூறு பேருக்கும் அவளுடைய குரல் தெளிவாகக் கேட்கிறது.

'நீங்கள் சியாமளாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுங்கள். அவளால்தான் ரேவதியைக் கண்கலங்காமல் பார்த்துக் கொள்ள முடியும்.'

'இல்லை, கங்கா... அப்படிப் பேசாதே..'

'என் மேல் சத்தியம். நீங்கள் அவளை இரண்டாவது கல்யாணம் பண்ணிக் கொள்ளுங்கள்...'

அத்தனை பேரும் மௌன சாட்சியாய்க் கவனிக்கிறார்கள். கங்காவின் தலை தொய் கிறது.

மறுநாள் ARRIVED SAFELY என்று கங்காவிடமிருந்து தந்தி வந்து விட்டது.

கங்காவின் வளையல்கள் நிறைந்த கரம் நீண்டு அவன் முகவாயைத் தொட்டு நிமிர்த்தியது.

''நீங்கள் பயப்படுகிற மாதிரி நான் உங்களைத் தப்பாகவே நினைக்கவில்லை. நோய் தாக்கிய பெண்டாட்டி - அவளிடம் எப்பொழுதும் ஒரு துர்நாற்றம் - எப்படி சந்தோஷம் கிடைத்திருக்கும் உங்களுக்கு? என் முகத்தைப் பார்க்க யோசனை பண்ணிக் கொண்டு நீங்கள் பாவம் ஆபீஸிலிருந்து எங்கெங்கேயோ சுற்றி விட்டுத் தினமும் லேட்டாகத்தான் வருவீர்கள்..''

''இல்லை கங்கா.. நான்..''

''நான் உங்களை வெறுத்ததே கிடை யாது. தப்பாக நினைத்ததே கிடையாது. எனக்கு உங்கள் மேல் எந்த வருத்தமும் இல்லை. ஆனால் நீங்கள் எதிர்பாராத ஒரு நாளில் நான் திடீரென்று செத்துப் போனதால் உங்களுக்குத்தான் என் மீது கோபமாயிருக்கும்.''

''கோபம் இல்லை கங்கா.. துக்கம்.. நீ இல்லாமல் நான் எவ்வளவு கஷ்டப்படு கிறேன் தெரியுமா?''

''உங்களை விட ரேவதிதான்.. பாவம் ஆறு வயசில் அவள் அம்மா இல்லாத அனாதையாகி விட்டாள். அவளுக்கு ஒரு பெண் பிள்ளை செய்ய வேண்டிய சிசுருஷையெல்லாம் நீங்கள் செய்ய முடி யுமா என்ன? அவளுக்கு ஒரு அம்மா வேண்டும்...''

''ஆரம்பித்து விட்டாயா?''

''நீங்கள் சியாமளாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும். யாருக்காக இல்லாவிட்டாலும் ரேவதிக்காக..''

''எனக்கு இந்தப் பேச்சு பிடிக்காதென்று

''வாசகர்களுக்குப் புரியற மாதிரி தொடர்கதையை எழுத முயற்சி பண்ணுங்க!''

''என்ன ஆச்சு சார்?''

''வாரா வாரம் 'முன்கதை விளக்கம்' போடச் சொல்லி நிறையக் கடிதங்கள் வருது!''

- ஞா. ஞானமுத்து.



உனக்குத் தெரியும் இல்லையா?''

''சியாமளா தங்கமான பெண். அவள் அழகைப் பார்த்திருக்கிறீர்கள் இல்லை? சொக்கத் தங்கம் போல் இருப்பாள். சமையலில் கெட்டிக்காரி. எல்லாவற்றையும் விட ரேவதி மேல் அவளுக்குக் கொள்ளைப் பிரியம்...''

''வேண்டாம் கங்கா..''

''ரேவதியை ஆதரவில்லாமல் விட்டு விட்டோமே என்ற குற்ற உணர்வில் என்னால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. நீங்கள் சியாமளாவைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால்தான் என் ஆத்மா சாந்தியடையும். ப்ளீஸ்...''

''நீ இருந்த இடத்தில் இன்னொருத்தியை எப்படி?''

''எனக்குச் சத்தியம் செய்து கொடுங்கள். சியாமளாவை வீட்டுக்குக் கூட்டி வாருங்கள்... பாருங்கள் வீடு எவ்வளவு இருண்டு கிடக்கிறது. அவள் வந்து வெளிச்சம் ஏற்றி வைக்கட்டும். ப்ராமிஸ்...''

கங்காவின் கை மேல் குணசேகரன் அடித்துச் சத்தியம் பண்ணினான். சாம்பல் பறந்தது. வெப்பம் தகித்தது.

வீட்டின் இருபுறமும் வாழை மரங்கள் கட்டப்பட்டிருந்தன. மாவிலைத் தோரணம் காற்றில் ஆடியது. கூடுதலாக விளக்குகள் எரிந்தன. வாசலில் மாக்கோலம் பாதி ஈரம் காயாமல் இருந்தது. எதிர்ச் சாலையில் குப்பைத் தொட்டியில் வாழை இலைகள் வழிந்தன.

கங்காவின் அப்பாதான் கதவைத் திறந்தார்.

''என்ன மாப்பிள்ளை, இவ்வளவு லேட்டாவா வர்றது?''

கங்கா இவர்களிடமும் விஷயத்தைச் சொல்லி விட்டாளா?

வீடு நிறைய ஊதுவத்தியும் சந்தனமும் மணத்தது. காலடியில் கல்கண்டு ஒன்று பிசுக் என்று ஒட்டிக் கொண்டது. அவன் முன்பின் பார்த்திராத இரண்டு ஆட்கள் குழாயடியில் பெரிய பெரிய பித்தளைத் தட்டுகளைக் கழுவிக் கொண்டிருந்தனர்.

''அப்பா...'' என்று ஓடி வந்தது ரேவதி. நீலநிறப் பட்டுப் பாவாடையும், சற்று இறுக்கமாகி விட்ட சின்ன ரவிக்கையும், மார்பில் தூங்கிய முத்து மாலையும், கண்களில் மை தீற்றலும், சின்ன உதடுகளில் சிவப்புச் சாயமும்...

சியாமளா தான் இவ்வளவு அழகாக அலங்காரம் பண்ணி விட்டிருப்பாள்.

சியாமளா உள்ளறையிலிருந்து வெளிப்பட்டாள்.

அரக்கு நிறத்தில் வெள்ளி ஜரிகையிட்ட புடைவை அவள் உடலுக்காகவே நெய்யப்பட்டிருந்தது. நெற்றிச் சுட்டி. அவள் கண்கள், அந்த மூக்கு, ஈரமான அந்த உதடுகள்.. அதில் பளீரிட்ட அந்தப் புன்னகை....

குணசேகரனுக்கு உடம்பு நடுங்கியது.

''என்ன மாப்பிள்ளே, சட்டையெல்லாம் கறுப்பா... சாம்பலா...?''

''கங்காவுக்குச் சத்தியம் பண்ணிட்டேன்..'' என்றான் குணசேகரன் பொதுப்படையாக. ''நான் பண்ணிக்கிறேன்..''

''என்ன மாப்பிளே?''

''சியாமளாவை நான் கல்யாணம் பண்ணிக்கறேன்..''

''மாப்பிளே!''

எதற்காக அவர் இவ்வளவு திடுக்கிட வேண்டும்? சியாமளாவின் முகம் ஏன் இப்படிச் சுருங்க வேண்டும்? கங்கா இன்னும் இவர்களிடம் சொல்லவில்லையா?

''என்ன மாப்பிள்ளை சொல்றீங்க? சியாமளாவுக்கு அவளுக்குப் புடிச்ச மாப்பிள்ளையைப் பாத்துத் தேதில்லாம் குறிச்சாச்சு... இப்ப சாயந்திரம் நிச்சய தார்த்தம் நடந்தது. நீங்க வருவீங்க, வருவீங்கன்னு காத்திட்டிருந்தோம்.. இப்ப வந்து என்னவோ ஏசகு பெசகா பேசறீங்களே...''

''கங்கா என்கிட்ட சத்தியம் வாங்கிட்டிருக்கா... நான் சியாமளாவைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்..''

சியாமளா கொலுசு ஒலிக்க உள்ளே ஓடினாள்.

ரேவதி புரியாமல் அவன் முழங்கால்களைக் கட்டிக் கொண்டிருந்தது.

கங்காவின் அம்மா விரிந்த கண்களுடன் பின்புறமாகவே நடந்து கிச்சனுக்குள் மறைந்தாள்.

கங்காவின் அப்பா அவனைப் பிடித்து உலுக்கினார்.

''மாப்பிள்ளை.. என்னாச்சு உங்களுக்கு?''

குணசேகரன் நேரே பார்த்தான். விழிகளில் இரண்டு சொட்டு நீர் சேர்ந்திருந்தது. தொண்டை அடைத்துக் கொண்டு வார்த்தைகள் திக்கி வெளியேறின.

''சியாமளாவை நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்...''

ஆகாசத் தாமரை

21

துருவ்வைக் கண்டதும் சடகோபன், முதலில் சற்றுத் திடுக்கிட்டு நின்றவர், பிறகு கொதித்தெழுந்து அவனிடம் சென்று அவன் உடம்பை உலுக்கினார்.

''பாரு... உன்னைக் கல்யாணம் பண்ணிண்டு இப்பொ குழந்தை எப்படிக் கிடக்கிறா பாரு... சந்தோஷமா இருக்கா...? வீணைவாசி, போ... போ.. போடா...''

சடகோபனை மற்றவர்கள் விலக்கினார்கள்.

துருவ், அவர் உலுக்கியதினாலோ, வைததினாலோ பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அவன் அந்தச் சின்ன அறையில் கீழே கிடத்தப்பட்டிருந்த அந்த உடலைப் பார்த்துக் கொண்டே நின்றான்.

''இவன்தான், கடன்காரன், என் பொண்ணைக் கொலை பண்ணான், இவனை உள்ளே தள்ளிச் சித்திரவதை பண்ணுங்கோ... அப்பொதான் என் குழந்தை கட்டை வேகும்'' என்று சடகோபனின் மனைவி அங்கிருந்த போலீஸ்காரர்களிடம் தமிழில் கத்தினாள். அவர்களுக்குப் புரிந்ததா இல்லையா என்பது பற்றி அவளுக்குக் கவலையில்லை.

அவ்வுடலைப் பார்த்தவாறு நின்ற துருவ்வின் கண்கள் நிலைகுத்தி நின்றன.

'இதுதான் மரணம் - நேருக்கு நேர் சந்திக்கின்றேன் - நீலம் பாரித்த கழுத்து. தற்கொலையின் அடையாளம் - எதற்காகத் தற்கொலை செய்து கொண்டாள்? - நான்தான் இதற்குக் காரணமா? - இந்த அளவா இவள் என்னை விரும்பினாள் - இருக்க முடியாது - ஏனிந்த முடிவு? - விவாகரத்து, சந்தியாவின் யோசனையாக இருக்கலாம். இவள் அதை ஏற்றுக் கொண்டாளா இல்லையா என்று எப்படித் தெரியும்?

சப்-இன்ஸ்பெக்டர் துருவ்விடம் வந்து நின்றார்.

''நீங்கள்தான் இப் பெண்ணின் கணவரா?'' என்றார்.

துருவ் பதில் கூறவில்லை.

''ஆமாம்.. அவன்தான். பணத் திமிர்லே இவனும் இவன் அம்மாவுமா சேர்ந்திண்டு என் பொண்ணை எங்காத்துக்கு அடிச்சு விரட்டிட்டா'' என்றாள் சடகோபனின் மனைவி தமிழில் தொடர்ந்து.

அங்கு நின்று கொண்டிருந்தவர்களிலொருவர் அதை ஹிந்தியில் மொழி பெயர்த்துச் சொன்னார்.

''பின்னால் 'ஸ்டேட்மென்ட்' கொடுக்கலாம். இப்பொழுது இவர்தான் கணவர் என்றால், மேலே நடக்க வேண்டியவற்றைக் கவனிக்கும் பொறுப்பு இவருடையது. முதலில் 'பாடி'யை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் 'போஸ்ட்-மார்டம்' செய்ய வேண்டும். அப்புறம்...''

''அதெல்லாம் வேண்டாம்...'' என்றார் சடகோபன் ஹிந்தியில்.

''மன்னிக்கவும்.. செய்துதான் ஆக வேண்டும். தற்கொலை கேஸ்...''

''தற்கொலை இல்லை. கொலை கேஸ். இவன் அடித்து விரட்டினான், தற்கொலை செய்து கொண்டாள்.. காரணம் இவன்தான்...'' என்றார் சடகோபன்.

''எல்லாவற்றையும் விசாரணையின் போது சொல்லுங்கள்.. சரி, உங்கள் பெயர், முகவரி'' என்று துருவ்வைக் கேட்டுக் கொண்டே, குறிப்புப் புத்தகத்தைப் பையிலிருந்து எடுத்தார் சப் - இன்ஸ்பெக்டர்.

துருவ் மௌனமாக நின்றான்.

''என்ன பேசாமல் நிற்கிறீர்கள்? நீங்கள் என்ன ஊமையா?'' என்றார் சப் - இன்ஸ்பெக்டர்.

''நான் சொல்றேன்,'' என்று துருவ் யாரென்று சொல்லி விட்டு முகவரியைத் தந்தார் சடகோபன்.

சப் - இன்ஸ்பெக்டர் ஆச்சர்யத்துடன் துருவ்வை நோக்கினார். கசங்கிய ஜிப்பா, பைஜாமா, இவனா இவ்வளவு பெரிய இடத்துப் பிள்ளை!

''ஆம்புலன்ஸ் வந்தவுடன் 'பாடி'யை எடுத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போகப் போகிறோம். இந்தக் கேஸ்

இந்திரா பார்த்தசாரதி

சம்பந்தமாக ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், இங்கிருக்கிறவர்களில் யார் வேண்டுமானாலும் எங்களுடன் தொடர்பு கொள்ளலாம்,'' என்றார் சப் - இன்ஸ்பெக்டர்.

''போஸ்ட்மார்டம் வேண்டாம்...'' என்றார் சடகோபன் மறுபடியும்.

''மன்னிக்கவும்.. நடந்துதான் ஆக வேண்டும். இது இயற்கையான மரண மல்ல.''

''உடம்பைத் தாறுமாறா வெட்டிக் குதறிடுவாங்க, இப்பொ என்ன செய்யறது?'' என்றார் சடகோபன் மனைவியிடம்.

''அவன் அம்மா, அந்தச் சனியனுக்கு ஃபோன் பண்ணிட்டேளா, அவகிட்டே சொன்னா சமாளிச்சுப்பா'' என்றாள் அவர் மனைவி கீழ்க் குரலில்.

அவர் தலையசைத்தார்.

தற்கொலை செய்து கொள்ள பயன்படுத்தப்பட்ட கயிற்றினை விரல் படாமல், கையுறை அணிந்து, சுருட்டி ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டுக் கொண்டார் சப் - இன்ஸ்பெக்டர்.

அந்த அறைக் கதவு, அங்கு போடப்பட்டிருந்த கயிற்றுக் கட்டில், சுவர்கள், எல்லா இடத்திலும் பவுடர் தூவி, கை ரேகைக்காகப் புகைப்படம் எடுத்துக் கொண்டார் இன்னொருவர்.

''அவதான் பாவி தற்கொலை பண்ணிண்டிருக்கா, இவா எதுக்கு போட்டோ எடுத்திண்டிருக்கா?'' என்று கேட்டாள் சடகோபனின் மனைவி.


''தற்கொலைதான்னு அவாதான் முடிவு பண்ணணும்'' என்றார், பக்கத்து பங்களா 'அவுட் ஹவுஸி'ல் குடியிருந்து கொண்டு, அங்கு வேடிக்கை பார்க்க வந்திருந்த ஜோஸ்யர் கிருஷ்ணமூர்த்தி ராவ்.

''அவ ஜாதகத்தை நீங்கதான் பாத்தேள், அவ இப்படி அல்பாயுசிலே போயிடுவான்னு நீங்க சொன்னேளா?'' என்று சீறினாள் சடகோபனின் மனைவி.

''நானா ஜாதகம் கணிச்சேன்? 'நீங்க இதுதான் இவ ஜாதகம்; பாத்துச் சொல்லுங்கோ'ன்னேள், பாத்தேன். நீங்க காமிச்ச ஜாதகப்படி இவளுக்கு எண்பது வயசு.. ஜாதகம் தப்பா இருந்திருந்தா நான் என்ன செய்ய முடியும்? 'ஜாதகப் பொருத்தம் பார்த்துக் கல்யாணம் பண்ணுங்கோ'ன்னேன், கேட்டேளா? பெரிய இடம்னு ஜாதகமே பாக்கலே.. இது யார் தப்பு?'' என்றார் ஜோஸ்யர்.

வெளியே ஆம்புலன்ஸ் வண்டி வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

''பாடியை சப்தர்ஜங் ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் கொண்டு போகிறோம். பெண்ணின் கணவன், அப்பா இருவர் மட்டும்



வரலாம்'' என்றார் சப் - இன்ஸ்பெக்டர்.

'கணவன்' என்று சப் - இன்ஸ்பெக்டர் சொன்ன போதுதான், சடகோபன் கவனித்தார். துருவ் அங்கில்லை, போய் விட்டான்.

''எங்கே, போனான் அவன்?'' என்றார் சடகோபன்.

''யாரு?'' என்றாள் அவர் மனைவி.

''அந்த ராஸ்கல் துருவ்.''

''கடன்காரன் வந்த சுவடு தெரியாமே, போயிட்டானே,'' என்று புலம்பினாள் அவர் மனைவி.

'ஸ்டெரச்சரை' எடுத்துக் கொண்டு உள்ளே வந்தார்கள்.

''கொஞ்சம் இருங்கள். பெண்ணின் மாமியார் வந்து விடுவார்'' என்றார் சடகோபன்.

''எங்களுக்கு நேரமாகிறது. ஆஸ்பத்திரிக்கு வரச் சொல்லுங்கள்,'' என்றார் சப் - இன்ஸ்பெக்டர்.



வாசலில் கார் சப்தம். மஞ்சுளாவும், சந்தியாவும் காரிலிருந்து இறங்கினார்கள்.

அவர்களுடன் போலீஸ் உயர்தர அதிகாரி பாண்டேயுமிருந்தார்.

பாண்டேயைக் கண்டதும் போலீஸ்காரர்கள், சப் - இன்ஸ்பெக்டர் அனைவரும் 'சல்யூட்' செய்தார்கள்.

சந்தியா உடலருகே உட்கார்ந்து கோமளாவின் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

மஞ்சுளாவின் முகத்தில் உணர்ச்சியேதும் தெரியவில்லை. கற்சிலை போல் நின்றாள்.

''மாமி... பாருங்கோ... பாவி இப்படிச் செஞ்சுட்டாளே..'' என்றார் சடகோபன்.

மஞ்சுளா ஒன்றும் பேசவில்லை.

''மாப்பிள்ளை வ ந் த ா ர்.. உடனே போயிட்டார்'' என்றார் சடகோபன்.

''துருவ் வந்தானா?'' என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள் மஞ்சுளா.

''ஆமாம்... கொஞ்ச நேரம் நின்றார். போயிட்டார். அவர்தான் கொள்ளி போடணும்'' என்றார் சடகோபன்.

மஞ்சுளா சுற்று முற்றும் பார்த்தாள். எதற்காக இத்தனை பேர் இங்கு கூடியிருக்கிறார்கள் என்று அவளுக்குப் புரியவில்லை. இப்பொழுது எல்லாருக்கும் தற்கொலை என்று தெரிந்திருக்கும். இது அவளுக்கு எவ்வளவு மோசமான விளம்பரதனைத் தரப் போகிறது!

அவள் பா ண் டே யி ட ம் சொன்னாள். ''இங்கு எதற்காக அநாவசியக் கூட்டம்?''

''அதுதான் நானும் யோசிக்கின்றேன். சப் - இன்ஸ்பெக்டர், எல்லாரையும் போகச் சொல்லுங்கள்.''

போலீஸ்காரர்கள் சுறுசுறுப்பானார்கள்.

கூட்டம் கலைந்தது.

''அடுத்தது என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று பாண்டே சப் - இன்ஸ்பெக்டரைக் கேட்டார்.

''ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் கொண்டு போக வேண்டும். தற்கொலை கேஸ். போஸ்ட்மார்டம் அவசியம் தேவை..''

''அந்தக் கண்றாவி வேற வேணுமா? உடம்பை முழுசாத் தரச் சொல்லுங்களேன், தகனம் பண்ணிட்டுப் போறோம்'' என்றார் சடகோபன்.

''போஸ்ட்மார்ட்டத்தைத் தவிர்க்க முடியாதா?'' என்று கேட்டாள் மஞ்சுளா.

''நோ மேடம்.. .இட் ஈஸ் நாட் பாஸிபில்'' என்றார் சப் - இன்ஸ்பெக்டர்.

''தற்கொலை என்று நிச்சயமாகத் தெரிந்தால்?'' என்றாள் மஞ்சுளா.

''தெ ரி ந் த ா லு ம், போஸ்ட்மார்ட்டம் செய்துதான் ஆக வேண்டும்.''

மஞ்சுளா பாண்டேவைப் பார்த்தாள். பாண்டே குறுக்கிட விரும்பவில்லை என்று அவர் முகபாவனையிலிருந்து தெரிந்தது.

சந்தியா மஞ்சுளாவிடம் சொன்னாள்: ''நான் துருவ்விடம் சொன்னேன், கோமளா

அவனை 'டிவோர்ஸ்' செய்யப் போகிறானென்று. நான் சொன்னது துருவ்வை மிகவும் பாதித்தது. அவன் கோமளாவைப் பார்த்துப் பேச வந்திருப்பான் நிச்சயமாக.. அதற்குள் அவசரப்பட்டு விட்டாள்.''

''கோமளா இந்த அளவுக்கு துருவ்வை விரும்பினாள் என்கிறாயா?''

''அது தெரியாது எனக்கு.. அவள் தற்கொலை செய்து கொள்வதற்கு இந்த வீட்டுச் சூழ்நிலையும் காரணமாக இருக்கலாம். ஒரு கீழ்மட்ட நடுத்தர வகுப்பில், கணவனைப் பிரிந்த ஒரு பெண்ணை எப்படி நடத்தியிருப்பார்கள் என்று ஊகிக்க முடியாதா? அவர்களையும் தப்பு சொல்ல முடியாது,'' என்றாள் சந்தியா.

கோமளாவை 'ஸ்ட்ரெச்சரில் வைத்தார்கள்.

''மாமி... போஸ்ட்மார்ட்டம் வேண்டாமென்று சொல்லுங்களேன்'' என்றார் சடகோபன்.

''சொன்னா அவா கேக்க மாட்டா. சட்டப்படி செஞ்சுதான் ஆகணும்'' என்றாள் மஞ்சுளா.

''இந்த உதவி கூட செய்ய முடியாட்டா எதுக்காகக் குந்தாணி மாதிரி நீ வந்திருக்கே, சட்டம் பேசறாளாம் சட்டம்'' என்று கோபமாகக் கத்தினாள் சடகோபனின் மனைவி.

''நீ வாயை மூடு.'' என்றார் சடகோபன்.

''நான் எதுக்காக வாயை மூடணும்? என் பொண்ணை அநியாயமா கொன்னுட்டாளே இந்தப் படுபாவி... அம்மாவும் பிள்ளையுமா சேர்ந்துண்டு அடிச்சு விரட்டியிருக்கா... அப்பொவே முட்டிண்டேன், கேட்டேளா... பணக்காரக் குடும்பம்னேள்.. பணக்காரக் குடும்பம், பாத்துக்கோங்கோ.. கல்யாணமாகி ஒரு வருஷம் கூட ஆகலே. கொள்ளி போடப் போறேனே, உங்களுக்கு வயிறு எரியலியா? தூ... நீங்க ஒரு ஆம்பிளையாட்டம்,'' என்று கையையும் உடம்பையும் ஆட்டிக் கொண்டு பிரலாபித்தாள் சடகோபன் மனைவி.

சந்தியா அவளையே பார்த்துக் கொண்டு நின்றாள். தார்மீகக் கோபம் என்பது இதுதான்.

''நான் செஞ்சது தப்புதான். கல்யாணத்துக்குச் சம்மதிச்சிருக்கக் கூடாது. ஆனா கல்யாணம் ஆனா என் பையன் சரியாப் போயிடுவான்னு சத்தியமா நம்பினேன். அப்புறம் அவன் சரியில்லேன்னு தெரிஞ்சதும், நான்தான் அவளை, அவளோட, நல்லதுக்காக உங்க வீட்டுக்கனுப்பினேன். இன்னொரு கல்யாணமும் நானே சந்தோஷமா செஞ்சு வச்சிருப்பேன்'' என்றாள் மஞ்சுளா.

''இன்னொரு கல்யாணமா? சொல்ல உனக்கு வெக்கமா இல்லே? எங்க குடும்பத்தைப் பத்தி என்ன நினைச்



''தலைவரே! உங்களுக்குச் சிலை வைக்கிறதுக்காக ஐந்து லட்ச ரூபாய் வசூல் பண்ணியிருக்கோம்!''

''உயிரோடு இருப்பவர்களுக்குச் சிலை வைப்பதில் எனக்கு உடன்பாடில்லை. அந்தத் தொகையை என்கிட்டே கொடுத்திடுங்க!

- ஞா. ஞானமுத்து.

சுண்டே? நீங்கதான் பணக்காரா. பகல்லே ஒரு கல்யாணம், ராத்திரி ஒரு கல்யாணம்னு பண்ணிக்கலாம். எங்களுக்கெல்லாம், குடும்ப கௌரவம்னு ஒண்ணு இருக்கு, தெரியுமா உனக்கு? என் பொண்ணு மானஸ்தி, அதான் இப்படிச் சுருக்கு போட்டுண்டுட்டா... உங்க மாதிரி, மானம் கெட்டு அலையலே.''

சடகோபன் மிகுந்த கோபத்துடன் மனைவியின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார்.

இது எல்லோரையும் திடுக்கிட வைத்தது.

சடகோபன் மனைவி, கண்ணில் கனல் தெறிக்கக் கணவனையும், மஞ்சுளாவையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''என்னை மன்னிச்சுடுங்கோ... நான் உங்க பொண்ணுக்குச் செஞ்ச தப்புக்குப் பிராயச்சித்தமா உங்க மத்தப் பொண்களோட கல்யாணச் செலவை ஏத்துக்கறேன். நீங்களே நல்ல இடமா பாத்துச் சொல்லுங்கோ.. சத்தியமா சொல்றேன்.. நான் மனமறிஞ்சு உங்க பொண்ணுக்குத் தப்பு செய்யலே'' என்றாள் மஞ்சுளா.

கோமளாவின் உடல் ஆம்புலன்ஸில் ஏறியதும், சடகோபன் மனைவி கட்டுக்கடங்காமல் அலறினாள்.

பாண்டே சந்தியாவை மெதுவாகக் கேட்டார்:

''இது யாருடைய தவறு?''

''அதான் சொல்ல முடியவில்லை. துருவ்வின் தவறு என்றும் சொல்ல முடியாது. அவன் அவனாக இருப்பதை அவனால் தவிர்க்க முடியாது. சடகோபன் தவறுமல்ல. பணத்தைக் கண்டு அவர் பிரமித்தார் என்றால் அவர் நிலையில் அவரை எப்படித் தவறு சொல்ல முடியும்? வாழ விரும்பிய பெண் கோமளா, அவள் ஏன் இப்படி முடிவைத் தேடிக் கொள்ள வேண்டும்? ஒரு கணநேர விரக்தியில் கயிற்றை நாடியிருக்கிறாள்... என்ன பைத்தியக்காரத்தனம்...!'' என்றாள் சந்தியா.

(தொடரும்)



விற்பனைக் கலை!

சவால்கள்;

''மெடிக்கல் ரெப் டை கட்டிக் கொண்டு 'டீக்காக' இருந்தால் போதாது. மருத்துவம் பத்தின லேட்டஸ்ட் விஷயங்களைப் படிச்சுத் தெரிஞ்சு வைச்சிருக்கணும்...''

சங்கடங்கள்..!

''...ஒரு ஃப்ளாட்டில் மூணாவது மாடி, காலிங் பெல்லை அழுத்தினேன். கதவு திறந்தது. நாலஞ்சு பசங்க - ஃபுல்லாக் குடிச்சிருந்தாங்க....''

திருவல்லிக்கேணி முரளி கேஃப் வாச லில் சாலையில் ஓர் அம்புக்குறி - சாக் பீஸால் வரையப்பட்டிருந்தது. அதன் அருகே சில ஆங்கில எழுத்துக்கள். அம்புக்குறி சுட்டும் திக்கில் கொஞ்சம் தூரம் நடந்து சென்றால், சாலையில் அதே போல் சங்கேதக் குறிப்புடன் மேலும் சில அம்புக் குறிகள். இந்த அம்புக்குறி சங்கிலியைப் பிடித்துச் சற்று தூரம் நடந்த பிறகு, ஒரு வீட்டு வாசலில் அம்புக் குறியுடன் 'L' என்ற ஆங்கில எழுத்து. அந்த வீட்டுத் திண் ணையில் அச்சுப் போல் 'அஞ்சலி' சேலை அணிந்த பெண்கள் கூட்டம். சிரிப்பும் கும்மாளமுமாக மதிய உணவு இடை வேளையைக் கொண்டாடிக் கொண்டிருந் தார்கள்.

ஆமாம்! நாள் முழுதும் இடைவிடாமல் கால்நடையாய்ச் சுற்றி, சோப்பு, பவுடர், எண்ணெய் என்று வகை வகையாக விற்றுப் பிழைப்பை நடத்தும் இந்தப் பெண்களுக்கு உணவு இடைவேளை தரும் ஓய்வுதான் கொண்டாட்டம்.

அவர்களை அணுகி பேட்டி என்றதும் உற்சாகமாகப் பேச ஆரம்பித்தார்கள்:

''ஒவ்வொரு நாளும் காலை குறிப்பிட்ட நேரத்தில் எங்கள் அலுவலகத்தில் முதலில் சந்திப்போம். அன்றைக்கு விற்க வேண்டிய பொருள்களை எடுத்துக் கொண்டு எங்க ளுக்கு ஒதுக்கப்பட்டப் பகுதிக்கு வரு வோம். எங்கள் குழுத் தலைவி (இவர் மட்டும் சீருடையான அஞ்சலி புடைவை அணிவதில்லை!) நாங்கள் செல்ல வேண் டிய 'ரூட்'டைக் கூறுவார். எங்களுக்கு வழி காட்டச் சாலைகளில் அம்புக்குறியும் அதன் அருகே நாங்கள் விற்க வேண்டிய தயா ரிப்புக்களைக் குறிக்கும் சங்கேத எழுத் துக்களும் இருக்கும். அந்த ரூட்டில் சென்று ஒவ்வொரு வீடாக ஏறி இறங்குவோம். ஒவ்வொரு தெருவிலும், எல்லா வீடு களிலும் முயன்று பார்த்து விட்டு அம்புக் குறியை அழித்து விடுவோம். உணவு இடைவேளை நெருங்கும் போது 'L' எழுத் துடன் கூடிய அம்புக்குறியைத் தேடிச் செல்வோம். அந்தக் குறியிட்ட வீட்டின் உரிமையாளரிடம் நாங்கள் வெளியே நிழ லில் அமர்ந்து உணவு உண்ண முன்பே அனுமதி வாங்கப்பட்டிருக்கும். உணவு முடித்து மீண்டும் அம்புக்குறிகளைப் பின்பற்றிச் செல்வோம்.''

''இந்த வேலை சலிப்பைத் தர வில்லையா? முப்பது வகை சோப்பு இருக் கும்போது 'எங்கள் சோப்தான் உசத்தி' என்று நம்பவைத்து, எப்படி வாங்க வைப்பீர்கள்...?''

''ஆரம்பத்தில் மலைப்பாகவும் பயமாக வும் இருக்கும். அப்போது குழுத் தலைவி எங்களுக்கு உதவுவார். வழிகாட்டுவார். ஓரிரு வீடுகளுக்கு எங்களுடன் வருவார். போகப் போகக் குளிர் விட்டுப் போகும். கதவைத் திறக்கும் முகத்தைப் பார்த்துக் கவனமாக வார்த்தைகள் தேர்ந்தெடுத்துப் பேசி... எப்படியோ நிர்ணயித்த விற்ப னைக் குறியீட்டை அடைந்து விடுவோம்.''

''தினந்தோறும் வெவ்வேறு வகையான அனுபவங்கள் ஏற்படுவதால் வேலையில் சுவை கூடுகிறது என்று சொல்லலாமா?''

''சுவையோடு சவால்களும உண்டு; சங்கடங்களும் உண்டு. பெஸன்ட் நகர் போன்ற சில வட்டாரங்களில் விற்ப னையே ஆகாது. எரிந்து விழுபவர்கள், ஏளனமாகப் பார்ப்பவர்கள், பரிதாபப் பட்டு வாங்குபவர்கள், 'ஜில்லுனு மோர் சாப்பிடு' என்று மோர் கொடுத்து விட்டு 'சோப்'பை மறுப்பவர்கள்...''

''இதெல்லாம் இத்தொழிலில் எதிர் பார்க்கக்கூடிய சங்கடங்கள் தானே...?''

''எதிர்பாராத சங்கடங்களும் ஏற்படும்'' என்று மேலும் விவரித்தார் காமாட்சி:


''திருவான்மியூரில் ஒரு ஃப்ளாட்டின் மூன்றாவது மாடி. காலிங் பெல்லை அழுத்தியதும் கதவைத் திறந்த நான்கு இளைஞர்கள் ஃபுல்லாகக் குடித்திருந் தார்கள்... 'என்ன சோப்பா? நாலு குடுங்க' என்று கேட்டதும் கொடுத்து விட்டேன். அவர்கள் பணம் எடுத்து வருவதற்குள் கீழேயிருந்த இன்னொரு சேல்ஸ் கேர்ளைத் துணைக்கு அழைத்து வரப் போனேன். 'என்னம்மா! பணம் வேண்டாமா?' என் றார்கள். 'இதோ, சூப்பர்வைஸரை அழைத்து வருகிறேன்' என்று சொல்லி நழுவி, தோழியுடன் திரும்பினேன். பணத் தை வாங்கிக் கொண்டு வந்து விட்டேன். அந்தப் பையன்களுக்குத் தவறான எண்ணம் இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால், உயர உயரமாய் நான்கு ஆட்கள் போதை

* காமாட்சி



* நீலா





* சுப்ரமணியம்.

யில் இருக்கும்போது... பயமாகத்தான் இருந்தது!''

நடிகை தீபாவிடம் இரண்டு பாட்டில் ஃப்ளோர் வாஷ் விற்ற அனுபவத்தை விவரித்தார் நீலா: ''எனக்குப் பல மொழிகள் பேசத் தெரியும். யதேச்சையாக நடிகை தீபா வீட்டில் நுழைந்த போது அவரைப் பார்க்க விரும்புவதாக உதவியாளரிடம் சொன்னேன். தீபா வந்ததும் என் வியாபாரத்தைத் துவக்காமல் மலையாளத்தில் கொஞ்ச நேரம் தோழமையுடன் பேசினேன். கிளம்பும் சமயத்தில் என் வேலை பற்றிக் கேட்டார். இதுதான் தருணம் என்று நான் விற்பனைக்காக அத் தெருவில் அலைவதைச் சொல்ல, அவரே இரண்டு பாட்டில் தரை சுத்திகரிப்பு திரவம் வாங்கிக் கொண்டார்.''

நீலா, இரண்டு குழந்தைகளுக்குத் தாய். அவர்களுக்கு நல்ல கல்வி தர தன் உழைப்பை முதலீடு செய்கிறார். குண்டூர் அருகே கிராமத்தில் வசதியாக வாழ்ந்த வாழ்க்கையில் திடீர் நொடிப்பு ஏற்பட இத் தொழிலுக்கு வந்து சேர்ந்துள்ளார்.

காமாட்சிக்கு மூன்று குழந்தைகள். கணவரின் குறைந்த சம்பளத்தில் குடும்ப வண்டி ஓடாது என்பதால் நாளிதழ் விளம்பரம் பார்த்து இவ்வேலையில் சேர்ந்தார்.

கணவன் இறந்த பின் குடும்பப் பாரத்தைச் சுமக்கும் பெண்; சொந்த வீடு கட்ட வேண்டும் என்ற லட்சியத்துக்குப் பணம் சேர்க்கும் பெண்; பட்ட மேல் படிப்புப் படித்தும் தகுதிக்கு வேலை கிடைக்காத பெண்... என்று பலவிதமான பெண்கள் ப்ரெஸ்டிஜ் கன்ஸ்யூமர் புராடக்ட்ஸ் நிறுவனத்துக்காக வைராக்கியத்துடன் வேலை செய்கிறார்கள். நாளொன்றுக்கு இருபத்தைந்து ரூபாய் சம்பாதிக்கிறார்கள்.

''மற்ற விற்பனைப் பிரதிநிதிகளை விட, மெடிகல் ரெப்ரசன்டேடிவ்களுக்கு ஒரு தனிப் பெருமை உண்டு. தம் நிறுவனத் தயாரிப்புகளைப் பற்றித் தம்மை விடப் பல மடங்கு அதிக அறிவும், திறமையும், அனுபவமும் கொண்ட மருத்துவர்களிடம் எடுத்துச் சொல்லி அவர்களை நம்பிக்கை கொள்ளச் செய்தாக வேண்டுமல்லவா?'' - இப்படிக் கேட்பவர் ஜெயராம். இவர் தமிழ் நாடு தாதா பார்மசூடிகல்ஸ் மெடிகல் ரெப்ரசன்டேடிவ்.

''வளைந்து கொடுக்கும் தன்மை, சமயோசித அறிவு, புத்திசாலித்தனம் இவை மெடிகல் ரெப்ரசன்டேடிவ்களுக்கு அடிப்படைத் தேவை. அடுத்தது சரளமான மொழிவன்மை. பேசிப் பேசியே டாக்டர்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும். ஜுரம் என்றால் அதற்குரிய மருந்தின் ஃபார்முலா ஒன்றுதான். அதையே ஏகப்பட்ட கம்பெனிகள் தயாரிக்கிறார்கள். அதனால் போட்டி அதிகம். மருந்து தயாரிப்பாளர்களிடமிருந்து நோயாளிகள் நேரிடையாய் மருந்து வாங்குவதில்லை. எனவே, எங்கள் தயாரிப்புகளை எழுதிக் கொடுக்கும்படி டாக்டர்களிடம் சிபாரிசு செய்வது ஒருபுறம் என்றால், அவற்றை மார்க்கெட்டில் கிடைக்கச் செய்வது இன்னொருபுறம் என்று இரட்டை வேலை எங்களுக்கு. எனவே, டாக்டர்களைப் பார்ப்பதோடு மருந்துக் கடைக்காரர்களையும்



* குழுவுக்கு விளக்கம் தரும் தலைவி.

நினைவிருக்கட்டும், ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள உணவு இல்லாவிட்டால், உங்கள் குழந்தை எடை அதிகரிப்பதற்குத் தேவையான புரோட்டீனைப் பெறமுடியாது.

"ஆகவேதான் என் குழந்தைக்கு செரிலாக் தருகிறேன்."



உங்கள் டாக்டரைக் கேளுங்கள். அவர் இரண்டு உண்மைகளை உங்களுக்குத் தெரிவிப்பார். ஒன்று, குழந்தையின் தசை, திசு, ரத்தம் ஆகியவைவற்றைப்பேணி வளர்த்திட புரோட்டீன் உதவுகிறது. இரண்டு, சரியான புரோட்டீன்களைப் பெற, ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள உணவு குழந்தைக்குத் தேவை. ஒவ்வொரு வேளையும் ஒவ்வொரு நாளும்.

வழக்கமான உணவுகள் மூலமாக இதைச் சமாளிப்பது பெரும்பாலான தாய்மார்களுக்கு எளிதல்ல.

இதற்குத் தீர்வு?

ஸெரிலாக். காரணம், ஸெரிலாக்கில் பால் மற்றும் கோதுமை உள்ளன. இவற்றில் புரோட்டீன் மிகுந்து இருக்கிறது. மேலும், ஸெரிலாக்கில் கார்போஹைட்ரேட்கள், விட்டமின்கள், மினரல்கள், கொழுப்பு, இரும்பு மற்றும் கால்ஷியம் சத்துகள் சரியான விகிதத்தில் உள்ளன. நான்கு மாதம் முதல் குழந்தைக்கு வெறும் பால் உணவு மட்டும் போதாது. ஆகவே அப்போதிலிருந்து, கொடுக்கக்கூடியது, ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள திட உணவு ஸெரிலாக். இது மிகுந்த சுவை உள்ளதாக இருப்பதால், குழந்தைகள் மிகவும் விரும்புகிறார்கள்.

ஆகவே, ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள ஸெரிலாக்கின் அனைத்து அனுகூலங்களையும் உங்கள் குழந்தைக்கு அளியுங்கள். குழந்தைக்கு 6 மாதம் ஆனதும் விட்–ஆப்பிள், விட்–ஆரஞ்சு மற்றும் விட்–வெஜிடபிள் ஆகியவற்றின் கூடுதல் அனுகூலத்தையும் அளியுங்கள்.

பேக்கின் மீதுள்ள விதிமுறைகளைப் பின்பற்றுக.

இலவசம் ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்

எழுதுங்கள்: ஸெரிலாக், போஸ்ட் பேக் நம்பர் -21, புது தில்லி–110 029

நெஸ்லேயின் ஒரு தரமான தயாரிப்பு



உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் ஸெரிலாக்.

தினமும் சந்திக்க வேண்டும். மொத்த ஸ்டாக்கிஸ்டுகள் மூலமாய், மருந்துக் கடைகளுக்கு மருந்துகள் சப்ளை செய்யப்படுவதால், அவர்களையும் அவ்வப்போது சந்திக்க வேண்டும்.

''ஒவ்வொரு 'ரெப்'பும் தமக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் உள்ள டாக்டர்கள் பற்றி முழுமையாய்த் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். அவர் பிராக்டிஸ் நேரத்தில், எந்தச் சமயத்தில் போனால் கொஞ்சம் ஃப்ரீயாய் இருப்பார் எனத் தெரிந்திருந்தால் அனாவசியமாய்க் காத்திருக்க நேராது. பல பிஸியான டாக்டர்கள் வாரத்தில் ஒரு குறிப்பிட்ட தினத்தில் சில மணி நேரங்களை மருத்துவப் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கென்றே ஒதுக்கி விடுகிறார்கள்!

''நல்ல சம்பளம் என்றாலும் வேலை கடினம். அலைச்சல் ஒருபுறம் என்றால் மருத்துவம் பற்றிய லேட்டஸ்ட் அறிவை வளர்த்துக் கொள்வது மூளைக்கும் வேலை. காலை பத்து மணிக்குப் போனால், மாலை ஐந்து மணிக்கு வேலை முடிந்தது என்று இல்லை. ஒரு நாளைப் போல இரவு வீடு திரும்ப ஒன்பது, பத்து மணியாகி விடும். சினிமா, டீ.வி., என்று ஒரு பொழுதுபோக்குக்கும் நேரம் கிடையாது. டாக்டரின் கிளினிக்கிற்குள் நுழைந்தவுடனே, ''ஐயையோ! இவன் வந்து விட்டானே! உள்ளே நுழைந்தால் இலேசில் வர மாட்டானே; நமக்கு லேட்டாகுமே!'' என்பது போல டாக்டரைக் காணக் காத்திருக்கும் நோயாளிகள் பார்ப்பார்கள்.

''சில டாக்டர்களுக்குப் புத்தகங்களில் நாட்டம் இருக்கும். சிலருக்கு இசை. சிலருக்கு சினிமா அல்லது அரசியல். போனவுடன் அவருக்குப் பிடித்தமான சப்ஜெக்ட்டை ஓரிரு நிமிடங்கள் அலசி விட்டு அதன்பின் பிசினஸ் பேசுவோம்!

''ஒரு பிசியான டாக்டரின் மகன், ஸ்டாம்ப் சேகரிப்பதில் ஆர்வமுள்ளவன் என்று அறிந்து, ஒரு 'ரெப்' அவ்வப்போது கொடுத்த சில அயல்நாட்டு ஸ்டாம்புகள் அவருடைய விற்பனை இலக்கை அடையப் பெருமளவு உதவியது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!''

''எங்கள் வேலை இன்னும் கஷ்டம்! கண்ணெதிரே காட்டி விற்க, பொருளேதும் கிடையாது'' என்கிறார் சுப்ரமணியம். கேம்ஸ் ஸாஃப்ட்வேர் எஜுகேஷன் சென்டரில் இவர் மார்கெட்டிங் எக்ஸிகியூடிவ்.

''எங்கள் நிறுவனத்தின் கம்ப்யூட்டர் கோர்ஸ் பற்றி எடுத்துக் கூறி, மாணவர்களைச் சேர வைப்பதுதான் என் பணி. ஒருமுறை, ஒரு கல்லூரி மாணவனை அவன் வீட்டிற்குப் போய்ச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த போது, அவனுடைய தந்தையும் உடனிருந்தார். பையன் அத்தனை ஆர்வம் காட்டாவிட்டாலும், அவனுடைய அப்பாவுக்கு ரொம்ப நம்பிக்கை உண்டாகி அவரே வந்து சேர்ந்து விட்டார்! பெரிய நிறுவனங்களை அணுகி, அங்கே பணிபுரிபவர்களின் தேவையறிந்து, அதற்கேற்ப பயிற்சித் திட்டங்கள் வகுத்துத் தந்து, பயிற்றுவிப்பதையும் செய்து வருகிறோம். ஒரே ஒரு சங்கடம்தான்... நான் விளக்க மளிக்க ஆரம்பித்ததும் தம்மை ஏதோ கம்ப்யூட்டர் புலி என்று நினைத்துக் கொண்டு குறுக்கிட்டு, எனக்கே லெக்சர் அடிக்க ஆரம்பிக்கிறவர்களையும் சகித்துக் கொள்ள வேண்டும்!''

பேட்டி: மௌஷ்மி, பகவதி.

வண்ணப்படம்: உத்ரா (நடிப்பு: தங்கம் சந்திரமோகன், கல்யாணி கண்ணன்)

வாசகர் யோசனை :
அ. ஷண்முகசுந்தரம்,
சென்னை - 64.

புகைப்படங்கள் : சுபா

ஃப்ரிஜ் பரிசு: கூப்பன் நெ. 7

''நேற்று வரை நந்தவனம்'' தொடர்கதையில் இந்த வாரம் வேண்டுமென்றே செய்யப்பட்டுள்ள தவறு என்ன? கவனமாகப் படித்துக் கண்டுபிடித்து இந்தக் கூப்பனில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். இவ்வாறே வாரா வாரம் கூப்பன்களைப் பூர்த்தி செய்து சேகரியுங்கள். கதை முடியும் கடைசி வாரம் 5 - 10 வரி விமர்சனத்துடன் நீங்கள் சேகரித்துள்ள எல்லாக் கூப்பன்களையும் எங்களுக்கு அனுப்புங்கள். மிக அதிகமான அளவில் தவறுகளைக் கண்டுபிடித்துத் திருத்தியிருப்பவருக்கு ஃப்ரிஜ் பரிசு! மற்ற ஆறுதல் பரிசுகளும் உண்டு!

தவறு : ____________________

திருத்தம் : ____________________



நீங்கள் கேட்டவை - தராசு

✱ எஸ். நாரம்புநாதன், சுரண்டை.

? 'பாரதிய ஜனதா அல்லது இ. காங்கிரஸுக்கு வோட்டுப் போடுங்கள்' என்று காஞ்சி சங்கராச்சாரியார் கூறி யிருப்பது பற்றி....?

! தேவையற்ற அறிக்கை.

✱ எல். மாறன், மேல்பட்டி.

? 'தொங்கு பாராளுமன்றம்' ஏற்படும் அபாயம் இருப்பதாக அஞ்சுகிறார்களே?

! ராஜீவ் மரணத்துக்குப் பிறகு அந்த அபாயம் இல்லை. அனுதாப அலையால் மெஜாரிடி பலம் பெறப் போகும் காங்கிர ஸின் தலைமைப் பதவி யாருக்கு என்ப தில்தான் இனி 'தொங்கல்'! ஒப்புக் கொள்ளாமலிருந்த சோனியா புத்திசாலி!



உனியாக இருந்து...

அரசியல் அநாகரீகம் என்றால் என்ன?

✱ எம். டி. அரசு இந்திரன், எண்டத்தூர்.

? தற்போதைய ஜனநாயகம் என்பது?

! நோட்டு, பாட்டு, வேட்டு, வோட்டு!

✱ எஸ். செல்லத்தாய், சென்னை.

? அரசியல் அநாகரிகம் என்றால் என்ன?

! அன்று முஃப்தி முகமது மகள் கடத் தப்பட்ட போது பயங்கரவாதிகளை விடு தலை செய்து அந்தப் பெண்ணை மீட் டார்கள். இப்போது ஆந்திராவில் (காங் கிரஸ்) சிவசங்கர் மகன் கடத்தப் பட்டபோ தும் நான்கு பயங்கரவாதிகளை விடுதலை செய்துதான் அவரை மீட் டார்கள். ஆனால் முன்பு வானத்துக்கும் பூமிக்குமாகக் குதித்து, 'நான் அதிகாரத்தில் இருந்து என் மகள் கடத்தப்பட்டிருந்தால் இப்படி பணிந்து போயிருக்க மாட்டேன்' என்று வீர வசனம் பேசியவர் இப்போது வாய் திறக்கவேயில்லை. அரசியல் அநாக ரிகத்துக்கு இது ஒரே ஒரு எடுத்துக்காட்டு. இப்படி எத்தனையோ. நம் நாட்டில் அதற்குப் பஞ்சமே கிடையாது.

✱ வி. ராஜா, சீர்காழி.

? நேபாளப் பிரதமர் பட்டராய் பதவி விலகி விட்டாரே?

! தோல்வியிலும் மிகக் கௌரவமாக நடந்து கொண்டு கண்ணியத்துடன் பேசிய நாகரிகம் தெரிந்த அரசியல்வாதி.

✱ ஏ. ஜி. கே. சுந்தர், எம். கே. பாளையம்.

? சமீபத்தில் உங்களை மிகவும் சிரிக்க வைத்த சம்பவம்?

! 'உதிர்ந்த ரோமம்' என்று தன்னை ஜெயலலிதா குறிப்பிட்டது, 'இழிவுபடுத்த அல்ல; இலக்கிய நயத்துக்காக' என்று நெடுஞ்செழியன் திருவாய் மலர்ந்தருளி யதுதான்!

✱ கே. மகேஷ், சங்கராபுரம்.

? 'இரு கைகள் போதாது' என்று எப்போதாவது நினைத்ததுண்டா?

! உண்டு. கையில் முத்திரையிட வேண்டும் என்பதால் தன் உள்ளங்கையில் அழுத்தமாக முத்திரை பதித்துக் கொண்டு வோட்டுச் சீட்டை மடித்துப் பெட்டியில் போட்டு விட்டு வந்த பெண்மணி பற்றி



தேவையற்ற அறிக்கை

இலக்கிய நயம்





தலைநகரை மாற்றுவாரா?



நாகரிகம் தெரிந்தவர்



புத்திசாலித்தனம்

நாளிதழில் படித்த போது, 'இரண்டு கை போதாது தலையில் அடித்துக் கொள்ள' என்றுதான் தோன்றியது. நமது கோபம் அந்தப் பெண் மீது அல்ல. இப்படி தற்குறிகளாக நமது மக்களை வைத்திருக்கும் தலைவர்கள் மீது.

✱ ப. விஜயபாலன், சென்னை.

? எம்.ஜி. ஆரின் வாரிசு ஆட்சிக்கு வந்தால் தலைநகர் மாற்றப்படுமோ?

! அத்துடன் தபால்கார்டு விலையும் குறையும்.

✱ கே. அருணாசலம், தென்காசி.

? அ. தி. மு. க. ஐந்து லட்ச ரூபாயை வங்கதேசப் புயல் நிவாரண நிதிக்கு நன்கொடையாக வழங்கியது பற்றி...?

! பணக்காரக் கட்சி.

✱ பி. கே. சங்கர், சென்னை.

? மாணவர் தலைவராக இருந்த போது சட்டசபைத் தேர்தலில் காமராஜரைப் படுதோல்வியுறச் செய்த சீனுவாசன் இன்று காங்கிரஸில் சேர்ந்திருக்கிறாரே?

! கட்சி மாறிகளால் எப்போதுமே பிறந்த வீட்டுக்கும் அவப்பெயர்; புகுந்த வீட்டுக்கும் கெட்ட பெயர்!

✱ ஆர். எஸ். இராஜ், காரைக்கால்.

? கவர்னர் ஆட்சியில் காவல் துறையின் போக்கு?

! 'சட்ட ஒழுங்கை நிலைநாட்டவில்லை; விடுதலைப் புலிகளை அடக்கவில்லை' என்ற காரணம் காட்டி தி. மு. க. ஆட்சியைக் கலைத்தார்கள். ஆனால் நடப்பது என்ன? கவர்னர் ஆட்சியில் நகரில் தினம் இரண்டு கொலை; நாலு கொள்ளை. புலிகளோ முன்னாள் பிரதமரின் உயிரையே முடித்து விட்டார்கள்! காவல் துறையானது பாதுகாப்புப் பிரிவு, சட்ட ஒழுங்கு பிரிவு, துப்பறியும் பிரிவு ஆகிய எல்லா அம்சங்களிலும் தரம் கெட்டுப் போனது. இதை விடக் கேவலம் இந்தச் சீர்குலைவுக்கு யாரும் தார்மீகப் பொறுப்பு ஏற்க முன்வராதது! மனச்சாட்சி என்று இருந்தால்தானே!

✱ வே. செந்தில்குமார், கொங்கணாபுரம்.

? 'ஜெயலலிதா மலையாக இருந்தாலும் நான் உளியாக இருந்து தகர்ப்பேன்' என்கிறாரே டி. ராஜேந்தர்?

! டி. ஆருக்கு உதவுவதற்காகவே (அவரைப் பிடிக்காவிட்டாலும்) ஏதோ சாக்குப் போக்குக் கூறி தி. மு. க. வேட்பாளர் வாபஸ் பெற, தி. மு. க. தொண்டர்கள் முழுமையாக டி. ஆருக்கு இன்று உதவ, உளியால் மலையைத் தகர்க்க முடியாது போனாலும் ஒரு முத்திரையைச் செதுக்கி விடும்.

✱ சிவ. சீனிவாசன், கும்பகோணம் ✱

? இந்தியத் தேர்தலில் வன்முறையைக் குறைக்க ஒரு வழி சொல்லுங்களேன்?

! நடந்து முடிந்த முதல் கட்டத் தேர்தலைக் கவனியுங்கள். எல்லாக் கட்சிகளுமே வோட்டுச் சாவடிகளைக் கைப்பற்றியுள்ளன. எல்லாக் கட்சியினருமே வன்முறையில் இறங்கியிருக்கிறார்கள். கள்ள வோட்டுக்களைப் போட்டிருக்கிறார்கள். மக்கள் பயந்து போய் வோட்டுப் போடவே முன்வராமல் இருந்திருக்கிறார்கள். இவையெல்லாம் நமக்குத் தலைகுனிவு மட்டுமல்ல; ஜனநாயகத்திலேயே நம்பிக்கை இழக்கச் செய்து விடும். தீர்வு என்ன? எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடிப் பேச வேண்டும். நாட்டு நலன் கருதி சில முடிவுகளை எடுக்க வேண்டும். 'குண்டர்களைக் கட்சியில் சேர்ப்பதில்லை; கம்பி எண்ணியவர்களை வேட்பாளர் ஆக்குவதில்லை; ஜாதி மதப் பூசல்களை வளர்ப்பதில்லை; கொள்கைப் பிரசாரம் மட்டுமே செய்வது, அவதூறுகளைச் சுமத்துவதில்லை' என்ற முடிவுக்கு வந்து அதில் உறுதியாக நின்றால் அப்புறம் வன்முறை எப்படி தலைகாட்டும்? ஆக, தவறு ஜனநாயகத்தில் அல்ல; மக்களை வழி நடத்திச் செல்ல வேண்டிய தலைவர்களே தவறான வழியில் செல்வதுதான் காரணம்.

✱ அ. சு. கிருஷ்ணன், சென்னை.

? நம்முடைய தேர்தல் முறையைப் பார்த்த பிறகும் நீங்கள் ஜனநாயக முறையை ஆதரிப்பது ஏன்?

! அதைவிடச் சிறந்த ஆட்சி முறை ஒன்று இல்லாத காரணத்தால்.

✱ ரூ. 20 பரிசு பெறுபவர்:
சிவ. சீனிவாசன்,
13 - ஏ வினைதீர்த்த தெரு,
கும்பகோணம் - 612 001.

நேற்றுவரை நந்தவனம்

8

'இவனை எங்கே பார்த்திருக்கிறோம்...'

மீரா, அதிகம் மூளையைக் கசக்கிக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை.

நாகு மாமா, மிகவும் சகஜமாய்ப் பெயர் சொல்லி அழைக்கிறார்.

''வாப்பா குமரா... என்ன உன்னைக் காணுமேன்னு நினைச்சிட்டே இருந்தேன்...''

இதற்குள், காரில் ஏறிய மீராவின் தந்தை அவசரமாய் இறங்குகிறார்.

''உங்க கிட்ட சொல்லிக்காமப் போறோமேன்னு என் ஒய்ஃப் கிட்ட புலம்பிண்டே இருந்தேன். ஏதோ, நீங்க எல்லாம் சிரமத்தைப் பார்க்காம உதவினதுனாலே தான் என் பொண்ணை இந்த அளவுலே யாவது பார்க்க முடியறது...''

அப்பா, மீராவின் பக்கம் திரும்புகிறார்:

''அம்மா மீரா... பஸ் ஆக்ஸிடென்ட்டுல காயமடைஞ்சவங்களுக்கெல்லாம் சார்தான் உயிர் பிச்சைக் கொடுத்தது. அவரும், அவர் ஃபிரண்ட்ஸும் எப்பவும் ஹாஸ்பிடல் லேயேதான் இருப்பாங்க. ரத்தம் கொடுக்கறதுலேயிருந்து - அவசரத்துக்கு மருந்து வாங்க ஓடறது வரைக்கும்... இதுல என்ன துயரம்னா - இதே பஸ் ஆக்ஸிடென்ட்டுல சாரோட அப்பாவும், ஒய்ஃபும் இறந்துட்டாங்க.... அம்மாவுக்கு ஆறுதல் சொல்றதா, இல்லே - தன் அம்மாவைப் பறிகொடுத்த குழந்தையைச் சமாதானப் படுத்தறதான்னு புரியாம தவிச்சிட்டிருக்கார்.... இத்தனைக் கஷ்டத்துலேயும் மத்தவங்களுக்கு ஹெல்ப் பண்ணணும்னா - அதுக்கு ரொம்பப் பெரிய மனசு வேணும்.....''

மீரா - மோட்டார் சைக்கிளிலிருந்து இறங்கவிருந்த இளைஞனைப் பார்க்கிறாள்.

இவள் பார்க்கிறாள் என்பது தெரிந்தவுடன் - அவன், தன் விரலிடுக்கில் அது நேரம் வரையில் புகைத்துக் கொண்டிருந்த சிகரெட்டைத் தரையில் போட்டு அவசரமாய்ச் செருப்புக் காலால் தேய்க்கிறான்.

மீரா, மெள்ள, கைகுவிக்கிறாள்.

''தாங்க்ஸ்....''

நாகு, இதற்குள் வழக்கம் போல குறுக்கிடுகிறார்.

''மீரா... குமரன் நம்ம கீர்த்தியோட கிளாஸ் மேட்...''

'இந்த விஷயம் இப்போது ரொம்பவும் அவசியம்தானா' - என்பது போல மீராவின் தாய் கடுப்புடன் பார்க்கிறாள்.

''புறப்படலாமே... ஆச்சு.... இப்பவே கிளம்பினாத்தான்... இன்னும் பத்து நிமிஷத்துல ராகு காலம் வந்துடும்....''

அப்பா, இது எதுவுமே காதில் விழாதவராய், முள் படர்ந்த தாடியைச் சொறிந்தபடி, கட்டை மாதிரி நிற்கிறார்.

குமரன்தான் மீராவைப் பார்த்துப் பேசுகிறான்.

''நடந்ததை எல்லாம் மறந்துடுங்க மேடம்...''

''அஃப்கோர்ஸ்... டிரை பண்ணறேன். ஆனா, என்னைச் சொல்றீங்களே, உங்களாலே முடியுமா... சண்டை போட்டு, டிவோர்ஸ் வாங்கிட்டு, அம்மா வீட்டுல போய் இருந்தாலும் - உங்க ஒய்ஃபை நினைக்காம, உங்களால் இருக்க முடியுமா. இல்லே, உங்க அம்மாவாலேதான் உங்க அப்பாவை மறந்துட்டு வாழ முடியுமா...''

''நிஜம்தான். கண்டிப்பா இந்த உறவெல்லாம் ஆயுசுக்கும் மனசை விட்டு நீங்காததுதான். ஆனா, ஒரு விதத்துல பார்க்கப் போனா - உங்களுக்குக் கீர்த்தி மரணத்தோட பாதிப்பு சீக்கிரம் மறைஞ்சிடும்... கல்யாணமாகி பத்து நாளுலேயே... இது ஜஸ்ட் லைக் டிரெயின் ஃபிரண்ட்ஷிப்....''

மீரா - இன்னமும் பிடிவாதமாய் விரல் நகத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் மருதோன்றிச் சிவப்பையே வெறித்தபடி சொல்கிறாள்.

''நோ.... நீங்க நினைக்கற மாதிரி, இது அத்தனைச் சுலபமான விஷயமில்லே. உங்க அம்மா உங்க அப்பாவோட வாழ்ந்திருக்காங்க. சண்டையோ - சுகமோ அனுபவிச்சிருக்காங்க. நீங்களும்தான் - உங்களுக்குள்ளே ஆயிரம் இருந்தாலும் - உங்க மனைவிய நினைக்கப்பார்க்கற சமயத்துல சந்தோஷமோ - துக்கமோ - நிறைய சம்பவங்கள் இருக்கு. அவ நினைவா ஒரு குழந்தை இருக்கு... எனக்கு அப்படி

அனுராதா ரமணன்

யில்லே. இலையில உட்கார்ந்து, முதல் கவளத்தை எடுத்து வாயில போடற துக்குள்ள கையைத் தட்டி விட்டாப்பல....''

''.........''

''எனக்கு அவரைப் பத்தி எதுவுமே தெரியாது... அவரோட ரசனை, விருப்பு, வெறுப்பு... சுபாவம்.... உங்களுக்காவது கிளாஸ்மேட்ங்கிற முறையில் அவரைப் பத்தி ஏதாவது தெரிஞ்சிருக்கலாம்.... யூ நோ... அவர் நன்னாச் சாப்பிடுவார்ங்கறது தெரியும்.... முதல் தடவை சாதம் போட நச்சே பயந்துட்டேன்... பேச்சுல கிண்டல் இருந்தது... என் மேல.. என் மேல நிறைய ஆசை வச்சிருந்தார்... ஆனா - கடைசியா என்ன சொல்ல நினைச்சார்.... செத்துப் போறப்ப என் பேரைச் சொல்லிக் கூப் பிட்டாரா... பயந்து போய் அலறி னாரா... அழுதாரா.. இல்லே தூங்கிட்டிருந்தாரா... இதுக்கெல்லாம் விடை தெரியாம - என் னால எப்படி நிம்மதியா இருக்க முடியும்? சொல்லுங்க!''

மீராவின் குரல் கம்ம, தாய், மகளைத் தன் மார்புடன் சேர்த்தணைத்துக் கொள் கிறாள்.


''போதும்டி. அவனைப் பத்தின எல்லா நினைப்பையும் இந்தத் தஞ்சாவூர் மண்ணோடவே உதறிட்டு வா...''

மீரா, தனது கால்களுக்கு இதமாய்த் தாயின் மடிமீது வைக்கப்பட்டிருந்த தலை யணையை ஆக்ரோஷத்துடன் எட்டி உதைக்க முயற்சி செய்கிறாள்.

அவளது எண்ணங்களில் இருந்த வேகம், இன்னமும் பாதங்களுக்கு வராததால், சின்னத் துடிப்புடன் - கால்கள் தலை யணையிலேயே துவள்கின்றன.

குமரன், அதட்டும் குரலில் சொல் கிறான்.

''மீரா... நீங்க ஒண்ணும் சின்னக் குழந் தையில்லே. படிச்சிருக்கீங்க. வயசான அப்பா, அம்மாவுக்கு மேலும் வருத்தத் தைக் கொடுக்காதீங்க. அரசியலும் இரு மணமும் கிட்டத்தட்ட ஒரே மாதிரிதான். எலக்ஷனுக்குப் பயந்தோ, பிடிக்காமலோ வாபஸ் வாங்கினா டெபாஸிட்டோட போச்சு. வாழ்க்கையில இதே மாதிரி கல் யாணமான உடனே பிரிய நேர்ந்துதுன்னா ஒருத்தர் மேல ஒருத்தர் வச்சிருக்கற மரி யாதையோட போச்சு. எலக்ஷன்லே நின்னு தோற்கிறவங்களும், பிள்ளை குட்டியப் பெத்துட்டு தாம்பத்ய வாழ்க்கையில பிரி யறவங்களும் ஒண்ணு. பணச் செலவும், கசப்பும்தான் மிச்சம். அப்படியே ஜெயிச்சு வந்தவங்களானாலும் சரி..... வாழ்க்கை யில முப்பது நாற்பது வருஷம் சேர்ந்து வாழறவங்களானாலும் சரி... பிரமாதமா ஒண்ணும் சாதிச்சிடப் போறதில்லே. பிடிக்



குதோ பிடிக்கலையோ எப்படிக் காலப் போக்குல ஜனங்க இந்தத் தலைவனை ஏத்துக்கறாங்களோ - அப்படித்தான் ஃபேமிலியிலேயும்....''

''நான் டெபாஸிட்டை இழந்தாலும் அப்படி இழக்கறதுக்குக் காரணமாயிருந்தவங்களைச் சும்மா விடப் போறதில்லே...''

மீரா அழுத்தமாய்ச் சொல்கிறாள்.

குமரன், புருவத்தை உயர்த்துகிறான்.

''புரியலை...''

''தனி மனுஷ விரோதத்துக்காக ஒரு பஸ்ஸில இருந்த அம்பத்திரண்டு பாஸஞ்சர்ஸோட உயிருக்கும் விலை வச்ச அந்த விரோதிய - அவன் சமூக விரோதியோ இல்லையோ... என் வரைக்கும் அவன்தான் என் முதல் விரோதி... கண்டு பிடிச்சுத் தகுந்த தண்டனை வாங்கிக் கொடுத்தாத்தான் எனக்குத் தூக்கம் வரும்....''

குமரன் - வரிசைப் பற்கள் தெரிய - முதன் முறையாகச் சிரிக்கிறான்.

''உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்? அதுக்குத்தான் நாங்க இருக்கோமே.... எப்படியும் ஒரு நாள் அந்த சமூக விரோதிய அடையாளம் தெரிஞ்சுக்காம எங்க ஆயுசு முடியப் போறதில்லே... அப்படி என் கையாலே பிடிபட்டான்னா - உங்களைத் தந்தியடிச்சு வரவழைக்கிறேன். உங்க பங்குக்கு என்ன தண்டனை தரணுமோ தந்துடுங்க....''

மீரா சிலையாய் அமர்ந்திருக்க - அம்மா தொண்டையைச் செருமுகிறாள்.

மனைவியின் சமிக்ஞையைப் புரிந்து கொண்ட அப்பா, 'லபக்'கென வண்டியில் ஏறி உட்காருகிறார்.

''கிளம்பலாமே...''

அவரது கட்டளைக்காகவே காத்திருந்தாற் போல கார் கிளம்ப -

''நான் இப்படியே உங்க கூட வந்து, வைத்தியர் தெரு முனையில் இறங்கிக்கறேன்...''

நாகு, முன் பக்கம், மீரா அப்பாவின் பக்கத்தில் தொத்திக் கொள்கிறார்.

'' 'சாப்பிட்டபின் மாவாட்டும் வசதி இங்கு இல்லை'ன்னு போர்டு வெச்சது தப்பாப் போச்சு.''

''ஏன்... என்னாச்சு?''

''வர்றவங்களெல்லாம், 'மாவாட்டிட்டுச் சாப்பிடலாமா'ன்னு கேட்டு உயிரை எடுக்கிறாங்க!''

- சீர்காழி. வி. ரேவதி.



குமரன் தனது ஸ்கூட்டரை ஓட்டிக் கொண்டு காருடன் சிறிது தூரம் வருகிறான்.

''சார்... உலகம் ரொம்ப மோசமாயிண்டு வர்றது. பணத்துக்காகவும், பதவிக்காகவும் - அப்பனை பிள்ளை கொல்றதும், தாலி கட்டின பொண்டாட்டி கழுத்தை நெரிக்கறதும் சகஜமாயிடுத்து...''

நாகு தன் பாட்டுக்குப் புலம்புகிறார்.

''அதுக்காக? மீரா சொல்ற மாதிரி அவங்க துவேஷத்தைத் தனிப்பட்ட முறையில வச்சுக்க வேண்டியதுதானே? பொது மக்களோட வாழ்க்கையே இதனாலே பாழாய்ப் போறது வயித்தெரிச்சல் இல்லையா...''

''கோபம்னு வந்தா இதெல்லாம் சகஜம் தான். சதாம் உசைன் செஞ்சதை விடவா? அந்தாளுக்கு என்ன... பச்சைக் குழந்தைகள் பேருலேயும், ஒண்ணும் அறியாத பொம்மனாட்டிகள் பேருலேயும் என்ன விரோதம்... ஒண்ணுமே இல்லே. 'தட தட'ன்னு குண்டை உதிர்த்துண்டே போறச்சே - குழந்தை - குட்டின்னு பார்த்துண்டிருக்க முடியுமா?''

நாகு, மீராவின் பக்கம் லேசாகக் கழுத்தைத் திருப்பிச் சொல்கிறார்.

''இப்ப நம்மை வழி அனுப்பி வைக்க வந்தானே... குமரன்.... எக்ஸ் எம். எல். ஏ. தர்மராஜன் பிள்ளை... இவனே கூட, பஸ்ஸுலே வெடிகுண்டை வச்சிருக்கலாம்னு ஜனங்க பேசிக்கறாங்க....''

''சேச்சே... சொல்றவங்களுக்கு நாக்கு அழுகிப் போயிடும். அந்தப் பிள்ளை - உசிருக்கு மன்றாடிட்டு இருந்த எத்தனைப் பேரைக் காப்பாத்தினான்...''


மீராவின் தாய் படபடக்கிறாள்.

கடந்த சில நாட்களாய் - ஆஸ்பத்திரிக்குள் அவள் சின்னதாய் ஒரு சிநேகிதப் பட்டாளத்தையே சேர்த்து விட்டாள். அதில் மிக முக்கியமானவன் குமரன்.

'பஸ் எரிந்து சாம்பல், ஸ்தலத்திலேயே இறந்தவர்களின் பட்டியல்....' - இப்படி ஏதாவது ஒரு செய்தியைக் காலனி வீட்டில், அமர்ந்து காப்பியைப் பருகியபடியே படிப்பதற்கும் - இங்கே நேரிட அனுபவிப்பதற்கும் -எத்தனை வித்தியாசம்!

யார், என்ன பெயர், எந்த ஊர் எதுவும் தெரியாது... ஆனாலும் சிகிச்சை பெறுபவர்களுக்கும், செய்தி கேட்டு அலறித் துடித்து ஓடி வரும் உறவினர்களுக்கும் - தனக்குமிடையே ஒரு உறவுப் பாலத்தை அமைத்துக் கொண்டு விட்டாள் அவள்...

தாங்களாவது - தங்களது உறவுக்காக வந்து அல்லல் படுகிறோம்... ஆனால் இருக்கிற சொந்தங்களையும் பறி கொடுத்து விட்டு ஒருவன் - உதவிக்கரம் நீட்டி ஓடி வருகிறான் என்றால்...



தடைகளைத் தாண்டி முன்னேறுங்கள்

ஒரு விளையாட்டுப் போட்டியில் பங்கு பெற்று, வெற்றி பெற விரும்புவோருக்கு அவ்விளையாட்டைப் பற்றி முழுமையாகத் தெரிந்திருக்க வேண்டும்.

அத்துடன் அவ்விளையாட்டில் முறையான பயிற்சி பெற்றிருப்பதும் அவசியமாகும்.

ஆர்வமும், முறையான பயிற்சியும் இருந்தால் எந்த ஒரு செயலிலும் நம்மால் எளிதில் வெற்றி பெற முடியும்.

நம்மில் பலர் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச விரும்புகிறார்கள். அதற்கான முயற்சியிலும் ஈடுபடுகிறார்கள்.

ஆனால்... ஆங்கிலத்தில் பேசினால் ஏதாவது தவறாகப் பேசி விடுவோமோ என்ற தயக்கமும், இலக்கணப் பிழை ஏற்பட்டு விடுமோ என்ற பயமும் இவர்களது முயற்சியைத் தடை செய்கின்றன.

தயக்கம், பயம் என்ற தடைகளைத் தாண்டி நமது முயற்சி வெற்றி பெற முறையான பயிற்சி அவசியமாகும்.

தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்ற தனிப்புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தினர் கடந்த பத்து ஆண்டுகளாக ஆங்கிலத்தில் மிகச் சிறந்த முறையில் எழுத, பேச பயிற்சியளித்து வருகிறார்கள்.

இதுவரை ஒரு லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இப்பயிற்சியில் சேர்ந்து பயனடைந்துள்ளனர்.

பயிற்சி முறை பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதால் உங்களது கல்வித் தகுதிக்கேற்ப தேவையான பிரிவைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி பெறலாம்.


வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இப்பயிற்சியினை நீங்கள் மேற்கொள்ளலாம்.

நேர்முகப் பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன. பெண்களுக்கென தனி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

தயக்கமின்றி ஆங்கிலத்தில் பேச வேண்டும், இலக்கணப் பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுதும் ஆற்றல் பெற வேண்டும் என்ற உங்களது நீண்ட நாளைய விருப்பம் நிறைவேற கீழ்க்கண்ட முகவரியில் இன்றே தொடர்பு கொண்டு பயன் பெறுங்கள்.

விவேகானந்தா கல்வி நிலையம்
தபால் பெட்டி எண்: 4986
9, நடேசன் தெரு,
தி.நகர், சென்னை-600 017.

Naga



''தவணை முறையில் ஸ்கூட்டர் வாங்கித் தர்றேன்னு சொன்ன என் மாமனார் இப்படிச் செய்வார்னு நான் எதிர்பார்க்கலை...''

''என்ன பண்ணினார்?''

''மாசம் ஒரு ஸ்பேர் பார்ட்டா வாங்கிக் கொடுத்து அசெம்பிள் பண்ணிக்கச் சொல்றாரு...''

- வி. கி. குமார்

அவனைப் பாராட்டாவிட்டாலும் ஒழி கிறது. பழி சுமர்த்தாமலாவது இருக்க லாம் இல்லையோ....

இவளது மனத்தில் ஓடிய எண்ணத்தைப் படித்தாற் போல நாகு சொல்கிறார்.

''அம்மா... நாம எல்லாருமே அப்பாவி கள். கண்ணுக்கு நேரே ஒருவன் கொள்ளை யடிச்சிட்டுப் போனாலே தெரியாது. எதை யுமே மேலோட்டமாப் பார்த்தே பழக்கம். 'எனக்கு ஓட்டுப் போட்டவங்க அத்தனைப் பேருக்கும் தினமும் வடை பாயசத்தோட சாப்பாடு கிடைக்கச் செய்வேன்னு எவ னாவது சொன்னா - 'ஹா'ன்னு வாயைப் பொளந்துண்டு போய் விரல்லே மசி குத்திக்கத்தான் தெரியும். நாம என்னிக் குமே ஓட்டு போடத்தான் லாயக்கே தவிர - தட்டிக் கேட்கற சாமர்த்தியம் கிடையாது. ஆனா, இவங்க அப்படியில்லே!

''குமரனுக்கு அவனோட அப்பா கிட்ட பல விஷயங்கள் பிடிக்கலே.. அரசியல் போர்வையில அவர் அராஜகமா நிறைய விஷயங்களைச் செஞ்சிருக்காரு... இவனுக் கும் - இவன் பெண்டாட்டிக்கும் ஆக விடாம செஞ்சிருக்காரு. கள்ள வோட்டு சேர்த்தே ஜெயிச்சிருக்காரு... தன்னைப் பகைச்சிட்டவங்களைக் கொலை கூட செஞ்சிருக்காரு... இதெல்லாம் போதா துன்னு ஊரெல்லாம் சின்ன வீடுங்க... அப்படியும் இப்படியுமா எல்லாச் சின்ன வீடுகளுமாய்ச் சேர்ந்து, ஒரு காலனியே உருவாயிடும் போல இருக்கு... இதுக் கெல்லாம் ஒரு முடிவு வேண்டாமா.. அதான், தீர்த்துட்டான்...''

''அதே வண்டியில பெண்டாட்டியும் இருந்திருக்கா... அ தை யு ம் கொஞ்சம் யோசிக்கணும்... பாலுக்கு அழற குழந்தைய விட்டுட்டு... எவனுக்கு மனசு வரும்...''

மீராவின் தாய் குமைந்தாள்.

''நாம அப்படி நினைக்கிறோம். ஒரே கல்லுல ரெண்டு மாங்காய்னு அவன் நினைச்சிருக்கலாம். இதான் இன்னிக்கு அரசியல். நாலு பேரைத் தீர்த்துக் கட்டு வாங்க... அந்த ரத்தம் உலர்றதுக்குள்ளே நாலூறு பேருக்கு அன்னதானம் பண்ணு வாங்க... இங்கே, அவர் குடும்பத்துக்கு நிதி கொடுத்து பத்திரிகையில ஃபிளாஷ் பண்ணுவாங்க. குமரன் கூட இந்த ரகமா ஏனிருக்கக் கூ டா து ங் க றே ன் ? நீங்க வேணாப் பாருங்க; கூடிய சீக்கிரத்துல இவன் ஒரு மந்திரியா வந்தாலும் ஆச்சர்யப் படறதுக்கில்லே...''

மீராவின் தாயின் முகத்தில் குழப்பம்...

மீராவோ தஞ்சாவூரின் நெரிசலான போக்குவரத்தை - வெற்றுப் பார்வையால் அளந்தபடி மௌனமாய் இருக்கிறாள்.

''சொல்ல முடியாது. குமரன் மந்திரியா வந்து - இந்த பஸ் விபத்துல பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு லட்சக் கணக்குல வாரி வழங்கினாலும் வழங்குவான்... ஓ. கே... நான் இறங்க வேண்டிய இடம் வந்து டுத்து... வண்டிய ஓரம் கட்டுப்பா...''

நாகு, காரின் வேகம் குறைந்ததும் 'விசுக்'கென இறங்குகிறார்.

''ஊர் போய்ச் சேர்ந்ததும் லெட்டர் போடுங்கோ சம்பந்தி... மீரா, மனசைப் போட்டுக் குழப்பிக்காதே. மேலே படி....''

மீரா இலக்கில்லாமல் தலையாட்டு கிறாள்.

கார் நகரத் தொடங்கியதும் - அவள் தாய் எரிச்சலுடன் சொல்கிறாள்.

''இந்த நாகுவைக் கண்டாலே பிடிக் கலே! ஏதோ உதவி செஞ்சிருக்காரே தவிர - மனசுக்குள்ளே அத்தனையும் விஷம்....''

''சும்மாயிருடி...''

அப்பா அதட்டினாலும் அவள் ஓய வில்லை.

''அந்தப் பிள்ளையாண்டான் மேல அத்தனை பழி சொல்றாரே... அப்படிச் சொல்றதாயிருந்தா - நான் கூடத்தான் இவர் மேல ஆயிரம் பழி சொல்லுவேன்... தன் பொண்ணுக்குக் கிடைக்காத வாழ்வு - இன்னொருத்திக்கு கிடைக்கறதாவதுன்னு... இவர் ஏன் அந்த டைம்பாமை வச்சிருக்கக் கூடாதுங்கறேன்?''

''டைம் பாம்கறது என்ன ஓலைப் பட்டாசா? எதுக்கு இப்படி அநாவசியமா கற்பனைய வளர்த்துக்கறே? மீரா கொஞ்சம் தூங்கட்டும். நீ பேசாம வாயேன்...''

மீரா தூங்கவில்லை..... கண்ணை மூடி னால் - குமரன் வந்து நிற்கிறான்...

அவளது விழியோரத்தில் சின்னதாய் இரு முத்துக்கள்.

(தொடரும்)



உதயகுமார்

இன்று உயர்கின்ற குமார்!

அந்த இளைஞனுக்குப் பூச்சி மருந்து விற்பனையாளராய் வேலை. விவசாயிகளின் வீடு தேடிப் போய்ப் பார்த்துப் புதிய பூச்சி மருந்தைச் சிபாரிசு செய்ய வேண்டும். சத்தியமங்கலம் பகுதி முழுக்க அலைந்து, ஒரு விவசாயி விடாமல் சுற்றிக் கொண்டிருந்த நேரம்... ஒரு விவசாயி தம்மைத் தேடித் தெருத் தெருவாய்ச் சுற்றுகிறார் என்ற செய்தி அந்த இளைஞருக்கு எட்ட, உடனே புதிய பூச்சி மருந்துகள் சகிதம் அவ் விவசாயியிடம் போனார்.

வியாபாரம் ஆகவில்லை; வசவுதான் கிடைத்தது!

''ஏண்டா பாவி! உன் பேச்சைக் கேட்டு மருந்தடிக்கப் பதினஞ்சு ஏக்கர் பயிரும் பாழாய்ப் போச்சே! உன்னை என்ன செய்யறேன், பார்!....''

- ஓட, ஓட, தெருத் தெருவாய் அந்த இளைஞரை விரட்டினார் அந்த விவசாயி. உடல் வியர்க்கப் பயந்து போய் ஒரு சலூனில் ஒளிந்து கொண்டார் அவர். அங்குதான் திரைப்படக் கல்லூரி பற்றிய ஒரு பத்திரிகை விளம்பரம் கண்ணில்பட்டது. கல்லூரி நாட்களில் பெண் வேஷம் போட்டுக் கொண்டு, நாடகத்தில் நடித்தது, பக்கம் பக்கமாய்க் கவிதை எழுதி மயங்கியது; - எல்லாமே நினைவுத் திரையில் தோன்றின. இலேசாகத் துளிர் விட்டிருந்த சினிமா ஆசை ஆழமாக வேரூன்றியது அந்த இளைஞரின் மனத்தில்.

அன்று ஊரை விட்டுக் கிளம்பி வந்த இளைஞர் ஆர். வி. உதயகுமார், திரைப் படக் கல்லூரியில் டைரக்ஷன் துறையில் பட்டம் பெற்றார். 'உரிமை கீதம்', 'உறுதி மொழி', 'கிழக்கு வாசல்' என்ற படங்களை இயக்கினார். புதிய இயக்குனர்களுள் இன்று பேசப்படுகிறவராக விளங்குகிறார்.

விஜயகாந்த் கதாநாயகனாய் நடிக்கும் படம்; கமல் கதாநாயகனாய் நடிக்கும் இளையராஜாவின் சொ ந் த ப் படம்; கார்த்திக் கதாநாயகனாய் நடிக்கும் படம்... என்று டாப் ஸ்டார் படங்களை இயக்கும் வாய்ப்பைப் பெற்ற 'பிஸி' டைரக்டர்.

விஜயகாந்த் நடிக்கும் 'சின்னக் கவுண்டர்' படப் பூஜையை முடித்து விட்டு உதவியாளர்களுடன் படப்பிடிப்பு ஷெட்யூல் போட்டுக் கொண்டிருந்தவரை பாம்குரோவ் ஓட்டலில் சந்தித்தோம்.

''வேண்டாம் சார்! பேட்டியெல்லாம் வேண்டாம். பெரிய அளவில் நான் ஒண்ணும் செய்துடலையே...'' என்றார்.

''மூணு பெரிய 'பானர்' உங்களை நம்பிப் படம் கொடுத்திருக்காங்க. ரஜினி கூட அவர் படம் ஒன்றை இயக்கச் சொல்லிக் கேட்டிருக்காராம்... கேள்விப் பட்டோம்.''

''என்னைப் பொறுத்தவரையில், குறைந்த செலவில் ஓரளவு ஓடக்கூடிய படமாக எடுத்துத் தயாரிப்பாளருக்கு லாபம் பெற்றுத் தரணும் - எங்க பாஷையில் சொன்னால் 'காரண்டி ஃபிலிம்' - என் பதுதான் கொள்கை. அதற்கேற்றபடி கதையைத் தேர்ந்தெடுத்துக் குறுகிய காலத்தில் முடிக்கணும். பணம் முதலீடு செய்யற தயாரிப்பாளருடைய பட்ஜெட்டை மீறாமல் நான் படத்தில் சொல்ல நினைப்பதைச் சொல்லிடுவேன். சினிமா முதலில் தொழில்; அப்புறம்தான் கலை...'' என்றார் உதயகுமார்.

அதே மூச்சில், ''முழுக்க முழுக்க அடையாறு ஆலமரத்தைப் பின்னணியாகக் கொண்ட ஒரு ஸ்க்ரிப்ட் என்கிட்டேயிருக்கு. அதில் ஹீரோ ஆலமரம்தான். அதைப் படமாக்க வேண்டும்'' எனக் கூறிய உதயகுமாரை வியப்புடன் பார்த்தோம்.

''என்ன சிரிக்கறீங்க! நிஜம் சார்!'' என்றார் உதயகுமார் படு சீரியஸாக....!

- பாரதிபாலன்

**சிரிக்க வையுங்கள்;
சிங்கப்பூர் செல்லுங்கள்!**



தலைவிக்குக் கூட ஏன் நாற்காலி இல்லை?

"இந்தக் கூட்டத்திலே தலைவிக்குக் கூட ஏன் நாற்காலி போடலை?"

"நாற்காலி எதிர்க்கட்சி வேட்பாளரோட சின்னமாம்!"

சென்னை - 53, எஸ். கமலா சந்தானம்.

* * * * *




பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்தோம். ஜன்னல் ஓரமாக அமர்ந்திருந்த நண்பரின் மகன் (மூன்று வயது) திடீரென, "ஏம்பா, இந்த ஏரியாவிலே மாடுகளே இல்லையா?" என்றான்.

"ஏண்டா அப்படிக் கேட்கறே?"

"பின்னே? சுவத்திலே ஒட்டின பழைய சினிமா போஸ்டர் எல்லாம் அப்படியே இருக்கேப்பா!" என்றானே பார்க்கலாம்!

சென்னை - 12, கண்மணி சந்திரன்.



என் மகள் மூன்று வயதுக் குழந்தையாக இருந்த போது ஒருமுறை எதற்கோ மிகவும் பிடிவாதம் பிடித்துத் தரையில் புரண்டு அழுதாள். என் கணவர் அவள் அழுகையை நிறுத்த, "ஐய்யே! உன் புதுப் பாவாடை சட்டையெல்லாம் அழுக்காகிறதே" என்றார். உடனே அழுகையை நிறுத்தியவள், உள்ளே சென்று ஒரு பாயைக் கொண்டு வந்து விரித்து அதன் மேல் மறுபடி படுத்துப் புரண்டு புரண்டு அழ ஆரம் பித்தாள்!

சென்னை - 4, சியாமளா ராமசாமி.

* * * * *



"என்னது! எம். எல். ஏ. பதவி இந்திரா விகாஸ் பத்திரம் மாதிரியா? எப்படி?"

"ஆமாம், இரண்டிலுமே போட்ட பணத்தை ஐந்து வருஷத்திலே இரட்டிப்பு ஆக்கலாமே!"

பி. மணி, மேலப்பாளூர்.

* * * * *

"கரகாட்டக்காரன்" படத்தைப் பார்த்த இளைஞர் ஒருவர் பஸ்ஸில் ஓர் இளம் பெண்ணிடம், "காலத் தழுவிநிக்கும் கனகமணி கொலுசு; எம்மா, நானாக மாறிடத்தான் துடிக்குதம்மா மனசு..."



என்று ராகத்துடன் பாடினார்.

அவளும் விட்டுக் கொடுக்காமல் ராகத்துடன், ''காலத் தழுவி நிக்கும் என்னுடைய செருப்பு; அது நாலாகப் பிஞ்சுடும் புரிஞ்சுக்கோய்யா இளசு'' என்று பாடினாள். பஸ்ஸில் ஒரே அமர்க்களம் தான்!

சேலம் - 7, வி. ஆறுமுகம்.

★ ★ ★ ★ ★



கல்லூரியில் வகுப்பு தொடங்குமுன் ஒரு மாணவன் கரும்பலகையில் 'வகுப்பறை என்பது ஓர் அறுவைக் கூடம்' என்று எழுதி வைத்தான்.

வகுப்புக்கு வந்த பேராசிரியர் கரும்பலகையைப் பார்த்துப் புன்முறுவலுடன், ''சிவப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டவன், வெள்ளுடைப் பாதிரியாரை 'ரத்தக் காட்டேரி' என்றானாம்! உள்ளம் விரிவடைந்தால் எல்லாமே சுவைக்கும்!'' என்று கூறி, வாசகத்தில் ஓர் எழுத்தைச் சேர்த்தார். இப்போது அது 'வகுப்பறை என்பது ஓர் அறுசுவைக் கூடம்' ஆகியது.

சேலம் - 3, அ. மணிவாசகன்.

'ஒலியும் ஒளியும்' பார்ப்பதற்காக டி. வி. முன்பு ஆர்வமுடன் அனைவரும் அமர்ந்திருந்த நேரம். பாடல் காட்சி துவங்காமல் விளம்பரமாக வந்து கொண்டேயிருக்க, எல்லாருக்கும் ஏகப்பட்ட சலிப்பு....



அப்போது பார்த்து பிரபல 'என்னாச்சு?' விளம்பரம் திரையில் தோன்ற, என் சித்தி மகள் ஸ்ரீப்ரியா, ''பரம்பரையே அழுமூஞ்சிப் பரம்பரை போல்ருக்கு...!'' என்று கூற, அனைவரும் சலிப்பை மறந்து 'கலீர்' எனக் கலகலப்பாயினர்.


குன்னூர், ஆழ்வாரப்பன்.


★ ★ ★ ★ ★

பஸ் புறப்படும் நேரம். ஒருவர் ''யேசு வருகிறார்'' என்ற தலைப்பில் அச்சிட்டத் துண்டுப் பிரசுரங்களைப் பயணிகளுக்குக் கொடுத்தார். கண்டக்டரிடமும் ஒன்று கொடுத்த போது, ''யார் வந்தாலும் டிக்கட் வாங்க வேண்டியதுதான்'' என்றாரே பார்க்கலாம்!

கன்னியாகுமரி, ஆல்பெர்ட்.







சொன்னது சொன்னபடி...

பாயும்புலி பண்டாரக வன்னியன் நூல் வெளியீட்டு விழாவில் கேட்டவை :

''சென்ற தேர்தலுக்கு முன் 'பொன்னர் சங்கர்' நூல் வெளி வந்தது. அதன் விளைவைப் பார்த்தோம். இப்போது இந்த நூல் வெளியாகியிருக்கிறது...''

- பேராசிரியர் நன்னன்.

''இது நூல் வெளியீட்டு விழாவாகத் தெரியவில்லை; வெற்றி விழாவாகத் தெரிகிறது!...

''இந்த நூலில் ஒரு பெண், யானையை எதிர்த்துப் போராடுகிறாள். அவள் ஏன் யானையை எதிர்க்க வேண்டும்? ஏன் சிங்கத்தையோ அல்லது ஒரு புலியையோ எதிர்த்திருக்கக் கூடாது? யோசித்த போது புரிந்தது, நாம் ஒரு பெண் யானையை எதிர்த்துக் கொண்டிருக்கிறோம் என்பது...''

- கவிஞர் வைரமுத்து.

''கலைஞரின் எழுத்தில் வடமொழிச் சொற்கள் பரவலாக இடம் பெறுகின்றன. அப்படி இடம் பெறுவதாலேயே அவை தமிழ்ச் சொற்கள் ஆகி விடுகின்றன! அக்ரஹாரத்தைச் சேர்ந்த பாரதியாரும் வ. ரா. வும் சாவியும் தமிழர்கள் ஆகிவிடவில்லையா, அதுபோல!

- சாவி.

''நான் கூறியது பாராட்டு அல்ல; ஜட்ஜ்மெண்ட். என்னுடைய தீர்ப்புக்கள் பற்றித் தெரிந்தவர்களுக்கு நான் சொல்வது புரியும்.''

- மாண்பமை முன்னாள் தலைமை நீதிபதி மு. மு. இஸ்மாயீல்.

''இஸ்மாயீல் அவர்களின் தீர்ப்பு எப்போதுமே வழங்கப்படுவது, வாங்கப்படுவது அல்ல.''

- கலைஞர் மு. கருணாநிதி.

தொகுப்பு : கிச்சாமி.
படம் : சுபா, யோகா

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர்: சீதா ரவி.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் — சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/-; விமானத் தபால்: ரூ. 350/-.



நீங்கள் என்றும்
இளமைத் தோற்றத்தைப்
பெற...
கோத்ரெஜ் பவுடர் ஹேர் டைய் கொண்டு
இப்பொழுது நீங்கள் என்றும் இளமைத்
தோற்றத்தைப் பெறலாம். அதன்
மேம்படுத்தப்பட்ட ஃபார்முலா உங்கள்
கேசத்திற்கு இயற்கையான தோற்றத்தை
அளித்து நீடிக்கச் செய்கிறது. மேலும்
இதை உபயோகிப்பது எளிது.
கோத்ரெஜ் பவுடர் ஹேர் டைய்
இப்பொழுது உயர்தரமான தொழில்நுட்பத்துடன்
NEW IMPROVED FORMULA
PERMANENT NATURAL BLACK
EASY TO APPLY
PERMANENT NATURAL BLACK
Godrej
Self Spreading
'SHAMPOO BASED'
POWDER HAIR DYE
Concentrate
கோத்ரெஜ் வழங்கும் உன்னதமான பவுடர் ஹேர் டைய்

Registered as Newspaper in Srilanka



சுவையான இனிப்புப்பண்டங்கள் எளிதாகத் தயாரிக்கலாம்.

மில்க்மெய்டினால் தயாரிக்கப்பட்ட, சுவை நிறைந்த இந்த ஸ்பெஷல் இனிப்புப் பண்டங்களை உங்கள் குடும்பத்தினர் விரும்புவார்கள். இவற்றை எளிதாகத் தயாரிப்பதில் உங்களுக்கு ஒரே ஆனந்தம்தான்.

பாதாம் கீர்

5 பேருக்கு

சமைக்க ஆகும் நேரம்: 20 நிமிடங்கள்

தேவை

மில்க்மெய்ட் —1 டின், புதுப் பால் —1 லிட்டர்
முந்திரிப் பருப்பு —50 கிராம் (6 டேபிள் ஸ்பூன்)
வாதாம் பருப்பு எஸ்ஸென்ஸ் —1/4 டீஸ்பூன்

செய்முறை

1. பாலைக் காய்ச்சி ஆற வைக்கவும். உடைத்த முந்திரிப் பருப்பை 2 கப் பாலில் 2 மணி நேரத்துக்கு ஊற வைக்கவும். ஊறிய முந்திரிப் பருப்பை மைபோல அரைக்கவும்.
2. மில்க்மெய்டையும், அரைத்த முந்திரிப் பருப்பையும் சேர்த்து கலக்கவும்.
3. வாதாம் பருப்பு எஸ்ஸென்ஸை சேர்க்கவும்.
4. சூடாகவோ, குளிர வைத்தோ பரிமாறவும்.

கடலைப்பருப்பு பாயாசம்

6 பேருக்கு

செய்ய ஆகும் நேரம்: 30-35 நிமிடங்கள்

தேவை

மில்க்மெய்ட் —1 டின்
கடலைப் பருப்பு —1 கப்
வெல்லம் —100 கிராம் (1/2 கப்)
ஏலக்காய் பவுடர் —1/4 டீஸ்பூன்
தேங்காய் —1 (துருவப்பட்டது)
முந்திரிப் பருப்பு —10 (விரும்பினால்)
நெய் —1 டேபிள்ஸ்பூன்

செய்முறை

1. கடலைப் பருப்பை 3 கப் தண்ணீரில் குழையும் வரை வேக விட்டு பருப்பை மசிக்கவும்.
2. வெல்லத்தை ஒரு கப் நீரில் கரைத்து வடிகட்டவும்.
3. தேங்காய்த் துருவலிலிருந்து ஒரு கப் கெட்டிப்பாலும் ஒரு கப் அடர்த்தி குறைந்த தேங்காய்ப் பாலும் எடுத்துக்கொள்ளவும்.
4. வெல்லப்பாகு, பருப்பு, அடர்த்தி குறைந்த தேங்காய்ப் பால் மற்றும் ஏலக்காய்ப் பொடியை கலவையாக்கிக் கொள்ளவும்.
5. கலவையை இளந்தீட்டில் சிறிது நேரத்திற்கு வேகவிட்டு மில்க்மெய்ட் சேர்த்து கிளறி கெட்டித் தேங்காய்ப் பாலை சேர்க்கவும்.
6. முந்திரிப்பருப்பை நெய்யில் வறுத்து எடுத்தபின் மீதியுள்ள நெய்யிலேயே தேங்காய்த் துண்டுகளையும் வறுக்கவும்.
7. பாயாசத்தில் முந்திரிப்பருப்பு, தேங்காய்த் துண்டுகள் மற்றும் நெய்யைச் சேர்த்து கலக்கவும். அடுப்பிலிருந்து இறக்கி பரிமாறவும்.

இலவசம்

மில்க்மெய்ட் ரெஸிப்பி புத்தகம்

அதனைப் பெற போஸ்ட் பேக் 22,
புது தில்லி-110019
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.



TS McCann/MM/2011 TM

விருந்தை பல செய்திட மில்க்மெய்ட்

நெஸ்லேயின் ஒரு தரமான தயாரிப்பு